# பெய்யெனப் பெய்யும்

## 1

ஜீப் இரக்கமின்றி அவள் உடலை தூக்கிப் பந்தாடியது. சாலையின் குண்டு குழி போதாதென்று நிமிடத்திற்கு நாலு வளைவுகள். உடல் சரிந்து, சாய்ந்து தள்ளாடினாலும் கண் முழுக்கக் குளிர்ச்சி.

'பண்ணைக்காடு' -ஊரின் பேருக்கேற்ப காட்டின் அடர்த்தியில் பண்ணைகள். ஒடுங்கிய சாலைகளில் யார் யார் வருகிறார் என்று ஆர்வமாய் காற்றில் தேக்கு, பாக்கு, பலா மரங்கள். பலவற்றின் உடம்பு முழுக்க மிளகுக் கொடிகளின் படர்வு. ஒவ்வொன்றின் இலையும் யாரோ மெனக் கெட்டு நீவிக்கழுவிவிட்ட பளபளப்பில், ஆனால் அதிக நேரம் கண் திறந்து ரசிக்க முடியவில்லை, அவளால்- கிறக்கியது.

அதிகாலையில் ரெயில் நிலையத்தில் 'பாண்டிய'னில் வந்திறங்கிய கையோடு பிளாஸ்டிக் குவளையில் பருகிய ஒரு

காபிதான். மீண்டும் மீண்டுமாய் சூடு படுத்தப்பட்டு திகட்டலான அதை இப்போது நினைத்தாலும் குமட்டியது.

'பூம் பூம்', எதிரே வந்த லாரி கர்ணகரமாய் அலற, இவளது ஜீப் சாலையோரம் ஒண்டியது.

"ஐயோ... போதும்... பார்த்து கீழே..."

சரிந்த பள்ளத்தைப் பார்க்கத் துணியாமல் விழி மூடினாள்.

"ஒண்ணுமாகாதும்மா. பல ஆண்டு அனுபவம் நமக்கு. நம்ம தோட்டத்து அன்னாச்சி, பப்பாளி, சாத்துக்குடிதான் லாரியிலே கீழிறங்குது" என்றார், ஓட்டுநர்.

'நாமும் கீழிறங்கப் போகிறோம் உருண்டு' தனக்குள் முணங்கியவள் அச்சத்தில் ஒடுங்கினாள்.

அங்குலம் அங்குலமாய் இரு வாகனங்களும் ஒன்றை ஒன்று கடந்தன.

உடம்பைத் தளரவிட்டாள்.

சென்ற வாரம்வரை உயிரை மாய்த்துக்கொள்ளலாமா? 'சரி' என்றால் எப்படி என்ற ஆராய்ச்சியில் மறுகியவளுக்கு அதற்குள் உயிர் வெல்லக்கட்டியாகிவிட்டதே!

'ஐயோ என் கண்ணே... போயிட்டியா' என்று மோதிக்கதற யாருமே இல்லாத தனக்கும் உயிர்மேல் ஆசைதான் என்ற உண்மை உறைக்க அவளுக்குள் ஒரு நிம்மதி.

இந்த பிரபஞ்சத்தில் ஒவ்வொரு வாழ்வும் சிறு அணு, புள்ளி. அதையும் அவசரப்பட்டு அழித்துக் கொள்வானேன்? வாழ்ந்து பார்ப்பது என்ற குட்டி வைராக்கியம் உள்ளே கருவாய் நெளிந்து அதை உணர்ந்த ஆசுவாசம்.

உள்ளே வந்த தெளிச்சி உடலில் இல்லை. பசி வயிற்றோடு தலையையும் கிள்ளியதில் மயக்கம் செருகியது.



'கலீங் கலீங்' இரும்பின் மோதலில் அரைக் கண் திறந்தாள். கருநீல கிரில் கேட்டுகள் விரிந்தன. இடையே குரோமிய பூக்கள் மின்னிய புதுமாதிரியான கேட் வாசல் அமைப்பை விழிவிரித்துப் பார்க்கையில் முழுவிழிப்பு வந்துவிட்டது.

"வீடு... முதலாளி வீடு வந்தாச்சா?"

"இது வெளி கேட்டு. வீடு வர இன்னும் பத்து நிமிடமாகும்."

ஜீப்பை உள்ளேவிட்டு மீண்டும் 'கேட்' சாத்திவிட்டு வந்த ஓட்டுநர் பெருமையாய்ச் சொன்னார்.

'ஆக்சிலேட்'டரை அழுத்த இதுவரை இருந்த பாதையின் தரம் மாறி பயணம் சுகமானது.

"வெளியே சாலை ரொம்ப மோசமா இருந்ததே..."

"அப்படித்தாம்மா... கொடைக்கானலிலேயே ரோடு மோசம்தான். எத்தனை டூரிஸ்டு? இந்தியா முழுக்க இருந்து செலவு பண்ணிக்கிட்டு 'கொடைக்கானல்' பார்க்கணும்னு வருதுங்க. நம்ம ஊரை எப்படி வைச்சு அசத்தணும்? மலையிலே ஏறி வரவிட்டே அதுங்களுக்கு அலுத்திடும். ஊருக்குள்ளேயும் அப்படித்தான். கோமணத் துணியைப் பரத்தினாப்பல ரோடு. ரெண்டுபக்கமும் அரையடி பள்ளம். ரெண்டு வீலு மேலேயும் ரெண்டு கீழேயுமா ஸ்டைலா ஓட்டிப் போகணும்!"

"ஆனாலும் வருசம் முழுக்க கூட்டம்றாங்க? ஸ்டேசன்ல போர்ட்டருங்க பேச்சு."

"ஊரு அழகு அப்படி. சாந்தமான ஜனங்க. வர்றவன் அத்தினி பேருக்கும் அங்கே ஒரு வீடு வாங்கிரணும்கிற ஆசை வந்திடுதுல்ல? அங்கேயே ரோடு அவ்வளவுதான்னா பாதி மாலையில் இருக்கிற நம்ப ஊரு வெறும் எஸ்டேட் ஏக்கரா கணக்கிலே காபி, வாசனை சாமானுங்க, பழம் விளையற தோட்டங்க, பத்து மைலுக்கு ஒரு வீடு ஆனா நம்பது மாளிகைத்தான்."

"ஆம்...ம்..."

பேச்சு சுவையும் இதமான பயணத்தாலும் சற்றே கண்ணயர்ந்தாலும் தற்போது தலைதெறிக்கவில்லை. வலப்புறம் நின்ற கல்சுவர் எங்கும் கொத்து கொத்தாய் கொடி ரோஜா கலவையான நறுமணமும் கூடவே வந்தது.

பஞ்சு மேகக்கூட்டங்கள் கீழிறங்கி வந்தாற்போன்ற பிரமை இல்லை. தான்தான் மேலே இறங்கியிருக்கிறோம் என்ற உண்மையில் லேசாய் புன்னகைத்தாள்.

அதே கணம் கடைசி வளைவு திரும்ப, அந்த மாளிகை திடீரென கண்முன் வந்தது. 'பளீர்...' நீலவானப் பின்னணியில் ஓர் அழகிய போட்டோ ஸ்டில் போல...

"ஹோ...!" அவளறியாமல் கைகள் இரண்டும் கன்னங்களில் பதிய வாய் ஓசையின்றி திறந்தது.

"அதாங்க பங்களா..."

"ம்ம்..."

'அற்புதமாயிருக்கு' என்றிருக்கவேண்டியது. ஆனால் இங்கு வேலைக்கு வந்திருப்பவள் அப்படி விமர்சிப்பது அதிகப் பிரசங்கித்தனம்.

பழுப்பும் பாலாடை நிறத்திலுமாய் வர்ணம் பூசிக் கொண்டிருந்த அவ்வீடு மிகப் பிரமாண்டம்தான். அவற்றின் ஆறடி உயர கண்ணாடி ஜன்னல்கள் பல காலைச் சூரியனில் பளபளத்தன. ஒவ்வொரு ஜன்னலின் மீதும் குடை விரித்தாற் போல சிகப்பு செங்கல் அமைப்பு. பக்கத்திற்கொன்றான அரைவட்ட பால்கனியில் நுணுக்கமான கிரில் வேலைப் பாடுள்ள விளிம்புகள். வீட்டு அமைப்பைத் தூக்கி காட்டுவதற் கென்றே சுற்றிலும் மரகதப் புல்வெளி. பாத்திகள் சிகப்பு சால்வியா மலர்கள். சற்றுத் தள்ளி ஜோடியாய் செண்பக மரங்கள்... அதான் வாசனை வாசல் வரை...



அகல முன் போர்டிகோவில் ஒருங்கே நான்கு பென்ஸ் கார்கள் நிற்கலாம். அதைத் தாண்டி மீண்டும் விஸ்தாரப் புல்வெளி அதன் நடுநடுவே ரோஜாச் செடிகள், பால்முட்டை விளக்குகளுடனான பளிங்குத் தூண்களுமாய்..

'கடவுளுக்கும் கருணை இருக்கிறது'- இப்படித்தான் அவளால் நினைக்க முடிந்தது. வாழ்வின் முழு இருபது ஆண்டுகளை வடபழனி சந்தில் கழித்தவளுக்கு இப்படி அரண்மனை வாசம் பண்ணவும் ஒரு சந்தர்ப்பம்.

அதுவும்- 'இனி வாழ்ந்து என்ன- யாருக்காய்? எல்லாம் போதும்-பயமாயிருக்கிறதே' என்று மனம் மறுகிய வேளையில் இப்படி ஒரு திருப்பம்... மாற்றம்!

உணர்வு பெருகி நெஞ்சு அடைத்தது.

காக்கி உறை நைந்து கிழிந்த அவளுடைய பெட்டியை இறக்கிய ஓட்டுனர் வாசல் மணி அடித்தான். ஒலித்த வித்தியாசமான மணி ஒலி அவளைக் கவர்ந்தது- அப்போது தான் மணியைக் கவனித்தாள்-வாசலில் மரச் சட்டத்தினுள் வெண்கலமணி ஒன்று பட்டுக் கயிறுடன் அசைந்ததை.

"கலை அம்சமான வீடு..." தனை மறந்து பாராட்டினாள். 'ஆமாங்க. ஐயா ரங்கூன்ல இருந்தவங்க. இந்த வீட்டுக்கான தேக்கும் தோதகத்தியும் அங்கிருந்து வந்துச்சாம்..'

"ஓஹோ?"

மேலுக்குப் புன்னகைத்தாலும் மனம் படபடக்க. விசாலமான அக்கதவுகள் திறக்க காத்து நின்றாள். டென்னிஸ் பந்தளவு துருத்தி நின்ற சிங்கமுக பித்தளை கைப்பிடி திருகியபோது, அவள் மனதையும் யாரோ பற்றி திருகினாற் போன்ற வினோத அவஸ்தை.

மாயலோகம் போல திறந்த வீடு அவளை ஈர்த்தது.

மின்னிய ஜோடி தேக்கு கதவில் ஒன்று மட்டும் விரிய, அதன் பின்னே இருந்தவள் ஒரு பெண். எளிய பருத்தி நைட்டி தான். பொட்டு நகையில்லை. ஆனாலும் பார்த்தமாத்திரத்தில் அவள் வீட்டின் எஜமானி என்பது புரிந்தது.

"வணக்கங்க!" கை குவித்தாள்.

பதிலுக்கு சின்ன தலை அசைவு. தோள்வரையே எட்டிய சுருள் முடிக் கற்றைகள் கூடவே அசைய, இடது கையால் கோதினாள். மோதிர விரலில் பட்டாணி அளவிலான வைரம் பரிகாசமாய் சிரித்தது.

"வசுந்தரா?"

"ஆமா மேடம்."

"வாங்க டிரைவர், கீழே ரெண்டாம் நம்பர் ரூம்."

"சரிங்கம்மா..."

அவள் உள்ளே நடக்க, இவள் பின்தொடர்வதா இல்லை நிற்பதா என்று குழம்பிய போது-

"மலையேறினா ரொம்ப அசத்தும். படுத்து எழுந்து குளிச்சுட்டு வாங்களேன்- பேசலாம்." என்றாள் எஜமானி.

நன்றியோடு தலையசைத்து விட்டு நகர்ந்தாள்.

"இந்த நடைபாதை இருமருங்கும் இங்கு வேலை பார்க்கிறவங்க அறைகள்தான் அம்மா. இப்போது அதிகம் பேர் இல்லை. இருக்கிறவங்களுக்கு அவுட்-அவுஸ் தான். இப்போ நீங்க மட்டுந்தான். கடைசி அறையில் சமையல்காரம்மா வரட்டுமா..."

அந்த அறை சுத்தமாகத் தெரிந்தாலும் புழுக்கவாடை. 'பட்பட்' என்று சன்னல்களை திறந்து வைத்தவுடன் சிலுசிலுப்பாய் காற்று நுழைந்து மோதியது.



முகம் கழுவிப் படுத்த போது காலிவயிற்றில் 'எனக்கு?' என்ற உறுமலான கேள்வி.

கரிசனையுள்ளவர்கள் தான். ஆனாலும் பொதுவாக பணக்காரர்களுக்குப் பசி புரியாது. கவிழ்ந்து படுத்தாள். பசி. காலி வயிறு காந்தியது. விரல்களில் நடுக்கம்.

"திறப்பா..."

"யாரது கதவைத் தட்டுவது?" ஓடிப்போய் திறந்தாள்.

"தோசை கொண்டாந்தேன். இனி சமையல் அறைக்கே வந்திடுப்பா-கடைசி அறை..."

அகன்ற மரத்தட்டுடன் நின்ற பெண்மணியிடம் புன்னகை இல்லாவிடினும் பரிவான முகந்தான்.

"சரிங்கம்மா... நன்றி...".

"மணி பதினொண்ணு ஆச்சே. காலை சாம்பார் சட்னி எல்லாம் காலி. மதியத்துக்கு தயாரான வத்தக் குழம்பு இது. தோசை ஊத்தி எடுத்திட்டு வந்தேன்."

சாப்பிட்ட பிறகு தனிபலம் வந்தாற்போலிருந்தது.

சற்றுமுன் தான் நினைத்ததற்காக எஜமானியிடம் தனக்குள்ளேயே மன்னிப்பு கோரினாள், வசுந்தரா.

இவள் மட்டும் என்றில்லை. பணம் படைத்தவர்கள் என்றால் கஷ்டம் புரியாதவர்கள் என்று நினைப்பது இல்லாதவர்களின் வாடிக்கை.

அம்மா இருந்தவரை இத்தனை, பசிக்க விடமாட்டாள்.

"சாப்பிடு... ஒருவாய் சாப்பிட்டுட்டு படுமா வசு..." நைப்பாள். இப்படி திடீரென மரணம் தாயைப் பிரித்தெடுக்கும் என்று யார் நினைத்தார்? இருந்த ஒரே சொந்தம் அவள்தான்.

இவளுக்கு விவரம் தெரிந்த பருவத்தில்தான் அப்பா பற்றிய விபரம் கிடைத்தது.

அன்று டி.வி.யில் பழைய படம். பார்க்க பலர் கோகிலாக்கா வீட்டில் கூடியிருந்தார்கள்.

கூடின அனைவருக்கும் வெற்றிலை பாக்கு உபசரனை. அக்காவிற்கு சதா வெற்றிலை மெல்ல வேண்டும்- ஆக வருபவர்களுக்கு அது உண்டு!

கோகிலாக்கா அம்மாவைக் கேட்டாள்-

"மகி. அந்த வளைகாப்பு டான்ஸ்ல நீயும் இருக்கேல்ல?"

"ஆமாக்கா. ஒரு பிரேம்ல தலை தெரிஞ்சாலும் நமக்கு மறக்குமா?"

குரூப் டான்சில் பாவாடை தாவணியுடன் அம்மா அழகாய் கும்மி தட்டி சுழன்றாடினாள்.

"அம்மா! உன்னளவு எனக்கு இடுப்பு அழகில்ல" இவள் குறைபடுவாள்.

"உனக்கு உயரம் கம்மி. வளத்தியானவங்களும் உடம்பு உருவுனாப்பல அமையும்."

"அப்பா அதிக உயரம் இல்லையோ?"

சட்டென்று மகள் கேட்டதும் அம்மாவின் முகம் கறுத்தது.

"உம்... மன்னிச்சுரும்மா."

"பரவாயில்லடி. இப்ப உனக்கும் விவரம் தெரியற வயசாயாச்சு. அப்பா பேச்சை மட்டும் எடுக்காதேன்னு எத்தனை நாளுதான் உன் வாயை அடைக்கிறது? வீட்டுக்குப் போய் சொல்றேன்..."

"உம்... உன் ஆட்டந்தான் முடிஞ்சிருச்சே... நான் வீட்டுக்கு போகவாம்மா? கட்டுரை ஒண்ணு எழுதணும்."



"கடைசிக் காட்சியிலும் வருவேன் வசு. மணப் பெண்ணுக்கு அலங்காரம் செய்யறப்போ ஒரு வசனம் கூட எனக்கு உண்டு."

"வளைகாப்பே முடிஞ்சிருச்சு. இனி என்ன கல்யாணம்?"

"இது மூத்தவளுக்கு திருமணம்" கதாநாயகிக்கு. அம்மா சிரித்தபோது அவளது தெற்றுப்பல்லும் மூக்குத்தியும் சேர்ந்து மின்னின.

கடையில் வாங்கிய ஆமை வடை பொட்டலத்தைப் பிரித்து வைத்த அம்மா சூடான பாலும் சோறுமாய் உட்கார்ந்தாள். இருவருக்கும் பிடித்தமான இரவு சாப்பாடு இதுதான்.

"வளைகாப்பு மூடிஞ்சா கல்யாணம்னு கேட்டியேடி? என் வாழ்க்கையில் அது கூட இல்லை. நீ பிறந்த பிறகும் கூட தாலி கட்டிக்கலை நான்."

அம்மா சுவரில் சாய்ந்து கவளம் உருட்டிப் போட்டுக் கொள்ள இவளுக்கு விக்கியது!

## 2

**தா**ய் தாலிகட்டிக் கொள்ளவில்லை என்றதும் மகளுக்கு விக்கியது.

"என்ன... ஏம்மா?"

"அவரு கட்டலை. என்னைப் பெத்தவங்க டில்லியில்... வரட்டும். பிறகு நம் திருமணம்னார். இங்கே குடும்பம் நடந்திட்டிருந்தது நீ வயத்திலே வந்தாச்சு. பிறகுதான் அங்கே டெல்லியில் அவருக்கு பெண்டாட்டியும் இருக்கிறது தெரிஞ்சது.. ம்ப்ச்... அந்தப் பாவம் நமக்கு வேணாம்டின்னு ஒதுங்கியாச்சு."

அமைதியாய் சாப்பிட்டு முடித்து, கழுவி படுத்தபோது முழுக் கதையும் கிடைத்தது. அவள் உருவான கதை.

"இப்ப பார்த்த படத்தில் கூட காமிரா அவருதான். அவர்தான் உங்கப்பா..."

பெயர் சொல்லி "அவரா" என்று கூவினாள்!

"அப்ப எங்களுக்குள்ள நல்ல பழக்கமாயிடுச்சு. அதான் அடிக்கடி எனக்கு குளோஸ்-அப் காட்சி கிடைத்தது. தவிர கடைசிக் காட்சி வசனம் வாங்கித் தந்ததும் அவருதான்."

"வசனம் வாங்கித் தந்தவர் உங்கள் வாழ்வில் நிம்மதி, மரியாதை தரவில்லையேம்மா" என்ற வசனம் இவள் மனதுக்குள் ஓடியது.

மடைதிறந்ததுக்குப்பின் அப்பா பற்றி அம்மா பலதும் சொன்னாள்.

அதுவரை தனக்கும் வெள்ளித்திரை உலகம்தான் என்ற ஒரு நிச்சயிப்பு, மமதைக் கனவு வசுந்தராவிற்கு. அந்தத் துறையில், பலர் திரையில் மட்டுமல்லாது வாழ்விலும் சதா வேடம் கட்டுபவர்கள் என்று கேட்டு, புரிந்தபிறகு வந்த ஆத்திரத்தில் இவள் தன் கனவுகளை ஆவேசமாய் சிதைத்துக் கொண்டாள்.

திரைஉலகம் தனக்கும் சோறு போடக்கூடும் என்ற எண்ணம் இருந்தாலும் அரிதாரம் பூசி ஆடுவதில் அவளுக்கு விருப்பமில்லை.

'பள்ளிக் கட்டணம் வசுந்தரா இன்னும் கட்டவில்லை. இன்று மாலைக்குள் கட்டினால்தான் நீ நாளை பரீட்சை எழுதலாம்' என்று பள்ளியில் கறாராய் சொன்னபோது. இவள் படப்பிடிப்பு தளத்திற்கு ஓடியிருக்கிறாள்.



காலையிலேயே கடை ஆப்பம் வாங்கிச் சாப்பிட்டு, இரண்டை பள்ளிக்கும் கட்டிப் போகச் சொல்லி காசு தந்த அம்மா-

"ரெயிலுவே கிராசிங் பக்கத்தில நீலநிற பங்களா ஒண்ணிருக்குமே, அங்கேதான் இன்னைக்கு படப்பிடிப்பு?" என்றிருந்தாள்.

பெரும்பாலான நாட்கள் வெளியே அம்மா அதிகாலை இருட்டோடு கிளம்பி விடுவாள். யூனிட் வாகனம் வெளியே ஒலி எழுப்ப, இவள் நெற்றியில் அவசரமாய் முத்தமிட்டுவிட்டு ஓடுவாள். தாயின் காலடி ஓசை தேயும் வரை, தலையணையிலிருந்த தன் தலையை தரையில் அழுத்திக் கேட்டிருப்பாள், இவள்.

இரவு அம்மா தளர்ந்து திரும்பும்போது வீட்டில் வெந்நீர் தயாராக இருக்கும். தேங்காய் என்ணெய் புட்டியை நீட்டுவாள்.

அரைகுறையாய் துடைக்கப்பட்ட மீதி பான் கேக்கை எண்ணெய் தடவி ஈரத்துணி கொண்டு அழுந்தத் துடைத்த பின், குளித்துவரும் அம்மாவிற்கு சாப்பாடு சூடுசெய்து பரிமாறுவாள்.

'கஷ்டம் உணர்ந்த குழந்தைடீ நீ...' தாயின் குரல் குழையும்.

'நீங்களும் யாருக்காக கஷ்டப்படுறீங்க... எனக்காகத் தானே?'

இரவு சந்தனசோப் மணக்கும் அம்மாவைக் கட்டிக் கொண்டு படுக்கும்போது வரும் நிம்மதி தனி.

அதனால்தான் அவள் குருராஜைப் பொருட்படுத்த வில்லை. வெறும் குரைக்கிற நாய் என்று அவனை அலட்சியப் படுத்தினாள்.

அம்மாவையும் பயங்காட்டவில்லை.

நெருக்கமாய் பல குடித்தனங்கள் உள்ள தெருவில் பயமில்லை. அதிலும் அனைவரும் ஒரே தொழில் என்பதால் சிறுமுறைப்புகள் இருந்தாலும் நெருக்கம் அதிகம். பதறி உதவும் பரிவு உண்டு.

அன்று பதினோராம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்த வசுந்தரா, நீலநிற பங்களா நோக்கி ஓடினாள். ஜெனரேட்டர் சத்தம், வாய் பிளந்து பார்க்கும் கூட்டம். ரிப்ளெக்டர்கள் இடையே நுழைந்து விசாரித்து அம்மாவின் இருப்பிடம் அடைந்தாள். வீட்டின் பின்புறம் காற்றும் வெளிச்சமும் அதிகம் கிடைக்காத சிறு அறை ஒன்றில்தான் துண்டுவேட நடிகைகளின் ஒப்பனை.

மேலாடையை முழுக்க விலக்கி, இரவிக்கையின் முதல் இரண்டு கொக்கிகளைத் தளர்த்தி நாற்காலியில் சாய்ந்திருந்தாள் அம்மா. இயந்திரத்தனமாய்தான் ஒப்பனை செய்பவரின் கைகள் அங்கெல்லாம் தீண்டித்தடவின என்றாலும் இவள் குறுகிப் போனாள். சுற்றிலுமிருந்த சில பெண்கள் அநாவசிய மறைப்பு தேடாமல் சேலையோ இரவிக்கையோ மாற்றினர்.

"விஜிக்கா... நடுமுதுகில் மச்சமிருக்கே... கிரீம் பூசி மறைச்சுடவா?" ஒப்பனைக்காரப் பையன் கேட்க,

"ராசி மச்சம் பயலே அது தொடப்படாது" என்றபடி இறுகிய ரவிக்கை கொக்கிகளை போட்டுவிட்டு சுவாதீனமாய் திரும்பினாள் விஜயா.

வசுந்தரா தலைகுனிந்தாள்.

"அடடே, வசுவா? எங்கே வந்தே...யக்கா யாரு பாரு..."

அம்மா இவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டாலும் அவசரமாய் துண்டு ஒன்றை நெஞ்சில் போட்டுக்கொண்டாள்.



"என்னடீ வசு...?"

"பள்ளிக் கட்டணம் கட்ட இன்னைக்குத்தான் கடைசி தேதிம்மா... மறந்துட்டேன்" முணங்கினாள்.

"எவ்வளவு?"

"என்ன மறதி உனக்கு..."

"மறந்தா இப்ப என்ன? பிள்ளைய இதுக்காகவா இப்படி வெயில்ல அலைய விடறதா? நல்ல ஸ்கூலு..."

இப்படிப் பேச்சோடு நான், நீ என்று ஐந்தாம் நிமிடம் பல இரவிக்கைக்குள், பர்சுக்குள் கிடந்த பணச்சுருள்கள் இவளிடம் கொத்தாய் மடித்து நீட்டப்பட்டன.

"நன்றி..."

"யப்பா... பெரியவளாட்டம் பேச்சப் பாரு. நாங்கள் பார்க்க வளர்ந்த பொண்ணுடீ நீ..."

"நல்லாப் படிச்சு 'டாக்கு டாக்கு'ன்னு ஆபீஸ் போ போதும்..."

மறைமுகமாய் உனக்கு இந்தத் தொழில் வேண்டாம் என்கிறார்களோ?

தொழில்முறை விருப்பம் இல்லாவிட்டாலும், அங்கு மணத்த கலை பிடித்திருந்தது. பார்வை, பேச்சு, உறவுகளின் விகாரம்., விவகாரங்களை மீறிய கலை இவளுக்குத் தெரிந்திருந்தது. கலையில் மென்மைப்பட்ட மனங்களின் இளகல், இதம் ரசிக்கக் கூடியதாயிருந்தது.

அதே சமயம் கலைஞர்களுக்கு உலக வாழ்வு நியதி சற்று அந்நியப்பட்டிருந்ததும் புரிந்தது. வெளிமனிதர்கள் பலர் பார்த்து முகம் சுளித்து விமர்சிக்கும் வாழ்வை இவர்கள் வாழ்வதற்கும் அதுவே காரணமாய் இருக்கலாம்.

ஆனால் டேக் 7, டேக் 8 என்று போகப் போக அதே போல இடுப்பைச் சுழட்டி முகத்தை இடதுபுறமாய் ஒடித்து வலப்புறம் நாயகன் முகர்ந்து உரச இடம் தரும் நாயகியாய் தன்னை கற்பனை செய்ய மனம் வரவில்லை கூசியது.

இவள் அழகிற்கு கொஞ்சம் முண்டினால் வெள்ளித் திரையின் உள்ளே நுழைத்து விடலாம். சிலர் கேட்டும் வந்தனர்.

ஆனால், ரோமாபுரியில், ரோமனாகவே இரு என்றொரு சொல்லடை உண்டே. இங்கு, கூச்சத்தைத் துடைத்தெறிந்து விட்டுத் தான் அரிதாரம் பூசிக்கொள்ள வேண்டும். இத்தனை பேர் நடுவே மேலாடை இன்றி வெகு இயல்பாய் இருந்த அம்மா, மகளைக் கண்டதும் தானேபதறி போர்த்திக் கொண்டாள். இந்த உலகம் இப்படி.

'டாக்கு டாக்' என்று தான் அலுவலகம் போனால் அந்த வேலையில் மட்டும் தொந்தரவுகள் இல்லாமல் போகுமா? நிச்சயம் இருக்கும். ஆனால் தண்ணிக்கு வந்த, பிறகு நீஞ்ச மாட்டேங்கறியே? என்று யாரும் தன்னை பழி கூற முடியாது.

'நான் வந்தது இன்னின்ன வேலைக்கு. அதைப் பார்த்துட்டுக் கிளம்பறேன்' என்று 'கறார்' பேசலாம். சமாளிக்க சற்று துணிவிருந்தால் போதும்.

ஆனால் துணிவு... அம்மா இறந்தவுடன் அது போன இடம் தெரியவில்லை.

அம்மாவிற்கு மரணம் இத்தனை விரைவாய் எளிதாய் வரும் என்று யார் எதிர்பார்த்தார்கள்?

ஒருநாள் கூட உடல்பயிற்சி செய்யாமலிருந்தது இல்லை அவள். அதை 'கசரத்' என்பாள்.

"சினிமாக்காரங்களுக்கு உடம்புதான்டி மூலதனம்" என்றபடி மூச்சுவாங்க குனிந்து நிமிருவாள்.



"ஷோ வியாபாரந்தானே? உடம்பு 'சிக்'கென இருக்கணும். என்ன வசு சிரிக்கறே?"

"இல்ல... கஜபதி சார் உடம்பு நினைவுக்கு வருது. பேருக்கேத்தது போல யானைத் தந்தம்தான்."

"அவரு டைரக்டர். உட்கார்ந்து மூளை கசக்கிட்டாப் போதும். மூளைக்கு கசரத் தரணும் அவங்க. பேப்பரும் கையுமா அலையுற உதவியாளர்களுக்கும் மண்டை கனக்கணும். நமக்கு உடம்பு கனக்காமல் இருக்கணும்."

அம்மாவிற்கு இயல்பாகவே நல்ல உடம்பு. ஐந்தரை அடி உயரத்திற்கு நெளிவு வளைவான கொடி உடம்பு. ஆனால் அதை அப்படியே பாதுகாத்துக்கொண்டது அவள் திறமை. படுப்பதற்கு முன், நின்ற இடத்திலேயே கயிறு இல்லாமல் 'ஸ்கிப்பிங்' குதிப்பாள்.

"நாளைக்குப் போய் ஒரு ஸ்கிப்பிங் கயிறு வாங்கி வரேம்மா."

"இல்லை. வீட்டுக் கூரையிலே கயிறு இடிக்கும். அந்த சோகை மஞ்ச பல்பையும் இழுத்துப் போட்ரும்... எது முக்கியம்? உடம்பு குலுங்க குதிக்கிறதா இல்ல கயிறா?" மூச்சிரைக்க பதில் வரும்!

ஆனால் அந்த உடல் வனப்பும் அவள் சாவிற்கு ஒரு மறைமுகக் காரணம்.

'குளத்தில் குளிச்சிட்டு குடத்தோட நடக்கிற காட்சி. தலகாணி மாதிரி உப்பினதுங்க வேணாம்' என்று கவனமாய் தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வரில் அம்மாவும் ஒருத்தி.

அது காற்றுக் காலம். நாள் முழுக்க அழுக்கு குளத்திற் குள்ளும், நனைந்த உடையிலுமாய் படப்பிடிப்பு. அன்று தொடங்கிய சுவாசக் கோளாறு, விரைவில் சுவாசத்தையே நிறுத்துமளவு எப்படி விசுவரூபமானது?

வசுந்தரா நிலைகுலைந்தாள். அலறி அழக்கூட முடியாத அதிர்ச்சி.

“அழுதுடுடீ” என்று அண்டை அயல் அக்காமார் தேற்றி அதட்டியபோது விம்மினாள். நாளாக ஆக வெறுமை வெகு விகாரமாய் தெரிந்தது. அவ்வப்போது ஒருவர் மாற்றி ஒருவர் எட்டிப் பார்ப்பார்கள். ஆனால் எல்லோருக்கும் அவசர கதி வாழ்வுதானே. அதிகாலை ‘ஹாரன்’ ஒலித்ததும் ஓடி. ஆடி. களைத்து வீடு வந்தால்தான் வயிறுகள் நிரம்பும்.

தாயற்ற சூன்யத்தை மறக்க இவள் அதே தெருவில் இருந்த அம்மாவின் சிநேகிதிகள் ஐந்து. ஆறு பேருக்காக சமைக்கத் தொடங்கினாள். பள்ளி முடிந்த கையோடு காய்கறிகள் வாங்கி வருவாள்.

வெளி அடுப்பில் நீர் கொதிக்கும். வீடு திரும்புகிறவர்கள் ஆளுக்கு ஒரு வாளியோடு வந்து. வெந்நீர் எடுத்துப் போவார்கள்.

‘எனக்கு சுகமடி இது’ என்று இவளுக்கு ஒரு பாராட்டுடன். தட்டுடன் வந்து தயாராக இருப்பதை தாங்களே இருப்பதை தாங்களே வேண்டிய அளவு பரிமாறிக் கொண்டு. சாப்பிட்டு. தட்டுடன் போய்விட வேண்டும்.

அவர்கள் செலவுக்காக என்று தந்த பணத்தில் செலவு போக தாராளமாய் அவள் கையில் மீந்து நின்றது படிப்பிற்கு உதவியது. நடுத்தர வயதில் யாருமற்று நின்ற அவர்களுக்கும் இது பெரும் ஒத்தாசை.

அதில் இருவருக்கு பிள்ளைகள் உண்டு. ஆனால் படிப்பிற்கு இந்த வாழ்க்கை சரிப்படாது என்று ஊரில் விட்டிருந்தார்கள்.

இங்க வைச்சிருந்தா நம்ம குருராஜைப் போல கோயிலு மாடாத் திரியும்.



பள்ளிப் படிப்பை முடிக்காமல் பிஞ்சிலேயே வெதும்பிய குரு... இவள் வாழ்வையும் வெதும்ப செய்து விட்டானே!

கல்லூரியில் இரண்டாம் ஆண்டு இவள் படித்திருந்த சமயம். மறுநாள் தேர்வு என்று வெகுநேரம் படித்துவிட்டு உறங்கிய வளுக்கு இடையே விழிப்பு கண்டது.

முன்பிருந்த அசந்த உறக்கம் இப்போதில்லை. எழுந்து... இனி சந்தன சோப் மணக்கும் அம்மா இல்லை என்பதை உணர்ந்து இரு சொட்டு கண்ணீர்விட்டு மீண்டும் கண்கள் செருகும்வரைப் புரண்டு–

அக்காமார் அனைவரும் வற்புறுத்தினார்கள்– “தனியாப் படுக்க வேணாம்டீ... எழுந்ததும் ‘பக்’குன்னும். துர்சொப்பனம் கண்டேன்னு வை. ஒரு வாய் தண்ணி கேக்கக்கூட ஆளிருக் காதுல்ல... இங்கே வந்துரு...?”

“ஏன் வெட்கப்படறே? நான் வேணுமானா அங்கே வந்து படுத்துக்கட்டா?”

“இல்லக்கா... நான் கொஞ்சம் கண்ணுமுழிச்சு படிப்பேன். பரிட்சை சமயம் இல்லையா? நாள் முழுக்க வெயில்ல நின்னு களைச்சு வர்ற உங்களுக்குச் சிரமம்” என்று மறுத்து விட்டாள்.

சுவர்களை அலங்கரிக்கும் அம்மாவின் போட்டோக் களைப் பார்த்தபடி கண்செருகும் ஆறுதலாவது மிஞ்சட்டுமே.

இவளது தேர்வு நேரங்களில் அம்மா பரபரப்பாள் சாமி கும்பிடுவதும், “பார்த்துப்போ வசு. படிச்சதை நிதானமாய் யோசிச்சு எழுது.”

“தெளிவா புரியராப்பல எழுதுடீ என்றெல்லாம் முணுமுணுத்தபடி பரிமாறுவாள். அன்று படப்பிடிப்பிற்குப் போகவும் ஒத்துக்கொள்வதில்லை அம்மா. மாலை சூடான காப்பியும் நாயர் கடை பஜ்ஜியுமாய் தயாராய் வைத்து விழியை வாசலில் வைத்து காத்து நிற்பாள்.”

நினைப்பில்... 'மளுக்'கென்று விழி ஓரத்தைக் கீறிக் கொண்டு வழிந்தது கண்ணீர். நீர்த் திரையூடே தெரிந்தது அந்த உருவம்!

விழிகளை சிமிட்டித் தெளிவாக்கியவள் கூர்மையாய் நோக்கினாள். சன்னல் வழியே அவளையே பார்த்து நிற்பது யார்?"

அலறல் எழும்பவில்லை- ஏன் அசையக்கூட இயலாமல் விறைத்துப்போனாள்.

நிழலாய் நின்றது குருராஜன்தான்... எத்தனை நாளாய் இப்படி அவளுடைய சயன கோலத்தை வெறித்து வந்திருக்கிறான்?

## 3

உறக்கம் கலைந்தபோது ஒரு முழு நிமிடம் எங்கு இருக்கிறோம் என்பதே புரிபடவில்லை, வசுந்தராவிற்கு.

பிறகுதான் காலை ரெயிலில் 'கொடை ரோடு' வந்து இறங்கியது. கரணம் தப்பினால் மரணம் என்பதாயிருந்த கார் பயணம், வைர மோதிர எஜமானி தன் அம்மா... என்று நினைவுகள் கிளற பதட்டமாய் முழு விழிப்பு வந்தது.

இதென்ன வெளிச்சம் மங்கலாய் இருக்கிறது? திறந்த ஜன்னலின் வழியே குளிர் காற்று நுழைந்து அவளை வருடி கொஞ்சிச் சென்றது.

கடவுளே! எத்தனை மணி நேர உறக்கம்? எழுந்து குளியலறைக் குழாய்களைத் திறந்துவிட்டாள்.



ஒன்றிலிருந்து ஆவியாக கொதிநீர் வந்தது. கதவைத் தாளிட்டவள் சேலையைக் களைந்தெறிந்து மாற்று உடைகளைப் பெட்டியிலிருந்து உருவியபோது வெளியே கலகல' எனும் சிரிப்பொலி.

துவாலையால் தோள்களைப் போர்த்தியவள் சரிந்த ஜன்னல் வழியே பார்த்தாள். தொடைவரையே எட்டிய ஆடைகளுடன் இருவர் புல் வெளியில் 'ஷட்டில்' விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. இவளது அறை வீட்டின் பின்புறத்தில். இங்கு முழுக்க தோப்பாய் கனிமரங்கள். மேலும் விழி சுருக்கிப் பார்க்க விளையாடியவர்களில் ஒன்று முதலாளியம்மா... அடுத்த நபர் தெரியவில்லை. அவர் ஆண் என்பதைத் தவிர.

ஓசை எழாமல் சன்னல்களை மூடிக்கொண்டாள். அண்டாவில் ததும்பிய தண்ணீரில் அலுப்பு போக குளித்து துவட்டிக்கொண்டாள். இன்னும் மேற்கில் சூரிய ஒளி மிச்சமிருந்தது. வெளியே போனால் கூந்தலை உலரவிடலாம். வாசனைப் பவுடரை உடம்பெங்கும் தூவி தேய்த்து உடைகளை அணிந்தவள் மெல்ல வெளியே தலை நீட்டினாள். கடைசி அறை சமையலறை. அதற்கு அப்பால் இருந்த பழைய பிரமாண்டமான கதவைத் தாழ் விலக்கினாள். அது சற்று முரண்டு முணங்கியபடியே விரிந்தது. முன்பக்க வீட்டினை பழுது பார்த்து நவீனப்படுத்தியிருந்தவர்கள் பின்புறத்தை சட்டைசெய்து கொள்ளவில்லை போலும். வாசலைவிட்டு ஐந்தாறு படிகள் கீழிறங்கினாள்.

சாய்வாக இருந்தாலும் இளம் வெப்பத்தோடு கதிரவன் இன்னும் கண் திறந்துதான் இருந்தான். ஈரத் துவாலையை மரக்கிளை ஒன்றில் விரித்து காயப் போட்டவள் முடியைக் கோதி உதறலானாள்.

"அடடே ஏந்திரிச்சிட்டியாப்பா? இரு காபி கொண்டாரேன்...!" என்றார், சமையல்கார அம்மாள்.

"தெரியாம அசந்து தூங்கிட்டேம்மா..."

"நேத்து இரவும் ரெயில்ல சரியா தூங்கியிருக்கமாட்ட..."

"ஆமா... தனியாவரையிலே பயம்மாயிருக்கு!"

"வந்து சேர்ந்தேன்னு வீட்டுக்கு கடிதாசி போட்டுரு. இத்தனை அம்சமான பொண்ணை தனியே அனுப்பிட்டு பெத்தவங்களும் பொட்டுத் தூக்கமில்லாமத்தான் தவிச்சிருப்பாங்க."

நீட்டப்பட்ட காபியை வாங்கியவள் மவுனமாய் நின்றாள்.

"குடிம்மா..."

"இல்லை... எனக்கு ஊரிலே யாருமில்லை. தெரிஞ்சவங்க மட்டுந்தான். அதிலேயும் கோகிலா அக்காவுக்கு மட்டும்தான் நான் இந்த எஸ்டேட்டுக்குப் போறது தெரியும். வேற யாருகிட்டேயும் சொல்லிக்கலை...!"

"சரி காபியைக் குடி."

"நன்றிம்மா... ஐயோ இப்படி தூங்கிட்டமேன்னு பதறி ஏந்திரிச்சேன்."

"இதுக்கெல்லாம் இங்க யாரும் உன்னை வையப் போறதில்லை. நிம்மதியா தலையை ஆறப்போடு."

"என்ன வேலைன்னு தெரிஞ்சா இப்பவே தொடங்கிடுவேன்."

நாவில் காபி 'சுள்'ளென்று சுவைத்தது.

"தெரியலியே. உன்னை யார் வேலைக்கு சேர்த்துவுட்டது?"

"தினசரியிலே விளம்பரம் வந்ததும்மா. 'அவுஸ்-கீப்பர்' போல ஒரு இளம் பெண் வேலைக்குத் தேவைன்னு..."



"அப்படின்னா என்ன?"

"ம்ம்... வந்து இதுபோல பெரிய இடங்களிலே வீட்டுப் பெண்கள் செய்யற சராசரி வேலைதான். என்ன சமையல்னு தினம் பட்டியல் போட்டு, வீடு, தோட்டமெல்லாம் பராமரிச்சு 'பளிச்'சினு வைச்சு, படுக்கை விரிப்புகளை நாலு நாளுக்கொருதரம் மாற்றி- கறிகாய், மளிகை பட்டியல் போட்டு, விருந்தாளிங்க வந்தா, அதுக்கேற்றபடி சமைச்சு... பரிமாறி..."

"ஓகோ? இங்கே வீட்டில் நாலே பேரு. அதுக்கென்ன இத்தனை ஆர்ப்பாட்டம்?"

"குழந்தைங்க?"

வசுந்தராவிற்கு குழந்தைகள் பிடிக்கும். சுவையான சின்ன மனிதர்களாயிற்றே.

"சின்னய்யாவுக்கு கல்யாணம் ஆகி வருசம் அஞ்சு முடிஞ்சாச்சு. இன்னும் குழந்தைங்க இல்ல... முதலில் மூணு வருசம் பிள்ளை வேணாம்னு கட்டுப்பாடு செய்துக்கிட்டாங்க போல. பிறவும் பிறக்கலைங்கவும் பட்டணம் போய் வைத்தியம் பார்த்தாங்க. இனி கடவுள்தான் கண் திறக்கணும்."

கைகூப்பியவளின் முகத்தில் போலி பிராத்தனைத்தனம் இல்லை. மெய்யான ஆதங்கம்தான்.

"ம்ம... குழந்தைங்க இருந்தால் சதா வேலையும் இருக்கும் நான் அம்மாவைப் பார்த்துட்டு வந்துடறேம்மா. உடனே ஏதும் வேலை சொல்லலைன்னா இரவுச் சமையலுக்கு உங்களுக்கு ஒத்தாசை பண்றேன்."

கூந்தல் சற்று உலர்ந்திருந்தது.

சிக்கல் பிரித்து தளர்வாய் பின்னலிட்டாள். துளி பவுடர் பூசி புருவங்களுக்கிடையே சிறு கருப்புபொட்டை ஒட்டினாள். அவளுக்கு உதடுகள் இயல்பாகவே ரோஜா நிறம் தான்.

மஞ்சளில் கருப்புப் புள்ளிகள் இட்ட சேலை அவளுக்கு அம்சமாய் பொருந்தும். நல்ல உறக்கம், வேறு என்பதால் குளியலுக்குப் பின் அதில் அமர்க்களமாய் தெரிந்தாள்.

'அவுஸ்-கீப்பிங்' எனும் இவ்வேலை வசுந்தராவிற்குப் புதிது இல்லை. தன்னை அர்த்தசாமத்தில் குரு சன்னல் வழியே வெறிப்பதை அக்காமார் இருவரிடம் கோடிட்டு காட்டிவிட-

கோகிலாக்கா அவனை வார்த்தைகளாலேயே கிழித்து நாராக்க, கமலாக்காதான் யோசித்து மாற்று ஏற்பாடு செய்தாள்.

"கிரிஜாம்மா கேட்டுகினே இருந்தாங்க. படிச்ச, நாசுக்கான ஒரு பொண்ணு வேணும் கமலான்னு. 'நான் அடிக்கடி வெளியூர் படப்பிடிப்புக்கு போகவேண்டியிருக்கு. அங்கே இருந்து தினம் இராத்திரி வீட்டுக்குப் போன் போடுவேன். இவரு பிள்ளையைக் கூட்டினு எங்காவது போயிடுவாரு போல... என்னாச்சு ஏதுன்ற பயம். எட்டு, பத்து நாளு கழிச்சு அப்பாடா'ன்னு வீட்டுக்குப் போனா, அது வீடாவே இருக்காது. அலங்கோலந்தான்."

வீட்டுக்குப் பெரியவங்கன்னு பேருக்கு என் பெரியம்மா உண்டு-ஸ்தூல சரீரம். 'டக்'குனு எழுந்துக்க, நடக்க முடியாது. இராத்திரி சீக்கிரம் படுத்துக்கணும்ங்கற உடம்பு. நான் வீடு திரும்பற அன்னைக்கே இவர் 'பார்ட்டி'ன்னுவார். மத்தவங்க போல என் சம்பாத்தியத்தில சுகங்காணுறவர் இல்லையே. வியாபாரத்தில் நல்ல பெயர், லாபம். நாலு பேரை விருந்துக்கு அழைக்கத்தான் வேணும். எனக்குத்தான் முதுகு கழண்டுருது. யாராவது நல்ல பொண்ணிருந்தா வீடு சமத்தா நடக்கும். சமையல், மேல் வேலைக்கு ஆளிருக்கு. மேற் பார்வை பார்க்கணும். விருந்து. விசேஷம்ன்னா கைகொடுக்கணும்' இப்படின்னாங்க. நீ தோதுபடுவ வசு கேக்கட்டா?

"படிப்பு முடியணுமே அக்கா?"



"அது பாட்டுக்கு அது. இந்த வேலைய சாயங்காலமாப் பாரு. அங்கேயே தங்கிக்கலாம்."

"கல்லூரிக்குப் போய் வர சம்மதிப்பாங்களா?"

கிரிஜா மகிழ்ச்சியாய் சம்மதித்துவிட்டாள்.

"அடடே டான்சர் மகிபா பொண்ணா? எனக்கு அந்தக்கா பழக்கந்தான். உடம்ப என்னம்மா வைச்சிருந்தாங்க? ஆடி அலுத்த பிறகும் சாப்பாட்டை ஒருபிடி பிடிக்க மாட்டாங்க. ஒரு தம்ளர் மோர். பிறகு அளவாச் சோறு. அந்தக் காமிரா ஆளுகிட்ட விழலைன்னா... மேலே வந்திருக்கலாம். வீதி வீணாப்போச்சு. யாருமில்லைன்னு நினைக்காதம்மா. உன் வீடு இது. காவாலிப் பய தொந்தரவு ஏதும் இங்க இருக்காது. கூர்க்கா, மூணு டாபர்மென் நாய்ங்க... சரிதான்?"

கல்லூரிப் படிப்பின் இறுதி ஆண்டினை முடித்தது அங்கிருந்துதான். இவளுக்கு என்று ஒரு சின்ன அறை.

வேலை நிறையத்தான். வீடு நிறைய சதா ஆட்கள்.

வீட்டை நறுவிசாக வைத்துக்கொண்டாள்.

தோட்டம் கூட பச்சைப் பசுமையில்.

யாரும் போட ஒரு துணியையுங்காணலை என்று அலறித் தேட வேண்டியது இல்லாமல் பார்த்து கொண்டாள்.

பெரிய இடத்துச் சமையல் பழகினாள்.

பண்போடு உபசரிக்கத் தெரிந்தது.

கிரிஜாவிற்கு வெகு திருப்தி.

ஆனால் இவள் வாழ்க்கை இத்தனை சுமூகமாய் உருளுவது குருவிற்குப் பொறுக்கவில்லை.

"இவள் எங்க அத்தைப் பொண்ணு சார். அத்தை கண்ணு மூடறப்பகூட இவள் உனக்குத்தான்டான்னுச்சு... இவள் முதல்ல

படிப்பேன்னா. பிறவு வீட்ல தங்கமாட்டேன்னா. பொறுத்து கிட்டேன். இப்ப திருமணமும் வேண்டாம்னா முறையில்லையே? என்னை நம்பி ஒப்படைச்ச அந்த ஆத்மா சாந்தியாகணு மில்லை" என்று கிரிஜாவின் கணவரிடம் போய் நடிப்பு ஜாலமெல்லாம் காட்டினான்.

கிரிஜா ஊரிலில்லாத நேரம் அது. அவரும் கரிசனையுடன். 'என்னம்மா இது- உன் வாழ்வும் முக்கியமில்லையா' என்று ஆரம்பிக்க. இவள் மொத்த கதையும் சொல்ல வேண்டியதாயிற்று.

கெஞ்சிய குரு பிறகு மிஞ்சினான்.

"கடை. கண்ணிக்குப் போறதில்லை? உன்னை ஆள் வைச்சுக் கடத்திறேன்" என்று மிரட்டினான்.

ஒரு நாள் அவள் துணிக்கடைக்குப் போனபோது. கூடவே போய் உரசி சிலுமிஷம் செய்தான்.

"இதெல்லாம் இங்கே வேணாம்" என்று பரிந்துவந்த கடைசிப்பந்தியிடம். "போடா மவனே... துணிய அளந்தமா. கிளிச்சமான்னு இருக்கணும். மீறி பேசுன... வாயத் தைச்சிடு வேன். நான் பரிசம் போட்ட பொண்ணுபா. மஜாவா கடைக்கு வந்தோம். அது வாங்கும். நான் பில்லு கட்டுவேன். இதுல நீயென்ன குறுக்கால...?"

இவள் உடன் பணியாற்றியவர்களிடமும் கண்டதையும் சொல்லி வைக்க ஆளாளுக்கு வசுந்தராவிற்கு புத்தி சொன்னார்கள்

"பயலுக்கு படிப்பில்லன்னு நினைக்காதம்மா... நிரந்தர உத்தியோகம் ஏதோ சம்பாதிக்கறான். உம்மேல ஆசை வைச்சிருக்கான். ஒத்துப் போயிரு..."

இவளுக்குத் தெரியாதா அவனது ஆசை எம்மட்டும் என்று. ஒரு பிள்ளை பெற்று இவள் உடல் தொய்ந்ததும் அதுவும் சூம்பிப் போகும்.



"கால்கட்டு போட்ட பிறவு தான் பயலுகளுக்கு பொறுப்பு வரும்மா. ஏதேனும் வேலை அமையும். யோசிக்காதே..."

பரஸ்பர பிரியமும் மதிப்பும் வந்தபின் வேலை. படிப்பு. அழகு எதுவும் பொருட்டில்லை... ஆனால் இவனைப் பார்த்ததும் வெறுப்புதானே முட்டுகிறது.

கடைசியாய் அவன் குடித்துவிட்டு நடுரோட்டில் மண்ணெண்ணையில் குளித்து ஆடியதுதான் உச்சம்.

"வாடி வெளியில... கோடம்பாக்கச் சந்துல இருந்தப்ப நான் வேண்டியிருந்தது. இப்ப துரைதான் கேக்குதோ? ஒரு தீக்குச்சி தான். நான் எரிஞ்சப்பிறவு நீ செயிலுக்குள்ளேதான். கமிசனருக்கு எழுதியாச்சு. பொண்டாட்டி கைமாறுன துக்கத்துல தான் நான் எரிஞ்சுட்டேன்னு தெரு முழுக்க இப்ப தெரிஞ்சாச்சு. வர்றியா?"

கூர்க்கா துரத்தினான். டாபர்மென்கள் குரைத்தன. ஆனால் அவன் ஊளை நிற்கவில்லை.

மறுவாரம். பல பத்திரிகைகளின் 'கிசு கிசு' பகுதியில் இந்நிகழ்ச்சி அவரவர் தரத்திற்கேற்ப. திறமைக்கேற்ப அச்சேறி இருந்தது. ஆனால் நாயகி அவளல்ல... கிரிஜா!

சில ஆண்டுக்குமுன் முன்னணி நாயகர்களுக்கு இணையாகவும் தற்போது தாயாகவும் நடித்து வரும்'மலைமகள்' வீட்டில்- வீதியில் கலாட்டா!

முன்னாள் காதலன் இந்நாள். கணவரோடு மோதல்...! என்ற ரீதியில் போயின என்றால். வேறொரு பத்திரிகை இவளை கிரிஜாவின் கணவனோடு சம்பந்தப்படுத்தி சிரித்திருந்தது.

'ஜாரிகி'யின் வீட்டில் தங்கியிருக்கும். திரைத் தாரகைகளை மிஞ்சும் அந்த அழகி யார்? கல்லூரிக்கு சமர்த்தாய் போய் படித்துவரும் அந்த அழகிக்கு நடிகையின் வீட்டில் வேறு பாடங்கள் போலும். எவ்வித உறவுமில்லாத அப்பெண்ணிற்கு வீட்டு விருந்துகளில் பிரதான இடம் ஏன்...? நடிகையின்

மணவாழ்வில் இதனால் விரிசலா? என்று மனசாட்சியை ஒதுக்கி விட்டு பல கேள்விகளைக் கேட்டுத் தள்ள... வசுந்தரா மனம் நொறுங்கினாள்.

உயிரை மாய்த்துக்கொள்ளலாம் என்ற நினைப்பை மனதுள் உருளவிட்டது அப்போதுதான். சில நாட்களில் வழியில் பார்த்த கமலாக்கா முகம் திருப்பிக் கொண்டு நடக்க, கிரிஜாவின் முகம் கூட முன்னைப் போலில்லை.

'கிசு கிசு' சினிமாக்காரர்களையே சஞ்சலப்படுத்தினால்... சிரிப்பதா அழுவதா என் திணறலில் அவள்.

ஒரு வாசல் அடைத்தால் ஒரு சன்னல் திறக்கும் என்பதை மெய்யாக்க, அந்நேரம் இந்த விளம்பரம் கண்ணில் பட்டது. மறுயோசனை இன்றி எழுதிப் போட்டாள்.

ஓரிரு கடிதப் பரிமாற்றங்களுக்குப் பிறகு- இவள் புகைப்படமும் அனுப்பிய பின்,. புறப்பட்டு வருமாறு பதில் வந்தது.

கிரிஜாவை வணங்கி விடை பெற்றபோது அழுகையை அடக்க முடியவில்லை. பிரிவை எண்ணியும், இப்படிப் பிரிய நேர்ந்ததே என்றும் நெஞ்சு பொறுமியது.

பூப்பந்து ஆட்டம் இன்னும் முடியவில்லை. இடையே புக விரும்பாமல் மீண்டும் சமையலறைக்கே ஓடினாள்.

"ஆடி முடிச்சதும் ஏதும் குடிப்பாங்களாம்மா? டீ..."

"இல்லை... பிரிட்ஜிலே இருந்து கோக்தான்."

ஆயா பீன்சிலிருந்து நாரை உரித்துவிட்டு, காய்களை அடுக்கி வைத்து சீராய் நறுக்கித் தள்ளியது பார்க்க அழகாயிருந்தது.

"இராத்திரிக்கு பீன்ஸ்சா?"



மீண்டும் ஓடியவள் கோப்பைகளைத் தேடி எடுத்து, தயாராய் மேடை மீது வைத்தாள்.

ஐந்தாம் நிமிடம் துவாலையால் முகம், கழுத்தை ஒற்றியபடி உள்ளே வந்தது முதலாளி அம்மா மட்டும்தான்.

நுரைக்க பானத்தை வசுந்தரா ஊற்ற ஆச்சரியமாய் பார்த்தவள்-

"ஓ... தாங்கியூ..." என்றாள் புன்னகையுடன்.

"மன்னிக்கணும். அசந்து உறங்கிட்டேன். பத்து நிமிடம் கழிச்சு வரவாம்மா? வேலை என்னன்னு சொன்னா... செய்திடுவேன்."

ஒரு மிடறு ரசித்து இறக்கிய இளம் எஜமான் அசைவற்று நின்றாள்.

அவள் முகத்தில் ஒரு தவிப்பான பாவனை வந்துபோனது.

## 4

ஆடிக் களைத்து வந்த நீரஜாவுக்கு, வசுந்தரா 'கோக்' ஊற்றிக் கொடுத்தாள்.

"ம்ம்... தோ... இப்ப கொடுத்தாற்போல 'கோக்' ஊற்றித் தருவதும் உன் வேலைதான். அழகாய் செய்து விட்டாயே..."

மழுப்பலாய் தோன்றியது பதில்.

"பத்து நிமிசம் கழிச்சு வரட்டுமாம்மா?"

"அம்மா, ஐயாவெல்லாம் வேண்டாம் வசுந்தரா. எம்பேர் நீரஜா. உனக்கெழுதிய கடிதத்திலே திருமதி. சேகரன்னு

கையொப்பம் இட்டிருந்தேன் இல்லையா? எல்லாருக்கும் நீரு. நீயும் அப்படியே கூப்பிடு..."

"அச்சச்சோ... அப்படி முடியாது."

"அப்போ-நீரும்மா?"

"சரிங்க..."

"வேலை...? நீயா பார்த்துத் தேவையானதை செய் வசுந்தரா. வசு போதாது? கூப்பிட வசதியாயிருக்குது?"

வியர்த்த நீரஜாவின் கன்னங்கள் பளபளத்தன.

"சரிங்க... அப்போ வீட்டைச் சுற்றிப் பார்த்து சுத்தம் செய்யட்டுமா?"

"செய்... உனக்குப் பொழுது போறாப்பல ஏதாவது செய்துக்கோ..."

காலை நீட்டி சாய்ந்தாள் நீரஜா.

நுங்கு போல ஈரப் பளபளப்புடன் இருந்த அழகிய கால்கள். ஆனால் அந்தப் பதில் தான் விசித்திரமாய்ப் பட்டது.

தோன்றிய வேலையை செய்துகொண்டு பொழுதைக் கழித்து விடுவதற்குத்தான் இங்கே சம்பளமா?

தங்குமிடம் உணவு போக இரண்டாயிரம் என்பது சொற்ப தொகை அல்ல.

அதற்குரிய வேலையை இவள் செய்யாவிட்டால் எப்படி?

முடிந்தவரைக்கும் ஏதேனும் இழுத்துப் போட்டு செய்வது என்ற நினைப்புடன் சமையலறைக்குச் சென்றாள், வசு.

அதற்குள் அங்கு சமையல் முடிந்திருந்தது.

"மேசையைத் துடைத்துத் தட்டு போடட்டுமா?"

"அப்படியே இதெல்லாம் கொண்டுபோய் வைச்சிடுப்பா. ஒவ்வொருத்தரும் ஒரு நேரம் வந்து போட்டு சாப்பிட்டுப்பாங்க.



இங்கே பார்த்து பார்த்து பரிமாறணுங்கற அவசியம் இல்லை."

"ஓ...சரிம்மா..."

பதார்த்தங்களை சாப்பாட்டு மேசையில் அலங்காரமாய் வைத்து தட்டுக்களை துடைத்து கவிழ்த்து வைத்தாள். போதுமான குடிநீர் இருக்கிறதா என்று பார்த்து நிரப்பியபின் செய்வதற்கு வேறு வேலை இல்லை. இன்னும் சற்று நேரம் தூங்கி இருக்கலாம் என்ற நினைப்புடன் கட்டிலில் அமர்ந்து வெளியே வெறித்தாள்.

விடிகாலையிலேயே விழிப்பு தட்டியது.

அது பறவைகள் பேசுவதற்கான நேரம் போலும். மும்முரமாய் பேசிக் கொண்டிருந்தன.

கொடைக்கானல் போல் ஏழாயிரம் அடி உயரத்தில் அல்லாமல் பாதி உயரத்தில் இருந்தது இவ்வூர். ஆகப் பதமான குளிர். உள்ளே காபி மணம் உல்லாசமாய் சுழன்றது.

"கலக்கி மேலே அம்மா, ஐயாவுக்கு எடுத்துப் போகட்டாம்மா?"

"இது நமக்கு. டிரைவர், தோட்டக்காரரு, எல்லாருக்குமாய். ஏழரைக்குத்தான் டீ கெட்டில் வைப்பேன் அடுப்பில்- அவங்கவங்க அறையிலிருந்து மணி அடிச்சதும் வேலு போய் கொடுத்திடுவான்."

ஆக இங்கேயும் வேலை இல்லை.

தனக்குக் காபி கலந்து கொண்டாள். தனது அறைக்கு வந்து சன்னல் வழியே பனிமிதந்த தோட்டத்தைப் பார்த்தபடி ரசித்துப் பருகினாள்.

வீட்டின் பின்புறம் தோப்புப் போன்றிருந்தது. சற்று நேரம் அங்கு நடந்து வந்தாலென்ன?

சால்வையை உதறி போர்த்திக் கொண்டு கிளம்பினாள். பருத்த கால்களை ஊன்றிய மரங்கள் கிளை பரப்பி கம்பீரமாய் நின்றன. வகிடாய் தெரிந்த பாதையில் நடக்கலானாள்.

விறுவிறுப்பாய் நடந்ததில் உள்ளே இரத்தம் பாய்ந்தது. வெப்பம் கூடிய சுக உணர்வு.

ஆழ மூச்செடுத்தாள்... யப்பா... சுத்தமான மலைக் காற்று நெஞ்சு முழுக்க. சுற்றிலும் அரவமே இல்லாததில் கைகளை வீசிப் போட்டாள். சுழற்றினாள். உடம்பு முழுக்க காற்றே நிரம்பிவிட்டாற் போன்ற பாரமற்ற சுகம்.

திரைப்படங்களில் நாயக, நாயகியர் இயற்கையைக் கண்டு மகிழ்வாய் ஆடிப் பாடுவது ஏனோ இக்கணம் வேடிக்கையாய் தோன்றவில்லை. அழகை ரசிக்கும் மனோபாவம் இருப்பவர்கள் நிச்சயம் பரவசப்படுவார்கள். அதில் பாட்டு கிளம்பக்கூடும். பாட்டிற்கேற்ப உடலும் அசையக்கூடும்.

வசுந்தராவின் இளமைப் பருவம் சதா இசையும் அசைவுகளுமாய் பார்த்துக் கழித்தது.

கலை ஊறிய மனிதன் குழைந்து போகிறான்.

மோப்பக் குழையும் அனிச்சம் போல அதீத மென்மை. ஆனால் அதில் நன்மையும் உண்டு.

எதிர்காலம் பற்றி. மலைக்காமல், என்ன வேலைக்காக தான் இங்கு வரவழைக்கப்பட்டோம் என்று தலைநோக ஆராயாமல், சுற்றியிருக்கும் பசுமை, புல், புல்லில் பரவச்மாகிக் கிடப்பது நன்மைதான்!

இடதுகையில் கிடந்த சிறு கடிகாரத்தைப் பார்த்தாள். வந்து அரை மணி நேரமாயிற்று. இனி வீடு திரும்ப சரியாய் இருக்கும். திரும்பி நின்று சுற்றும் முற்றும் பார்த்தபோதுதான் அவ்வுணர்வு... தான் அங்கு தனியாயில்லை என்பது போன்ற நெருடல்...!



புலன்கள் கூர்மையாயின.

புருவம் சுருக்கி மீண்டும் நோட்டமிட்டாள்.

நூறடி தொலைவில் அசைவு தெரிந்ததோ?

'குப்'பென்று வியர்த்தது. இன்னும் சூரியக்கதிர்கள் முழுவீச்சு பெறாததில் அவ்விடம் மங்கலாய் இருக்க... அசைவு நிழல்தான்.

யார்... அல்லது எது?

தன்னை நோட்டமிட்டு பின் தொடர்ந்த கயவனா அல்லது மனித நடமாட்டம் கண்டு பம்மிப் பதுங்கும் மிருகமா?

மலைக்காடுகளில் சிறுத்தை. கரடி உண்டு-இங்கு?

காட்டெருமைகள் இருக்கலாம்.

கீழ்நாட்டு அசமந்த எருமைகள் போன்றவை இல்லை. அதன் இருமடங்கு பருமனும் வனப்பும் கொண்டவை இவை.

இரு கைகளும் சேர்ந்து பற்ற முடியாத அளவில் பருத்து, வளைந்த குட்டைக் கொம்புகள். நான்கு கால்களிலும் யாரோ 'ஸ்டாக்கிங்ஸ்' என்ற நீண்ட வெண் உறைகளை மாட்டிவிட்ட தினுசில் கனகம்பீரமான பிராணிகள். தனிமையில் அதுபோன்ற காட்டெருமை ஒன்று இவள்முன் தோன்றினால்... மூச்சு நின்றாலும் நின்றுவிடும்!

நினைப்பிலேயே தொண்டை உலர்ந்தது. நிற்பதா-நடப்பதா?

முழுக்க விடிந்து, இந்த மிருகம் ஓடியபின் வீடுபோய் சேர்ந்தால் போதாது? இப்போது அசைவு தீர்க்கமாய் தெரிந்தது-இவளை நோக்கி!

வந்தது ஒரு மனித உருவம் தான்.

மிக நாகரீகமான, பண்பட்ட, பணம் செழித்த தோற்றம், முகம்.

இவர்... இவர்தான் முதலாளியாக இருக்க வேண்டும்.

நீரஜாவின் கணவன்.

நிம்மதியுடன் ஒரு புன்சிரிப்பை வழிய விட்டவள் அவனை நோக்கிக் கைகூப்பினாள்.

"வணக்கம்... நான் வசுந்தரா. இங்கு வேலைக்கு சேர்ந்திருக்கேன்."

பாண்ட் பாக்கெட்டுகளில் நுழைந்திருந்த கைகளை அவர் வெளியே உருவவுமில்லை. மரியாதைக்காய் சிறு சிரிப்போ, தலை அசைப்போ கூட காட்டவில்லை.

"இருட்டோடு இங்கே சுற்றுவது நல்லதல்ல" என்றான் கடின குரலில்.

இவளுக்கு சற்று ஏமாற்றம்தான்.

படித்த களையுடன் இருந்த முகத்தில் ஒரு புன்னகை இல்லாததில், பண்பான வார்த்தை வராதில் விளைந்த ஏமாற்றம்.

"தவிர இப்படியே தொடர்ந்து நடந்தால் மலைமுகடு. அதன் கீழ் செங்குத்தான பள்ளம். இருளில் தன்னை மறந்து நடப்பவர்களுக்கு அது சொர்க்க வாசல் தான்."

அவர் முகத்திலும் வார்த்தைகளிலும் ஏளனம்.

"மன்னிக்கணும் சார். இது பாதுகாப்பான இடம் என்று நினைச்சேன்." என்றாள் சற்று விறைப்பாக.

"அழகிய பெண்களுக்கு உலகின் எந்த மூலை பாதுகாப்பு?" அவளையே நேர்பார்வையாய் துளையிட்டான்.

இதென்னடாது வம்பு? எடுத்தவுடன் ஏதோ தத்துவம் கிளம்புகிறதே என்று அவள் யோசிப்பதற்குள்-

"ஆனா இக்கால பெண்களுக்குத் தேவை பாதுகாப்பு அல்ல பணம்தான் காசுக்காக எதையும் செய்யும் துணிவு!



ஆண்தான் தன்னை அப்படிப்பட்டபெண்களிடம் இருந்து காத்துக்கொள்ளப் பாடுபடுகின்றான்!"

இப்போது அவளுக்குள் சினம் மொட்டுவிட்டது.

கைநீட்டி சம்பளம் வாங்குகிறவள் என்பதற்காக இப்படி அநாவசிய பேச்சையும் ஏன் வாங்கிக் கட்டிக்கொள்ள வேணும்? என்ற உறைப்புடன்.

"பணம் எல்லோருக்கும் அவசியந்தான். உண்ண, உடுக்க, உயிர்வாழ. அது பெண்களுக்கு மட்டும்தான் தேவை என்பதில்லை" என்றாள் நறுக்கென்று.

"ஆண் பொருளுக்காக உழைக்க வேண்டியிருக்கிறது. வியர்வை சிந்தணும். ஆனால் பெண் புன்னகை சிந்தினால் போதும். இப்போது நீ சிரித்தாயே- இதற்கு ஆண் எந்த விலையும் தரத் தயார்."

"மன்னிக்கணும் அய்யா நீங்க கற்காலத்தை விட்டு வெளியேறவில்லை போலும்."

"இக்காலத்தில் தான் நிலைமை அதிமோசம்" அவன் கடுப்புடன் பதிலடித்தான்.

அவளது நினைவிற்கு குரு வந்தான். சதா இரட்டை அர்த்தப் பாடல்களுடன் சுற்றி வந்து, நடு இரவில் அவளது படுக்கை அறைக்குள் வெறித்து, குடித்துவிட்டு வாசலில் நின்று ஆர்ப்பாட்டம் பண்ணி, பத்திரிகைகளிலும் தன் பெயரை நாறடித்த குரு.

அவனைப் பார்த்துத் தான் இளித்திருந்தால் குரு சமாதானப்பட்டு, சரண் அடைந்திருப்பானோ? ஆனாலும் அந்நினைப்பே அருவெறுப்பாய் பட, தோள்களை உதறிக் கொண்டாள்.

"நான் வரேன்." இதற்கு மேலும் புது முதலாளியுடன் நின்று விவாதிப்பது முறை அல்லவா என்று தோன்ற நகர்ந்தாள்.

அவனுடைய உதடுகள் ஏளனமாய் மடிந்தன. ஆனால் கண்களில் சிறு வருத்தம் தெரிந்தது. "என்ன-பதில் இல்லையா?" வினவியபடி அவளைப் பின் தொடர்ந்தான்.

"வாய்க்கு வாய் பெண்களை இழிவாய் பேசறீங்க- நான் பதில் சொல்லி உங்க கருத்து மாறிடுமா?"

"மாறாதுதான்..."

"அதான் பதில் இல்லை."

"உம்... புத்திசாலிதான். அதுதான் இந்தத் திட்டத்திற்கு சம்மதிச்சுட்டே..."

"என்ன திட்டம்?"

"ரொம்ப ரகசியம்னாளா நீரஜா? எங்கிட்டயே மறைக்கிறயே?" சிறுபையனின் குறும்புடன் அவர் கேட்க, வசுவின் நெஞ்சில் 'கப்'பென்று ஏதோ அடைப்பு!

ஆக ஏதோ விஷயம் உண்டு.

என்ன?... ஏது?

ஆரோக்கியமான இளம் பெண் வேலைக்குத் தேவை என்றிருந்தது செய்தித்தாளின் விளம்பரம். பிறகு இவளுடைய புகைப்படத்தை அனுப்பச் சொல்லிக் கேட்டார்கள். படிப்பு, திறமைகள் பற்றியும் அக்கறையாய் விசாரித்திருந்தார்கள். இவளை ரயில் நிலையத்திலிருந்து ஊருக்கு அழைத்து வர வாகனம் அனுப்பி, வசதியான அறை தந்து... எல்லாம் சரிதான். ஆனால் வேலை என்ன வென்று இன்னும் தெளிவாய் பட்டியலிட வில்லையே? என்னவாய் இருக்கும்?

இதுவரை பெரியவரை- அதாவது நீரஜாவின் மாமனாரை சந்திக்கவில்லை அவருக்காக சிறுநீரகம் அல்லது வேறெதையும் தானமாய் கேட்பார்களோ?

அதற்கு இரத்தமும் திசுவும் ஒத்துப்போக வேண்டும்.



உடல் உறுப்பைத் தானம் செய்ய, இவள் அழகும் திறமைகளும் கொண்டவளாக இருக்க என்ன அவசியம்?

வீட்டின் படியேறியபோது எதிர்ப்பட்டார், பெரியவர். இளம் பழுப்பில் சரிகையில்லாத பட்டுவேட்டி, ஜிப்பா மிக மெல்லிய விளிம்பிட்ட கண்ணாடி. அது அமர்ந்த மூக்கும், பின்னிருந்த விழிகளும் மகா கூர்மை. சின்னவரின் சாயல் அப்படியே அப்பா தான் என்ற நினைப்புடன் கரம் குவித்தாள்.

"இங்கே வேலைக்கு சேர்திருக்கேன்யா... பேரு வசுந்தரா..."

"நல்லாரும்மா..."

வலதுகை சற்றே உயர்ந்தது. அவரது கனிவான முகமில்லை. ஆனால் வெகு கம்பீரம். வடிவும் அழுத்தமுமான உதடுகள். மீசை இல்லாததால் பணக்கார செழுமை கூடித் தெரிந்தது.

அவர் வேறேதும் பேசவில்லை என்றாலும் 'நல்லாயிரு' என்று ஆசி கூறிய பாங்கு மிகப் பிடித்திருந்தது வசுவிற்கு.

'பெரியவர்' என்று அழைப்பதற்கேற்ற தோற்றத்தில் இருந்தார்.

ஒரு மணி நேர நடையில் வியர்த்திருந்தது. குளித்து உடை மாற்றியவளின் நினைப்பு மீண்டும் தான் அங்கு அழைக்கப் பட்டதற்கான சாத்தியங்களைப் புரட்டிப் பார்த்தது.

சாத்துக்குடிகளை உரித்துப் பிழியலானாள். வீடு முழுக்க தினுசு தினுசாய் பழவகைகள்.

கண்ணாடி ஜாடி முழுக்க பழரசத்தைப் பிழிந்து மூடினாள்.

பலகாரங்களை மேசையில் வைத்துத் தட்டு போட்ட நேரம் நீரஜாவின் குரல் கேட்டது. வெகு மும்முரமாய் அவளுடன் பேசி வந்தவன் நடுத்தர உயரத்தில் வெளுப்பாய் இருந்தான். அவன் கைகள் நீரஜாவின் இடுப்பைச் சுற்றியிருந்தன. இவர்தான் நீருவின் கணவனா?

அப்படியானால்... காலையில் சந்தித்த அந்த மாநிறப் பேர்வழி யார்...?

குழப்பத்துடன் நின்றாள் வசுந்தரா.

## 5

காலை உணவு முடிந்தது.

"நாங்க கால்ஃப் கிளப்வரை போறோம் வசு. உனக்கு டவுனிலிருந்து ஏதேனும் தேவையா?" கிளம்புமுன் கேட்டாள் நீரு.

"மதியத்துக்கு என்ன சமைக்க- நீரும்மா?"

"அது ஞான ஆயா தலைவலி. உனக்கு ஏதேனும்?"

"இல்லம்மா..."

இருவரும் கால்ஃப் மட்டைகளை தோளில் சுமந்தபடி வாகனத்திற்குள் ஏறிய பின்னர். இவள் செய்வதறியாது வீட்டிற்குள் போனாள்.

மதிய சமையலுக்கு புளியைக் கரைத்த நேரம். சமையல்கார அம்மாளிடம் சந்தேகத்தைத் தீர்த்து கொள்ளப் பேச்செடுத்தாள்.

"உங்களை அம்மா ஞானம் ஆயான்னாங்க."

"ம்ம்... பேரு ஞானப்பூ இலங்கையில் இதுபோல பேர்கள் உண்டு."

"அப்போ, நீங்கள் அங்கேயிருந்து வந்தவுங்களா?"

"எங்கப்பா வந்தது அங்கேயிருந்து. இங்கே வாழ்க்கை நிரந்தரமானதும் அம்மாவைக் கல்யாணம் கழிச்சாரு. நான்



வளந்தது முழுக்க இங்கேதான். பெரியஜயா கூட பர்மா தவிர்த்து இலங்கையிலும் மர வியாபாரம் செய்தவுங்க. இப்ப பத்து வருசமாத்தான் இங்கே..."

"நீரும்மாகூட இப்போ வெளியே போனது... யார்?"

"சின்னவரு... அது வீட்டுக்காரரு... பேரு சேகரன்..."

"அப்போ காலையில் நான் பார்த்தவர்...? உயரமா... மாநிறமாய் பெரியய்யா ஜாடையில் இருந்தது?"

"மூத்த தம்பி- ராகவன்."

"அவர் குடும்பம்?"

"அவரு ஒண்டியா நின்னுட்டாரு. அவரு விருப்பப்பட்ட பொண்ணை இங்க பெத்தவங்களுக்குப் பிடிக்கலை. ஐந்து இலட்சம் தர்றோம். தனியே ஏதும் தொழில் செய்து பிழைச்சுக்கோ. ஒதுங்கிடுன்னாங்களாம். கோடீசுவர பிள்ளைன்னு நம்பி வந்த பொண்ணு வெறும் இலட்சங்கவும் கையத் தட்டி விட்டுட்டு ஒதுங்கிட்டா. அதுல தம்பி மன சொடிஞ்சிடுச்சு. நான் கூட முதல்ல பெரியய்யா இப்படிச் சொல்லலாமான்னு கோவப்பட்டேன். அந்தப் பொண்ணு முறுக்கிக்கிட்டு போனபிறகுதான் அவரு சூட்சுமம் புரிஞ்சது. ஆனால் தம்பி பிறகு திருமணப் பேச்சே எடுக்காதீங்கன்னுடுச்சு. அருமையான பிள்ளை... நிறைஞ்சு வாழவேண்டிய வயசு..."

"அப்புறம் சின்னவர் திருமணமா?"

"அவரையும் அப்படியே விட முடியுமா? சீக்கிரமே பல பொருத்தம் பார்த்து பெரியவங்க சேத்து வைச்ச ஜோடி இது. ஆனால் வாரிசில்லை."

"அப்படியொன்னும் வயசு கடந்திடலையே."

"அஞ்சு வருடங்கறது கம்மியும் இல்லையேப்பா. அந்தக் காலத்தில் தாலியேறி ஒரு வருடம் முடியறதுக்குள்ள பொண்ணு

வயத்திலேயோ, மடியிலேயோ பிள்ளை இருக்கணும். இல்ல... மென்னுதீத்துடு வாங்க. இப்ப அப்படி இல்லேன்னாலும் மனசுல ஒரு சஞ்சலம் கிளம்பிடுதுல்ல..."

"இத்தனையும் ஆள ஒரு வாரிசு... இல்லாமல் போகாதும்மா..."

"உன் வாய் முகூர்த்தப் படியே ஆகட்டும்ப்பா..."

"மதியம் என்ன சமையல்மா?"

"இதோ... கோழி வெட்டி வந்திருச்சு, குழம்பு வைச்சு ஏதேனும் காய், கூட்டு..."

"நான் ஏதேனும் சமைக்கவா? மிளகு ரோஸ்ட் நல்லா செய்வேன்."

"செய்ப்பா... நீருவும் தம்பியும் இன்னைக்கு முழுக்க கால்ஃப் மைதானத்தில்தான்."

"மதிய சாப்பாட்டுக்கு வரமாட்டாங்களா?"

"இங்கேயிருந்து கொடைக்கானல் ஒரு மணி நேரம். பிறகு மைதானம் இன்னும் தள்ளி- போகவர முழுசா மூணு மணி நேரம். போனா அங்கேயே ஓட்டல்ல சாப்பிட்டுட்டு. கடை கண்ணின்னு உலாத்திட்டு சாயங்காலந்தான் இனி வீடு."

"அப்போ சாப்பாட்டுக்கு பெரியவரும் மூத்தவருந்தான்."

"ம்ம்... நீ உன் பக்குவப்படி செய்ப்பா, நான் ஒத்தாசை செய்றேன்."

நீளநீளமாய் காய்களை அரிந்து வைத்து, மசாலாவையும் தயாரித்தபிறகு வசு, அடுப்பைப் பற்றவைத்தாள்.

விரைவில் மணக்க மணக்க உணவு தயார்.

ஒன்றரைக்கு மேல்தான் மதிய உணவிற்கு வருவார்கள் என்பதில், இன்னும் முழுதாய் ஒன்றரை மணி நேரமிருந்தது.



வீட்டைச் சுற்றிப் பார்த்தால் என்ன?

நாளுக்கு ஒரு அறை என்று சுத்தப்படுத்தலாம்.

படுக்கை அறைகள் மாடியில்தான். ஆக கீழேயிருந்து தொடங்கலாம். துடைக்கும் துணிகளுடன் கிளம்பினாள்.

ஒரு சில அறைகள் பூட்டப் பட்டிருந்தன.

திறந்திருந்தவற்றினுள் குப்பை அதிகம் இல்லை. புழுதிகூட அதிகமில்லை.

ஒரு அறையை அடைத்தபடி மர அலமாரி கதவின்றி அதில் அடுக்கடுக்காய் பழைய காலணிகள். பல இற்றுக் கிடந்தன. இவற்றில் வேண்டாததை ஒழித்தால் அலமாரியை துடைத்து, மெருகேற்றி மலர்த் தொட்டிகள் வைக்கப் பயன் படுத்தலாம்.

அலங்காரமாய் வீட்டின் முன்புறம் வைக்கத் தோது. ஞானத்திடம் இதுபற்றி கேட்க வேண்டும் என்று நடந்தவளை அந்த மஞ்சள்நிறக் கதவு ஈர்த்தது. மற்ற கதவுகளில் பழுப்பு வர்ணம்தான். அறைக்குள் நுழைந்து, ஜன்னல்களை விரியவிட்ட அவளின் விழிகள் விரிந்தன.

குழந்தைகள் விளையாடுவதற்கு என்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்டது போன்ற அறை அது. சுவர்களில் நல்ல பளீர் மஞ்சள், சூரிய ஒளி பட்டதும் அந்நிறம் மேலும் உற்சாகமாய் மின்னியது. ஒருபக்க சுவரில் பதிக்கப்பட்ட நீள, அகலமான கரும் பலகை.

வண்ணப் பந்துகள், மரக் குதிரை, அன்னம், சிறு கார், ஸ்கூட்டர் என்று பலதும் அங்கே பரவிக் கிடந்தன.

இவளது கவனத்தை ஓரமாய் மேசை மீது வைக்கப் பட்டிருந்த மரவீடு கவர்ந்தது.

துணியால் அதன் மீது படர்ந்திருந்த தூசைத் தட்டிவிட்டபடி அருகே சென்று அதனுள் குனிந்து நோக்கினாள்.

பாதிக் கட்டிலை அடைத்து நிற்கக்கூடிய அளவில் இருந்தது அப்பொம்மை வீடு. அதன் உள்புறமும் நேர்த்தியான வடிவமைப்பில் . குட்டி அறைகள் அதற்குள் தேவையான சின்னஞ்சிறு மேசை, நாற்காலி கட்டில்கள். கூரையில் பொடி பல்புகளும் கூட தொங்கின. தான் மீண்டும் குழந்தையாகி விடக்கூடாதா என்றிருந்தது வசுவிற்கு.

இதுபோன்ற ஒரு அறைக்குள் விட்டுவிட்டால் குழந்தைகளுக்கு பசி, தூக்கம் கூட வேண்டாமே.

அன்னப் படகைச் சற்றே அசைத்துவிட அது முன்னும் பின்னுமாய் ஆடியது.

சிறுமியாய் இருந்தபோது, இதேபோல் ஒன்றை பார்த்து விட்டு, பல நாட்கள் கனவிலும் நனவிலும் அதற்காக ஏங்கியது நினைவிற்கு வந்தது.

இன்றுபோல அன்று 'பார்க்', 'கேளிக்கை உலக'ங்கள் கிடையாது. இருந்திருந்தால் அம்மா, இவள் ஆசைதீர அழைத்துப் போயிருப்பாள் தலை சுற்றும்வரை தினுசு தினுசான இராட்டினங்களில் ஏறி, ஆடி, இறங்கியிருக்கலாம்.

15 ஆண்டுக்கு முன் இதைப் போன்ற விளையாட்டு சாமான்களுக்குத்தான் மவுசு.

ஒவ்வொன்றையும் தூசி தட்டினாள்.

இவற்றில் ஆடித் துழாவ பிள்ளைகள் இல்லையே என்ற ஏக்கம் அவளையும் ஒரு கணம் நோகச் செய்தது.

அம்மா அடிக்கடி சொல்வாள்–

'நான் அவரோட வாழ்ந்தது தப்புன்னு வருத்தப்பட்டதில்லை வசு. அது ஒருமாதிரியான பொய் தாம்பத்தியம்தான்.



உரிமைகளின் மரியாதையற்ற உறவுதான். ஆனால், அதன் பரிசாய் கிடைத்த தாய்மை போலித்தனம் இல்லாதது. உன்மையான பாசம். குழந்தைகள் கடவுள் இந்த உலகத்துக்குத் தந்த குட்டி சொர்க்கங்கள். அதுங்களைக் கொஞ்சினால் சொர்க்கம் உணரலாம். அதுவும் நீ அவரையும் என்னையும் குழைச்சாப்போல பிறந்த குட்டி. எங்க உடம்பு, திறமை, குணம் எல்லாம் உங்கிட்ட வடிச்சு இறக்கிட்ட நிம்மதி. எனக்கப்புறம் என் சாரமாய் இந்த உலகத்தில் நீ. அப்புறம் உன் வடிவா உன் குழந்தை என் பேத்தி...'

சந்தோஷமாய் இப்படி பிதற்றுவாள் அம்மா.

தனக்கு குழந்தை பிறப்பது சாத்தியமென்று வசுவிற்கு தோன்றவில்லை.

ஆனால் குழந்தைக்காக ஏங்கும் இந்த வீட்டிற்கு ஒரு வாரிசு வேணும். அந்த குட்டி சொர்க்கம் எப்போது உருவாகும்? இங்கு உள்ளவர்களின் குணம், ரசனை, தோற்றத்தைப் பிரதி எடுத்துக் கொண்டு?

இராகவன், சேகரன் ஆடிக்களித்திருப்பார்கள் இங்கே... பல ஆண்டுகளுக்கு முன்பு. சில பொம்மைத் துப்பாக்கிகள், ரோலர் ஸ்கேட்ஸ்லும் கிடந்தன. பெண் குழந்தைகள் இருந்திருந்தால்... பொட்டு இட்ட, கைபிய்ந்த பொம்மைகள், செப்புக்குடங்களும் ஊடே கலந்திருக்கும்.

அவற்றை அடுக்கி வைக்க முனைந்தவளை மீண்டும் அந்த சிறுவீடு ஈர்த்தது.

சற்று வித்தியாசமான, அழகான வடிவமைப்பு.

வர்ணம்தான் ஆங்காங்கே உரிந்திருந்தது. எனாமல் வர்ணம் வாங்கி வந்தால் மறுபடி ஒரு பூச்சு பூசலாம் இதே நிறங்களில் வெண் சுவர்கள். பச்சைக்கூரை. சிகப்பு விளிம்புகள் என்று.

வளைவான விளிம்புகளை விரலால் தடவினாள். அறை வாசலில் நிழலாட.... திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"யா...யாரது?"

"நான் உன்னைக் கேட்க வேண்டிய கேள்வி" என்றான், இராகவன்.

"ஓ... நீங்களா? நான் இங்கே சுத்தம் பண்ணலாம்னு வந்தேன்."

"சுத்தம் செய்தால்... மறுநாளே இங்கு விளையாட பிள்ளை வந்துவிடுமா?"

அவன் கேட்ட தொனி அவளுக்குப் பிடிக்கவில்லை.

பெரியவர் பேசியது ஒரே வார்த்தை 'நல்லாயிரும்மா...'

மகனது பேச்சில் நாசுக்கில்லையே.

கண்டபடி வீசி எறியப்பட்ட சொற்கள்.

துடைக்க எடுத்துவந்த துண்டுகளை எடுத்துக் கொண்டு வெளியேற முனைந்தாள்- வாசலில் இருபுறமும் கைகளை வைத்து நின்ற அவன் அசைவதாயில்லை.

"பத்து மாசம் கழிச்சு பிள்ளை வரும்போது இது மீண்டும் தூசியடைஞ்சிடுமே."

"அப்பப்போ... சுத்தம் செய்து வைப்பதில் தப்பில்லை அதுதானே என் வேலை." பேசவேண்டுமே என்று பேசினாள்.

"உன் விருப்பம்" தோள் குலுக்கினான்.

"இந்த மரவீட்டிற்கு வர்ணம் பூசலாம்னு நினைச்சேன். உரிஞ்சிருக்கு..." என்ற அவளை வினோதமாய் ஊன்றிப் பார்த்தான்.

"எதுக்கு?"



"இல்ல... ரொம்ப அழகான வடிவம். பூசினால் புதுசு போலாயிடும்."

"நாளைக்கு டவுன் போகும் போது வாங்கி வரேன்." என்றவன் சட்டென்று திரும்பி வெளியே நடந்தான்.

பெரியவர் மிக ரசித்து சாப்பிட்டார்.

"உனக்கு நல்ல கை மணம்மா வசுந்தரா. ஞானம் சமையல் பத்து வருசத்திலே கொஞ்சம் அலுத்திருச்சு. அவளும் இதுபோல புதுசாய் ஏதும் கிளறமாட்டா" என்று சிரித்தார்.

பார்த்து, கவனித்துப் பரிமாறினாள்.

"தவிர... ஞானத்துக்கு இப்படி பக்கத்திலே நின்று பரிமாற கூச்சம்..."

ஆனால் இராகவன் உணவு உண்ண வந்து அமர்ந்த போது இவளுக்கும் தயக்கமாய்தான் இருந்தது.

"கோழி ரொம்பப் பிரமாதம்... சாப்பிடு..." அவரே மகனை உபசரித்தார். ஆனால் அவன் எவ்வித விமர்சனமும் இல்லாது சாப்பிட்டு முடித்தான்.

கைகழுவி வந்தவனிடம் துவாலையை நீட்டியவள், இனிப்பு தட்டையும் அவன் பக்கமாய் நகர்த்தினாள்.

"ஆக ரொம்ப சகலகலா வல்லியாய்தான் தேடி தேடி உன்னைப் பிடிச்சிருக்காங்க... ம்ம்...?" என்று அவன் புருவம் தூக்கியது இவளைக் குழப்பியது.

என்ன சொல்கிறான். ஒவ்வொருமுறையும் ஏதோ புதிர் பேச்சு?

மாலை நேரம் தோட்ட வேலையில் கழிந்தது. புது மலர்களைக் கொய்து, வரவேற்பறைக் குவளையில் அலங்காரமாய் செருகிவைத்த நேரம் நீரு வந்து சேர்ந்தாள்.

"ஆங்... நல்லாயிருக்கு..." என்ற பாராட்டுடன் மலர்களை புன்னகையுடன் பார்த்தபடி உள்ளே நடந்தாள்.

"நீரும்மா... குடிக்க ஏதேனும் கொண்டு வரவா?"

"ஆயாவை டீ போட சொல்லேன்..."

தேநீரும் பிஸ்கெட்டும் பரிமாறினாள்.

"எப்படி உனக்கு இன்னைய பொழுது போச்சு வசு?"

"ஏதோ உருட்டி, துடைச்சு வைச்சேன்."

"ம்ம்... இதோ இந்த அறை நூலகம். எக்கச்சக்க புத்தகங்கள்..." வலது பெருவிரலை பக்கவாட்டில் காட்டினாள்.

"ஓகோ..."

இவள் முகத்தின் ஒளியைப் பார்த்தவள், "புத்தகப் பிரியையாக்கும்?" என்றாள்.

"பிடிக்கும்மா... புத்தகங்களைப் பிரிச்சு, துடைச்சு அடுக்கவா?"

"செய்யேன்... வேண்டியதை வாசிக்கவும் எடுத்துக்கோ..."

செய்ய ஒரு வேலை கிடைத்த உற்சாகத்தில், இருந்த சிறு வேலைகளை முடித்து விட்டு அந்த அறைக்குள் நுழைந்து விட்டாள் வசுந்தரா.

உள்ளே இருட்டாய் இருந்தது.

சுவிட்ச் எங்கே... பார்வை சுவர்களைத் துழாவியபோது தான் பக்கத்து அறையில் பேச்சு ஆரம்பித்தது.

"வசுந்தரா நல்லப் பெண்ணாய்தான் தெரியறா... எனக்குப் பிடிச்சிருக்கு, சேகரன்."

"அப்போ... அது... அது பற்றி அந்தப் பெண்ணிடம் பேசவாப்பா?"



"இந்தத் திட்டத்தில் எனக்கு முழு உடன்பாடு இல்லை."

"ஆனால் வேற வழியும் இல்லை. பிள்ளையைக் கிள்ளி விட்டுட்டீங்க, தொட்டிலையாவது நாங்க ஆட்ட வேணாமா?

இங்கே தொட்டில் ஆடணுந்தான். அதுக்காக... என்னால ரெண்டாங் கல்யாணமெல்லாம் முடியாது."

"தெரியும். நீரஜா உன் மனசுக்கு பிடிச்ச மனைவி தான்."- என்றது பெரியவரின் குரல்.

"குழந்தை இல்லாததுகூட எங்களுக்குப் பெரிய குறையாத் தெரியலைப்பா..."

"வயசு அப்படி. உங்க படிப்பும் சூழலும் அப்படி. என்ன இன்னுமா ஏதும் விசேஷம் இல்லை? அந்தக் கோயில் போனா இந்தக் குளத்திலே முங்கினா பலனுண்டுன்னு நீட்டி முழக்கற தினுசு நண்பர்கள் உங்களுக்கு இல்லை."

"வசதிதான். ஆனால் நீங்கள்தான் பேரப்பிள்ளையைப் பார்க்கணும்னு நிக்கறீங்க..."

"அதில் தப்பில்லையே. உனக்கு இன்னும் வயசு போனப்புறம் ஏக்கம் வரும் பாரு... உன் நண்பர்கள் வீட்டில் அவனுக்கு மூட்டுவலி வர்றநேரம் தோள் கொடுக்கப் பிள்ளை தயாராய் நிற்கறதைப் பார்க்கும்போது நெஞ்சு பிசையும்."

"அப்போ இதுதான் வழி."

"ஆனால் இதில் ரெண்டு பெண்களுமே பாதிக்கப் படறாங்க, சேகரன். அதை முழுசாய் உணரணும் நீ. நீரஜா, கால மெல்லாம் ஒரு விநோத நெருடலை அனுபவிக்க நேரும். பிள்ளை யாரைப் போல ஜாடைன்னு பேச்சு கேட்கும் போதெல்லாம் அவளுக்குள் அது குத்தும். இந்தச் சிரிப்பு அப்படியே உன்னுது நீருன்னு யாரும் சொல்லமாட்டாங்க. அப்படியே விசயம் தெரியாத யாரும் பேச்சுக்கு

சொல்லிட்டாநோவும். சொல்லமாட்டாங்களான்னு ஏங்கும். அது ஒரு விசித்திர நிலை."

அவரின் பேச்சைக் கேட்டு கட்டுண்டது போல நின்றாள், வசுந்தரா.

## 6

சேகரனும், பெரியவரும் பேசிக்கொண்டிருந்ததை பக்கத்து அறையில் இருந்து வசுந்தரா கேட்டாள்.

இதற்கு அடுத்தது பெரியவரின் அறைபோலும். அது அறியாமல் நூலகத்திற்குள் சுயாதீனமாய் நுழைந்தாயிற்று.

பேச்சு ஆரம்பித்ததுமே வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் கால்கள் நிலத்தோடு உறைந்தாற் போல நிற்கின்றனவே.

தான் இங்கு வரவழைக்கப்பட்ட நோக்கம் என்ன என்ற குடைச்சலுக்கு பதில் இதோ தெரியப் போகின்றது என்ற ஆர்வம்!

விசயம் தன்னைப்பற்றி என்பதால் நின்று கேட்பதில் தவறில்லை என்று ஒரு சப்பைக்கட்டு. ஆனாலும் இது தப்புதான் என்ற நடுக்கம். எல்லாமுமாய் அப்படியே உறைந்து நின்றிருந்தாள்.

கனவுகளில் நேரும் இனம் புரியாத அச்சத்தை இப்போது அனுபவித்தாள்.

"நீரஜா உலகம் தெரிந்த பொண்ணுப்பா..."

"இருக்கட்டும்., அப்ப வசுந்தரா? யாருமத்த அந்த குட்டி. என்னை இப்படி பயன்படுத்திட்டாங்களேன்னு நம்மைச் சபிக்காதா?"



"அவள் அனுமதியோடு தான்...?"

"அனுமதி பெற்றுத்தான் அவளை இங்க வரவழைச்சு இருக்கணும். பாவம் கன்னிப் பொண்ணு..."

"பெண்ணைப் பற்றி முழு விவரமும் தெரியாமல் நாம் முடிவு எடுக்க முடியாதேப்பா. ஏன்னா நீரு வயிற்றிலே உருவாகிப் பிறந்தாலும் அது வசுந்தராவினுடைய குழந்தை! வசுந்தராவின் ஜாடை, குணாதிசயங்களோடு பிறக்கப் போகும் பிள்ளை! இவள் எப்படி என்று ஓரளவு கணிக்காமல் நாம் நிச்சயிக்க முடியாதில்லையா?"

வசுந்தராவிற்கு மூச்சடைத்தது...!

என்ன... என்ன பேச்சு இது? என் குழந்தையை நீரும்மா பெறப் போகிறார்களா? அதெப்படி?

பெண்ணுக்கும் பெண்ணுக்குமாய் குழந்தையா? திடீரென அந்த இருட்டு அறையும், அமைதியாய் நின்ற அலமாரிகளும் அவளை அச்சுறுத்தின.

இங்கிருந்து தப்பி ஓடவேணும் போல ஒரு உந்துதல்... ஆனால் கால்கள் கனத்து, ஒத்துழைக்க மறுத்தன.

"வாடகைக்கு ஏற்படுத்தும் உறவுகளில். பல சிக்கல்கள் நேரும் சேகரன். தாய்மை உணர்வுகளை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது."

"சுமந்து பெறப்போவது நீரஜாப்பா."

"சரி, ஆனால், உடலியல்படி குழந்தை வசுந்தராவின் உடையது. அவள் கருவிலிருந்து உருப்பெற்ற உயிர். அது அவளை உரித்தெடுத்தாற் போல இருக்கலாம்- சிரிக்கலாம். ஏன் அவளுடைய அம்மா ஜாடையாய் கூட இருக்கலாம்."

வசுந்தராவிற்கு அழுகை முட்டியது.

"ஏதேதோ பேசறீங்கப்பா."

"நீ ஜாடையில் அப்படியே உங்கம்மாவோட அப்பாதான் தெரியுமா? ராகவன்தான் எங்க வீட்டு சாயல். ஆக. யாருமில்லாத வசுந்தராவிற்கு குழந்தை மீது தனி பாசம் துளிர்க்கலாம். 'அப்படியே இது எங்கம்மா தான்- எங்கப்பா குரல்' என்று அவள் தன்வசம் இழக்கலாம்"

"அப்போ நீரு பிள்ளை தரிச்சவுடனே இவளை ஒரு வசுந்தராவை வீட்டை விட்டு அனுப்பிறலாம். முதல்ல இராப்பகல் கண்முழிச்சு வளர்க்க வசுந்தராவைத் தொடர்ந்து வேலையில் வைச்சிக்கலாம்னு நினைச்சோம்..."

"அதற்கு வேற ஒரு ஆயா அமர்த்துங்க. முதல்ல அந்தப் பெண்கிட்ட பேசு. இன்னின்ன பிரச்சினை தோன்றலாம். அதெல்லாம் வரக்கூடாதுன்னு அவளை மனசளவிலே தயார்படுத்து. பிள்ளையின் ஒரு பாதி அவளுடையது என்றாலும் அதன் மீது அவளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதைத் தெளிவுபடுத்து. இத்தனை சொத்திற்கும் வாரிசு நான்தந்த இந்த குழந்தை என்ற எண்ணமெல்லாம் அவளுக்கு வந்தால் பிரச்சினை-அதற்கு இடமின்றி முறைப்படி எழுதி வாங்கு..."

வசுந்தராவிற்கு குமட்டியது.

இது என்ன திட்டம்? அவளைக் கலந்து ஆலோசிக்காமல் ஏதோ ஒரு நாடகம் அரங்கேற்றப் பார்க்கிறார்கள். அதிலும் அந்நாடகத்தில் வசுந்தராவின் கதாபாத்திரம் நாயகியா அல்லது வில்லியா என்பது அவர்களுக்கே புரியாத ஒரு குழப்ப நிலை வேறு.

கண்களை இருட்டி வந்தவேளை. முகத்தில் ஒரு வாளி நீர் தெறித்ததைப் போல... தொலைபேசி ஒலித்தது.

அந்த சத்தத்தில் முதலில் அதிர்ந்தாலும் 'பட்'டென்று கதவைத் திறந்து வெளியேறினாள்.

"அலோ டாக்டர் பாகீரதியா? சொல்லுங்க..." என்றது பெரியவரின் குரல்.



சற்று உட்கார்ந்தால் தேவலை. ஆனால் இங்கே முடியாது. அவசரமாய் தன் அறைக்கு ஓடினாள்.

நல்லவேளை வழியில் யாருமில்லை. இல்லையென்றால் வியர்த்து. வெளுத்துக்கிடந்த அவள் முகத்தைப் பார்த்து நாலு கேள்வி கேட்காமல் விட்டிருக்க மாட்டார்கள். இவளுக்கும் குரல் எழும்பியிருக்காது. அழுதிருக்கவும் கூடும்.

கதவைத் தாழிட்டு படுக்கையில் சரிந்தாள்.

'அம்மா' என்று முணங்கினாள்.

மார்பு கூட்டுக்குள் இதயம் முரசு போல அதிர்ந்தது.

கதவு தட்டின ஞானப்பூ கரிசனையாய் விசாரித்தாள்.

"என்னப்பா... மேலுக்கு சுகமில்லையா?"

"ம்ம்... கொஞ்சம் அசதி. ஏன்னு தெரியலை... இல்லைன்னா வந்து உங்களுக்கு உதவியிருப்பேன்."

"இருக்கட்டும். இன்னைக்குப் பூர்ணிமா. நிலா தங்கமாக்காயுது. மலை முழுக்க வெளிச்சத்தில் நனைஞ்சு கிடக்கு. வந்து பாரு. கூட்டாஞ் சோறு. கிளறியிருக்கேன். எல்லாருமாய் வெளியே வைச்சு சாப்பிடலாம் வா..."

மனதின்றிதான் எழுந்தாள். ஆனால், மறுக்கவும் மனமில்லை. தாயின் பாசத்துடன் வந்த அழைப்பு அது.

"முகம் கழுவிட்டு வந்துடறேம்மா."

"சீக்கிரமா வா இல்லை பொரிச்சு வைச்ச வடகத்தை எல்லாம் பசங்க நொறுக்கித் தீத்துருவாங்க."

பின்வாசல் விரியத் திறந்திருந்தது. படிகளில் அமர்ந்திருந்த வேலையாட்கள் சளபுளா என்று பேசிக்கொண்டனர்.

"யப்பூ. சீக்கிரமா வா. வயிறு பசியில் காத்தது" வாட்ச்மேன் தாத்தா அழைக்க இவளும் ஒரு தூக்குச் சட்டியைக் கையிலெடுத்துப் பரிமாறலானாள்.

முழுக்க வெளியே வந்து நின்றபோதுதான் இரவின் அற்புத அழகு புரிந்தது.

அசரடிக்கும் அழகுதான்.

மின்சாரம் அற்ற இரவில் ஏற்றப்பட்ட மெழுகுவர்த்தியின் ஒளியில் அறைக்குத் தனி பொலிவு வருமோ - அது போன்று இதமான நிலவொளியில் பூமி சோபித்தது.

மணப்பெண்ணைச் சல்லாத் துணி வழியே பார்ப்பது போன்ற ஒரு மாயக் கவர்ச்சி.

தெளிவான வானத்தில் தாராளமாய் அள்ளித் தெளிக்கப் பட்ட நட்சத்திரங்கள் நடுவே வெள்ளித் தட்டாய் நிலா. அதன் பால் புன்னகையில் நனைந்த புவி.

கிளறி பரிமாறிய சாதம் மணத்தது. பொன்னி சாதத்திற்கு காரட்டும், பீன்ஸ், கிழங்கும் நிறங்கள் கூட்டின. நாவு சுரந்தது.

"கூட ரெண்டு துண்டு ஊறுகா போடுங்க ஆமா."

வடிவேலு ஆவேசமாய் பிசைந்து பெரும் கவளங்களாய் உருட்டி வாயில் தள்ளினான்.

"நாளைக்கு அம்மாகிட்டே கேட்டுட்டு சினிமாக்குப் போகணும்."

அந்த வெள்ளித்திரை உலகில் சில நல்லவை நடந்தது உண்டென்றாலும், முழுதாய் மறக்கவேண்டும் என்று நிச்சயித்த பின்பு இதையும் சேர்த்து துடைத்தெறிய வேண்டியதுதான். வெறுமே புன்னகைத்தாள்.

திரைப்படங்களைப் பற்றியே பேச்சு தொடர, இவள் ஆயாவிற்கு உதவுவது போல அங்கிருந்து விலகினாள்.

பாத்திரங்களை ஒழித்து, கழுவி, கவிழ்த்தபின் ஆயா போய் பின்பக்க கதவை மூடித் தாழிட்டாள்.



"இடத்தைக் காலி பண்ணுங்கப்பா. கண்டதைக் குடிச்சுட்டு புகையை உள்ளே அனுப்பாதீங்க. எனக்கந்த வாடை ஒத்துக்காது." விரட்டினாள்.

வசுந்தராவிற்கு சிரிப்பு வந்தது.

வடபழனி சந்துகளில் புகை சர்வசகஜம். பூஜை அறையில் பக்தி மணம் போல.

இவள் சிரிப்பு புரிந்தது போல ஞானப்பூ கிசுகிசுத்தாள்.

"வெறும் புகை இல்லப்பா. சில பசங்க கஞ்சா இலையையும் சேர்த்து ஊதுவாங்க..."

"படுக்க போகட்டுமாம்மா?"

"முகம் களையத்து கிடக்கே. நான் வேனா கூட உன் கூட படுத்துக்கட்டுமா?"

"வேணாம்மா... அவசியம்னா கேக்கறேன்."

"ஏன்-ஊர் ஞாபகமாப்பா?"

"ம்ப்ச்..."

"இல்லாம இருக்குமா? ஆனால் ஆறு மாசம் கழிச்சு கீழே. இறங்கினே, வெயில் அவிச்சுரும். 'யப்பாடி'ன்னு மறுபடி மலை ஏறிறுவ."

படுத்தபடி யோசித்த வரைக்கும் ஓரளவு புரிந்தது. அவளிடமிருந்து கருமுட்டை மட்டும் எடுக்கப் போகிறார்கள். சேகரனுது விந்தணுவோடு அது இணைக்கப்பட்டு நீரஜாவின் கருப்பையில் வளரப் போகிறது...

அடேயப்பா...! விஞ்ஞானத்தின் வளர்ச்சி அசாத்தியமானது தான்! 'குளோனிங்' என்று அப்படியே ஒரு மனிதனை அச்செடுத்தாற்போல மற்றும் ஒரு பிரதியை உருவாக்கிக் காட்டி

விட்ட விஞ்ஞானம் என்னால் முடியாதது எதுவுமில்லை என்று சவால்விடுகின்றது கர்வமாய்!

சமீப வார இதழ் ஒன்றில் கணவன் வெறுத்து ஒதுக்கிய பேதைப் பெண் ஒருத்திகூட, அப்படி செயற்கை கருத்தரிப்பு மூலம் குழந்தையை நிம்மதியாய் பெற்று மகிழ்ந்ததாய் ஒரு கட்டுரையை வாசித்திருந்தாள்.

வாழ்க்கைக்கு குழந்தை ஒரு அர்த்தம். ஆரோக்கிய மகிழ்வும் தரலாம். ஆனால் இவளால் உருப்பெறும் மழலை இவள் மடியில் தவழாதே... இவளைத் தன் தாய் என்று அறியாதே...! கானல் தாய்மை!

பெரியவர் சொன்னது போல பிறப்பது இவளைப் போலவோ, இவள் தாயைப் போலவோ இருந்துவிட்டால்...?

வேண்டாம்- அது விஷப் பரீட்சை. அல்லது முழுக்க தகப்பன் வீட்டையே கொண்டிருக்கலாம்.

புரண்டு படுத்தாள்.

எப்படியும் இவள் சாயல் படியாமலிருக்க சாத்தியம் இல்லை.

கலவை பாதி சேகரன். பாதி வசுந்தரா! அந்த எண்ணம் உவப்பாயில்லை... உறுத்தியது.

விஞ்ஞானம் வளர்ந்து, பற்பல மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டாலும் அனைத்தையும் ஏற்று ஜீரணிக்கும் திராணி மனிதனுக்கு இல்லையே!

பெருமூச்சுடன் ஒருக்களித்துப் படுத்தாள். சன்னல் வழியே... அதென்ன அசைவு?

நிலா ஒளியில் அது மூத்தவர் என்பது தெரிந்தது. அந்த உயர்ந்த உருவம் தனியே நடக்கையில் ஏதோ ஒரு சோகம் புலப்பட்டது.

அதிகாலையும் இருட்டிலுமாய் இப்படி தனித்து நடந்து திரிவானேன்?



ஏமாற்றிப்போன பொண்ணைப் பற்றிய ஊமைப் புலம்பலோ? உலகில் விதவிதமான வஞ்சகங்கள். அதற்கெல்லாம் அஞ்சினால் வாழமுடியுமா?

அவளுக்கு அவனிடம் போய் நின்று இதையெல்லாம் பேசவேண்டும் போலிருந்தது.

பேசாவிட்டாலும் வெறுமனே அவனுடன் ஆறுதலாய் நடந்தால் கூட போதும்.

திடீரென்று வேறு ஒரு எண்ணக் குமிழ்...

ராகவனும் இவளுமாய் கலந்து உருவாக்கும் குழந்தை... எப்படி இருக்கும்?

இந்த எண்ணம் உறுத்த வில்லை- மாறாக வெட்கம் தந்தது.

சூடான சிவந்த கன்னங்களை தலையணைக்குள் அழுந்தப் புதைத்துக் கொண்டாள்.

## 7

"இன்னா குரு.. இப்படியே அரை மணி நேரமா குந்திகினுகீர?"

கடந்துபோன மாரி கேட்டான்.

குரு கையில் 'பசை' கூடினபிறகு- முன்பு கண்டு கொள்ளாமல் கடந்த பலர் நின்று இரண்டு வார்த்தை பேசுகின்றனர்.

பத்திரிகைக்கும் ஸ்டுடியோவிற்கும் பாலமான பிறகுதான் இந்தப் பணப் புழக்கம்.

முன்பு படப்பிடிப்பு தளத்திற்குள் போனால் குறுகிப் போவான். ஆடத் தெரியாது. நடிப்பு புரியாது.

சினிமாச் சண்டையின் வித்தைகள் முடியாது. ஆனால் இப்போது அதற்கெல்லாம் தேவையில்லை. பத்திரிகைக்காரன் போல சுற்றிவந்தான். ஆனால், பேச்சு சினிமாக்காரனுக்கு ஆதரவாய் இருக்கும்.

'ச்சே... எட்டு டேக் ஆச்சுபா... என்ன ரியாக்ஷன் கேக்குறான்னே தெரியல. பய 'கட் கட்'டுன்னு கத்தறான்' என்று புதுமுகம் சலிக்கும் போது. அருகில் நின்று சாமரச் சொற்கள் வீசுவான்.

நாயகியரின் தாய்குலங்களுக்கு வகையாய் ஜால்ரா தட்டுவான்.

'லைட்பாய்' உடன் உயர்ரக சிகரெட்டை பகிர்ந்து பிடிப்பான். இளநீர் வாங்க கார் கிளம்பினால், உடன் தொற்றிக் கொள்வான்.

நாயகிக்கு நாற்காலி சுமப்பான். இப்படி காது விடைத்தபடி அலைந்து சேகரித்த செய்திகளை பத்திரிகைகளுக்குத் தீனியாகப் போட்டதில்தான் சற்று பணம் பார்த்தான்.

அக்கம் பக்கத்தில் கும்பிடு போட்டவர்களுக்கு கைமாற்று கொடுத்தான். வாங்கியவர்களிடம் குரல் உயர்த்தி பேசினான்.

சிரிப்பதை நிறுத்தியாயிற்று. ஏனெனில் அதில் இளிப்பு போல அசடு வழிந்தது. உடையும் சினிமாத்தனமாய் மாறியது.

இப்போது பலர் அவனைக் கண்டுகொள்வது முழு திருப்தி தரவில்லை.

வசுந்தரா தப்பிவிட்டதுதான் நெருடியது.

பல காலமாய் கண் வைத்து இருந்த கிளி பறந்து போன ஆங்காரம். யாருமற்ற அனாதையை சுலபமாய் வளைத்து விடலாம் என்று நினைத்துதானே- 'மூச்சுத் திணறலுக்கு இது நல்லாக் கேக்குமாம் அத்தை. முழுங்கு சொல்றேன்' என்று



கண்ட கண்ட வீரியமிக்க மாத்திரைகளை வசுவின் அம்மாவிற்குத் தந்து- அவளது கதையைச் சீக்கிரம் முடித்தான்.

ஏறக்குறைய கொலை!

இத்தனைக்கும் பிறகு கிளிக்குஞ்சு பறந்துவிட்ட பொறுமல்! அதில் விளைந்த ஒரே நன்மை குருவிற்கு பத்திரிகை உலகோடு ஏற்பட்ட தொடர்புதான்.

அன்று கிரிஜா வீட்டின் முன் கத்தி ஆர்ப்பாட்டம் செய்ததில் அகஸ்மாத்தாய் ஏற்பட்ட தொடர்பு தொடர்ந்ததில் தான் இப்போது நிலைமை சற்று தூக்கல்.

"நாஸ்தா ஆச்சா?"

"இல்லை... திடீருன்னு நம்ப வசு நினைவு..."

"சிட்டியில் இல்ல அவ. வுடு... மறந்திடு..."

"பத்து இருபது நாளுல எப்படி மறக்க? வேற எங்கேயும் அவளுக்கு உறவுன்னு யாருமில்ல... எங்க போயிருப்பா?"

"படிச்ச பொண்ணு. பிழைக்க நூறு வழி. நீ உண்மையாலும் அவளை லவ்வு பண்ணினியா குரு?"

"ஆசை... கொள்ளை ஆசை... கண்ல விரலுவிட்டு ஆட்ற அழகில்லபா அது? சும்ம 'சிக்'குன செப்பு குடங்கணக்கா... அப்படி வேற அமையாது."

"நம்ம பானு எப்படி? வசு அளவுக்கு கலரு... அதும் 'ஜிங்' குனுதான் கீது."

"யாரு அந்த முயக்குட்டியா?"

"அதென்ன?" ஒரு அவுட்டு சிரிப்புடன் பீடி பற்றவைத்த மாரி, குருவின் அருகே சாய்ந்து அமர்ந்தான்.

"தூக்கலான பல்லுபா! தவிர யாரைப் பாக்கட்டும் ஈன்னு பல்லக் காட்டும். வசு அப்படியா? அத தனிப்பா... நடக்கறதும்

பேசறதும் ராணி கணக்கா இருக்குமேப்பா. யாரு கிட்டேயும் நின்னு பேசும்? பேசினாலும் இளிக்குமா?"

மாரியின் முகம் சாம்பியது. அவன் பானுவின் அழகிற்கு பரம ரசிகன். அவள்தான் அவனது கனவுக்கன்னி.

"சரி... அதுக்கு இப்படியே குந்திகினு காலங் கழிக்கப் போறியா?"

"வுட மனசில்லபா..."

"சரி, அப்ப துப்பறிஞ்சிரு..."

"எப்படி?"

"நான் என்னத்தக் கண்டேன்?"

"கண்டாச் சொல்லு மாரி. நா உன்னக் கண்டுக்கரன்" சட்டைப்பையத் தட்டிக் காட்டினான் குரு.

கரும்பச்சை நைலக்ஸ் சேலையை இடுப்பில் இறக்கிக் கட்டியிருந்தாள் பானு. மாரியின் கண்கள் இமைக்க மறந்தன. அந்த இடுப்பின் வளைவு, நிறத்தில் கிறங்கி மொய்த்தன.

ஆனால், பானு அவனைச் சட்டை செய்வதேயில்லை. காசு இருந்தால், வண்ண சட்டை அணிந்திருந்தால் பார்ப்பாள்.

குறை அவனதுதான். நிவர்த்தி செய்ய, குரு போன்று வேலைகளில் இறங்க வேணும். அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் என்று செய்திகளைப் பிய்த்துப் பிடுங்கி, மசாலா சேர்த்து பொரித்து பத்திரிகைகளுக்குப் பரிமாற வேணும்.

முதலில் வசுவைப் பற்றிய தகவல்- பானுவிடம் பேச்சு கொடுக்க அது ஒரு நல்ல சந்தர்ப்பமாயும் பட்டது.

"பானு..."

"ஆஹ்?" சுண்டெலியைப் பார்க்கும் பருந்து போல அரைப் பார்வை பார்த்தாள்.



"வசு... வசுந்தரா பத்தி ஏதும் தகவல் தெரியுமா?"

"உனக்கெதுக்கு?"

"குரு கேட்டுது... கவலப்படுது..."

"அது கவலப்பட்டா... எனக்கென்ன போச்சு?" நொடித்தாள்.

"சொன்னா அம்பது, நூறு தர்ராப்பல..."

அலட்சியம் விலகி விழிகள் ஒளிபெற்றன.

"என்னா... லவ்வா?"

"ஏதோ ஒண்ணு... நான் கமலா அக்காகிட்ட வசுபத்தி விசாரிச்சேன்... அவங்கதான் கிரிஜாம்மாகிட்ட வசுவ சேத்துவுட்டது... அவுங்க போதும்ப்பா அவளால பட்டதுன் ராங்க..."

"அவளும் ராங்கிக்காரிதான்? படிச்ச திமிரு, பல்லுத் தெரியாமத்தான் சிரிப்பா... பேசுவா, குருப்புல ஆட ஒரு தடவை கூட வந்ததில்லையே."

"வேற யாருக்குத் தெரியும்?"

"தெரிஞ்சா...? நூறா இருநூறா?"

"அட, நீயும் சம்பாதிக்கற புள்ளதானே? ஏதோ காசே காணாதது கணக்கா பேசுறியே?"

"எங்க பாக்கறம்? துண்டு துண்டாத் தருவானுக. அது ரேஷனு, பவுடரு, சேலைத் தவணைப் பணம்னே கரைஞ்சிருது. கன்னத்துல சதை போட்டா எம்பல்லு இத்தனைத் தூக்கலாத் தெரியாது."

"ஒரு கிலோ சுவீட்டு வாங்கித் தரட்டா?"

"அது நேர இடுப்பில போய் சதையாத் தொங்கும்."

"பின்ன...?"

"மசாஜ் பண்ணிக்கணும் கன்னத்தைத் தட்டி. கிள்ளி நீவிவுடுவாங்க. அதில கொஞ்சம் சதை சேந்து பளபளங்கும். இப்ப எங்காலுக்கும் இடுப்புக்குந்தான் குளோஸ்- அப்... கன்னம் உப்பினா மூஞ்சுக்குங் கிடைக்கும். பிறகு ரெண்டு வசனம் கூட தர்வானுக."

"உம் மூஞ்சிக்கு என்னா... முசக்குட்டி கணக்கா..."

அவனை முறைத்தவள் விருட்டென திரும்பி நடந்தாள்.

ஆனால், பண ஆசை அவளை விடவில்லை மூன்றாம் நாளே தேடி வந்தாள்.

"ஏ... மாரி..."என்ற அழைப்பில் இவனுக்கு சிலிர்த்தது.

"மாரியா... யார் அது?" என்று அதுவரை பாவ்லா காட்டியவள், இன்று வலிய வந்து பேர் சொல்லி அழைக்கிறாளே!

"சொல்லு பானு..."

"கோகிலாக்கு மட்டுந்தான் அவள் இருக்கற இடம் தெரியும்..."

"யாரு வசுவா?"

"ஆமா... பின்ன யாரு... உன் பாட்டியா...?'நயந்து விலாசத்தை வாங்கிட்டேன். ஐநூறு தந்தா தந்திடுவேன்..."

"ஐ...ஐநூறா?" இவன் வாய் பிளந்தான்.

ஆனால் குரு அசரவில்லை. விலாசத்தைக் கேட்ட விலை தந்து வாங்கிக் கொண்டான்.

**ம**துரை வெயில் உக்கிரமாய் காய்ந்தது. அகலம் குறைந்த சாலைகளில் அடைய அடையாய் வாகனங்கள்.

'என்னால அதிகம் ஒன்றும் செய்துவிட முடியாது' என்ற தோரணையில் போக்குவரத்து போலீஸ் அவ்வப்போது சில வாகனங்களை நிறுத்தி, சிலவற்றைத் தள்ளிவிட்டுக் கொண்டிருந்தார்.



சென்னையைப் போல இங்கு மக்கள் மிடுக்காய் இல்லை. சற்று பாவமாய் நடந்து போனார்கள்.

பெண்களில் பலர் பருமனாய், முதுகு பக்கம் சதை பிதுங்கும் ரவிக்கைகளில்.

ஆனால், அனைவர் பின்னலிலும் அரை முழமாவது மல்லிகை மணத்தது.

திருப்பத்திற்கொரு இந்து அல்லது கிறிஸ்தவ கோயில். ரொட்டி, கேக் மணக்கும் பேக்கரிகள் நிறைய.

"டிரைவர்! ஏ.சி.யைப் போடுப்பா."

கார் கண்ணாடியை ஏற்றிய நீரஜா உத்தரவிட்ட மறுகணம், உள்ளே குளுமை பரவியது.

"வெயிலைக்கூட சகிச்சுடலாம். ஆனா இந்தத் தூசு... உம்..."

மலைப் பயணத்தின் குமட்டலைத் தவிர்ப்பதற்காக 'அவோமின்' ஒன்றை விழுங்கிய நீரஜாவின் கண் செருகியது. பிடரியில் ஒரு தலையணையுடன் தூங்கியபடிதான் பிரயாணம்.

வசுந்தராவிற்கு தன் சிந்தனைகள்தான் துணை.

அதுதான் நாள் ஒன்றிற்கு அவளுக்கு வாழ்க்கை விதம் விதமாய் வித்தை காட்டுகின்றதே.

புதுவாழ்வு தொடங்க வந்த இடத்தில் புது பிரச்சினைகள் வெகு விநோதமானதும் கூட.

பெரியவர், சேகரனது உரையாடலைக் கேட்க நேர்ந்தபிறகு மனம் அதையே அலசியது. ஒரு கோழியின் முட்டையை மற்றொரு கோழி அடைகாப்பது போலல்லவா இது!

ஆனால் இரண்டு நாளில் அதிர்ச்சி குறைந்துவிட்டது.

ஒரு இளம் காலை நேரம் நீரஜா அழைத்தாள்.

"வசு, இவர் இன்னும் எழுந்திரிக்கலை. ஷட்டில் ஆட வர்ரியா?"

"வரேம்மா... ரொம்பப் பிரமாதமாய் தெரியாது..."

"போதும். கீழே விழும் பந்தை குனிஞ்சு எடுத்தாக்கூட சதை குறையுமே."

ஆனால், ஆட்டம் மோசம் இல்லை- விறுவிறுப்பாய்ப் போனது. முடிந்ததும், சிறு துண்டால் மேனியைத் துடைத்த நீரஜா இவள் நீட்டிய தேநீரை வாங்கி அமர்ந்தாள்.

"உனக்கும் ஒரு கப் டீ ஊற்றிக்கோ வசு."

"இல்லம்மா... அப்புறம்..."

"இல்லை. இப்போ."

"நான் காலையிலேயே காபி குடிச்சாச்சு."

"காபிதான் பிடிக்குமா?" நாசுக்காய் தேநீரை உறிஞ்சிய உதடுகள் கேட்டன.

"அப்படி எதுவும் இல்லம்மா."

"அம்மா வேண்டாமே..."

மவுனமாய் நின்றாள் வசுந்தரா.

"நீ என்னை 'அம்மா'ன்னு அழைக்கறது எப்படியோ இருக்கு. ஆனா எனக்கு ஒரு குழந்தை பிறந்து அது என்னை அப்படி அழைக்கணுங்கற ஆசை உண்டு."

"ம்ம்... கல்யாணமானா எல்லாப் பெண்களுக்கும் வர்ற ஏக்கந்தான்."

"ஊகூம்... ஏக்கம்னு சொல்ல முடியாது. சொல்லப் போனா மாமா சொல்ற வரை. அதுபற்றி நாங்க அலட்டிக்கலை."

நாற்காலியின் நுனியில் வசுந்தரா.

"என்ன சொன்னார், ஏதுன்னு நீ இடையிடையே கேட்க வேணாமா?"



"நீங்க சொன்னால் கேட்டுக்கறேன்... ஆனா கேட்டுத் தெரிஞ்சுக்கற அளவு எனக்கு உரிமையில்ல நீரும்மா."

"வரம்புமீறாம எல்லையில் அழுத்தமாய் நின்னுக்கறே... உம்... கொழும்புல உள்ள எங்க சொத்துக்களை சமீபத்தில்தான் வித்தாங்க. அதில் பெரும்பங்கு தன் முதல் பேரப்பிள்ளைக்குத் தான்னார் மாமா. பெரும்பங்கு என்பது சில கோடிகள்! இப்போதுள்ள சொத்துக்களை கவனிக்கிறோம். பணமும் வருது. ஆனாலும் ரொக்கமாய் கோடிகள் கிடைக்கும்போது இந்தப் பண்ணையை நவீனமாக்கலாம். சுற்றிலும் மேலும் சில நூறு ஏக்கர்களை வளைத்துப்போட்டு இதை ஒரு குட்டி சாம்ராஜ்ஜியம் ஆக்கலாம். விவசாயத்திற்கு வருமானவரியும் கிடையாது. இங்கு வேலை பார்ப்பவர்களுக்கு வேண்டிய பள்ளி, மருத்துவமனை வசதிகளை உருவாக்கலாம். எங்க ரெண்டு பேருக்குமே எஸ்டேட் வாழ்க்கை பிடிக்கும். அவ்வப்போது கால்ஃப் விளையாடப்போனா போதும்..."

"நண்பர்கள் யாரும் இல்லாமல் அலுப்பாயில்லையா?"

"தினமும் நண்பர்களைப் பார்க்கவேணுங்கற நோக்கமில்லை வசு. மாசத்துக்கு சில பொழுதுகள் சந்திப்போம், பேசிப் போம். எஸ்டேட்டை சுற்றிப் பார்த்து, வேலை வாங்கறது சேகரன் பொறுப்பு. கணக்கு வழக்கெல்லாம் நான்."

"ம்ம்... மூத்தவர்?"

"அவர் சின்ன அளவில் ஆறு, ஏழு வருசத்துக்கு முன்னே சென்னையில் தொடங்கின வியாபாரம் இப்போ அமோகமாய் வளர்ந்து, விஸ்திரிச்சாச்சு. எப்போதாவது இங்கே வருவார். இப்படி வாரக்கணக்கில் இங்கே தங்கறது அதிசயம்தான். நான்மூணு மாசத்துக்கு ஒருமுறை ஐதராபாத் போயிடுவேன். அம்மா வீடு அங்கே தான்."

"உம்..."

இவளுக்கு 'பூம் பூம்' மாடு போல தலையசைப்புடன் அமருவது அவதியாய்பட்டாலும், கிளம்ப வழியும் இல்லை.

## 8

"ஞானம்மாவுக்கு காலை உணவு தயார் பண்ண நான் உதவணுமே நீரும்மா?"

இந்தப் பேச்சு எதை நோக்கிப் போகிறது என்று புரிந்தவளுக்குள் உள்ளே பதட்டம் பந்தாய் மோதியலைந்தது.

"ஆயா எல்லாம் பார்த்துக்குவாங்க. உட்காரு."

வலை மீனாய் இவள் தவித்த நேரம்தான் ராகவன் வந்தான்.

நிச்சயம் அது தற்செயல் அல்ல. தெய்வச் செயல் என்றே வசுவிற்கு தோன்றியது.

"உங்களுக்கு 'டீ' எடுத்து வரவா?"

சிறு அரவத்திற்கும் அஞ்சி ஓடத் தயாராய் இருக்கும் அணில் போல எழுந்து நின்றாள்.

"ஆச்சு. பெயிண்ட் வாங்கணும்னு சொன்னியே வசுந்தரா. நான் டவுனுக்கு போறேன். நீயும் வந்தால் வேணுங்கற வர்ணங்களை தேர்ந்தெடுக்கலாம். வர்றியா?" கேட்டான்.

இவள் நீரஜாவை தயக்கமாய் ஏறிட்டாள்.

நீரஜாவின் கண்களில் துளி ஏமாற்றம். ஆனால், புன்னகை மாறவில்லை.

"நீயும் வந்து பத்து நாளாச்சே வசு. போய் வா. தேவைப்பட்டது வாங்கிக்கோ. இரு. பணம் எடுத்துவர்றேன்."



"தேவையில்லை. என்னிடம் போதுமான பணமிருக்கு நீரு" பையைத் தட்டிக் காட்டின ராகவன். "நான் ரேடியேட்டரில் தண்ணி ஊற்ற ஐந்து நிமிடமாகும். அதற்குள் வந்தால் நல்லது" என்றான்.

அவசரமாய் தயாராகி, ஏறி அமர்ந்தபின்பும் அவளுக்கு நம்பத்தான் முடியவில்லை.

மற்றபடி, அவள் இப்படி அத்தனைப் பரிச்சயமில்லாத ஆணுடன் சில மணி நேரங்களைக் கழிக்க மறுத்திருப்பாள்.

வாணலிக்கு அஞ்சி அடுப்பிற்குள்ளேயே விழுந்த கதையாக, நீரஜாவின் பேச்சு... அதன் கோரிக்கையைத் தவிர்க்க நினைத்து... இவனோடு கிளம்பியாயிற்று.

ஆனால் அந்த அனுபவம் அடுப்பின் அனலாய் இல்லை இயல்பான பேச்சும், இடை இடையே சிரிப்புமாய் ஊர் போய் சேர்ந்ததே தெரியவில்லை. வெகு லாவகமாய் கார் ஓட்டினான். சரிவுகளில் வாகனம் சரிந்து திரும்பாமல் பதமாய் சென்றது.

"நீங்க ஓட்டறது தலைசுத்தலை."

"கொஞ்சம் நிதானமாய் செலுத்தணும் அவ்வளவு தான்."

"மேலேறி வந்தப்ப ரொம்ப தலைவலி ராட்டினத்திலே ரெண்டு மணி நேரம் சுழன்றது போல."

"உம்... ஆனா தூங்கின பிறகு சரியாய் போயிருக்கும். குளித்து மஞ்சள் தேவதை போல வந்தாய்..."

அவள் முகம் சிவந்தது .

"நீங்க எப்போ பார்த்தீங்க நான் உங்களைப் பார்க்கலியே."

"தலை உலர்த்த பின் வாசலுக்கு வந்து நின்றாய்..."

"ஆ...ஆமா."

"ஆக சில மணி நேர உறக்கம் அந்தத் தலை சுற்றலைச் சீர்செய்துவிடும். ஆனால் தப்பான சில முடிவுகளை

எடுத்தோமானால் நாள் செல்லச் செல்ல அதன் சுமை வேதனை கூடும்."

இம்முறை அவளுக்கு அவன் பேச்சு புதிராயில்லை புரிந்தது. ஆனால் அவனது கரிசனை புரியவில்லை. தன் குடும்பத்தின் வாரிசு இல்லாத குறை நீங்க அவள் சொல்லும் சம்மதம் உதவுமே. ஏன் அதை விரும்பவில்லை அவன்?

ஆனால் தன் தாய் உயிரோடு இருந்திருந்தால்-

'என்னடீது வினை? உன் பிள்ளையை அவள் சுமக்கறதா? கொடுக்கிறதோட உன் பொறுப்பு ஒஞ்சிடும்னா நினைக்கிறே? இதெல்லாம் விஷ விளையாட்டு- மனசை அல்லாட வைக்கும்' என்று திட்டி தடுத்திருப்பாள். ஆனால் இவனுக்கு ஏன் கரிசனம்?

'ஹில் டாப்'பில் உணவு அருமையாயிருக்கும். இறங்கு என்றவன் வாகனக் கதவைத் திறந்து விட்ட போதுதான் தனக்கு பசிப்பதை உணர்ந்தாள்.

பால் பொங்கலும், 'லேஸ்' போன்று மொறமொறப்பான ரவை தோசையும் வெகு அருமை.

'குறிஞ்சி அங்காடி'க்குள் சென்று தேவைப்பட்ட பொருட்களை வாங்கிக் கொண்டார்கள்.

"எனக்கு ரியல் எஸ்டேட் அலுவலகத்தில் ஐந்து நிமிட வேலையிருக்குது வசுந்தரா சென்னையில் எனக்குத் தெரிந்த ஒருவருக்கு இங்கு வீடுகட்ட தோதான இடம் வேண்டுமாம்" என்றவன் 'சுமோ'வை அலுவலகம் ஒன்றின் முன் நிறுத்தி உள்ளே போனபோது இவள் அருகில் இருந்த பூச்செடிகள் விற்கும் நர்சரியை ஆர்வமாய் ஆராய்ந்தாள். அந்நேரம் தான் மின்னலாய் அந்த எண்ணம் மூளைக்குள் வெளிச்சமிட்டது. இவன் கரிசனத்துக்கு காரணம்- இவளது உணர்வுகள் இல்லை. இந்தப் பெண் காயப்பட்டுப் போவாளோ என்ற அனுதாபமும் இல்லை.



சில கோடி ரூபாய் தன் தம்பிக்குப் போய்விடக் கூடாது என்பதுதான்.

இவள் உதவியினால் பிறக்கக்கூடிய வாரிசினால் அப்பெரும் தொகை தன் தம்பிக்குப் போய்விடக்கூடும் என்பது தான். அதுவரை கிடைத்த மாற்றத்தில் சற்று மலர்ந்திருந்த மனம் இறுகிக் கசந்தது...

என்ன உலகமிது! காசு பணம் என்றால் கூடப்பிறந்த பாசம்கூட மழுங்கிவிடும் அளவில்!

திரும்பும் போது ராகவன் பலமுறை கேட்டுவிட்டான். "என்னாச்சு வசுந்தரா? ஏன் இப்படி சோர்ந்து போயிட்டே? மெள்ளத்தானே கார் ஓட்டுறேன். தலைசுத்துதா" என்று.

"இல்லை அதிகம் சாப்பிட்டுட்டேன் போல... அதான்" பொய் கூறி கண்ணை இறுக்கிக் கொண்டாள்.

இவனும் காலாகாலத்தில் திருமணம் செய்திருந்தால் இவன் பின்னால் 'அப்பா... அப்பா' என்று ஒன்றிரண்டு ஓடித்திரியாதா?

நாய் காவல் காத்த தேங்காய் மனப்பான்மை அல்லவா இது? தனக்காகவும் உடைத்து சுவைக்கத் தெரியாது- பிறருக்கும் தர மனமின்றி உருட்டிக் கிடக்கின்றானே!

உம்... உலகம் அவ்வளவு தான்- அப்படித்தான் என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டவள், வீடு போய் சேர்ந்தபின், அன்று முழுக்க மர வீட்டை வர்ணமடிக்கும் வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாள்.

நீண்ட துணி ஒன்றைத் தன் கழுத்தைச் சுற்றி கட்டிக் கொண்டாள். தலைமுடியை இறுக முடிச்சிட்டுவிட்டு காரியத்தில் இறங்கியாயிற்று.

உப்புத் தாள் கொண்டு, உதிர்ந்து, விரிந்து நின்ற பழைய வர்ணத்தை உரசித் துடைத்தாள். தேங்காய் சிரட்டையில் மண்எண்ணெய், தூரிகை சகிதம் வர்ணத்தைப் பூசலானாள்.

ஏற்கனவே அவளுக்கு ஓவியம் வரைவதில் பயிற்சி உண்டென்பதால் சீராக, பிசிறின்றி பரவியது வர்ணம்.

மாலை, சற்று ஒளி மங்கியபின் விரல்களை உதறி விட்டு, பிடரியை நீவிக் கொண்டாள். தூரிகைகளை மண்எண்ணெயில் அலசி கழுவியவள், விளக்கைத் தட்டப்போன போதுதான்-ராகவன் வாசற்படியில் நிற்பது தெரிந்தது.

"தலைவலி என்றாயே? இப்படி வந்தவுடன் இதை ஆரம்பிக்கலைன்னா என்ன? மணிக்கணக்காய் இந்த எனாமல், மண்எண்ணெய் வாடையில்... உம்?"

"நேரம் போ... போனதே தெரியலை."

"இதை உருவாக்கியபோது எனக்கும் அப்படித்தான். நேரம் போனது தெரியாத ஈடுபாடு."

"இந்த வீடு... நீங்கள் செய்ததா?"

"மிஸ் கிளேர் என்று எங்களுக்கு வீட்டோடு ஒரு வெள்ளைக்கார டீச்சரம்மா உண்டு அவங்க கற்றுத்தந்த கலை இது."

"ஓ... ரொம்ப அழகு. எத்தனை வயதில் இதைச் செய்தீங்க?"

"பதினெட்டு வயசு. பூனை மீசை அரும்பிய பருவம். முழுநேரம் சிறு ரம்பமும் ஆணிகளுமாய் இங்கேயே கிடப்பேன். 'என்னடா இப்பவே உன் பெண்டாட்டிக்கான வீட்டைக் கட்டறியா' என்று அப்பா, அம்மா கூட கேலி பேசுவாங்க. எனக்கும் கூட ஏதோ இன்பக் கற்பனைகள் இதை உருவாக்கும் போது..." அவன் கண்கள் கற்பனையில் லயித்திருந்தன.

"உனக்கும் கூட இதன் மீது நல்ல அலாதி ஈர்ப்பு இல்லையா வசு?"

அன்று காலை இவளது பெயரை அவன் முதன் முதல் உச்சரித்த போது புல்லரித்தது. இப்போது சுருக்கி அழைக்க... பிடரியில் இன்பக் குறுகுறுப்பு.



"அப்போதே இத்தனை ஆர்வமாய் ஒரு வீட்டை உருவாக்கிய நீங்கள் இத்தனை வருடங்கள் கழித்தும் உங்களுக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்கிக்கொள்ளாதது தப்பு... இல்லியா?" கேட்ட பிறகுதான் தன் துணிவு துடுக்காய் தோன்ற-

"உம்... வந்து பெரியவங்க வருத்தப்படுவாங்க... இல்லியா?" சமாளித்தாள்.

"உண்மைதான்... ஆனால், காதல் மழை போல இல்லையே... உத்தமர்கள், பத்தினிகள் 'பெய்' என உத்தர விட்டதும் பொழிந்து தள்ள!"

"அழகான பேச்சு. ஆனால், ஆரோக்கியமானதில்லை."

"அப்போ என்ன செய்யலாம் என்கிறாய்?" அதுவரை கதவில் சாய்ந்து நின்றவன் உள்ளே வந்தான். அவளை மிக நெருங்கி நின்ற போது இவளுக்கு வியர்த்தது!

"இல்ல... ஒண்ணுமில்லை..." குழறினாள்.

"நீ தள்ளி நின்னா கிழவி நெருங்கினா குமரி" சிரித்தான்.

"ஆங்..."

"எட்டி நின்னா கிழவியாட்டம் பேசறே- நெருங்கினா நடுங்கறே..."

"இல்ல... ஞானம்மா தேடுவாங்க..."

"இப்போ- பாப்பா!" அவன் கண்சிமிட்ட இவளுக்கே சிரிப்பு உதட்டைக் கீறியது.

"நான் கிழவியாட்டம் பேசினது தப்புதான்."

"அம்மா இருக்கும்வரை சதா இதே பேச்சுதான். அக்கறையில்தானே இது..."

"வேலைக்கு வந்த நான் பேச அவசியமில்லை. தப்பு தான்."

அவளை ஒரு கணம் ஆழ்ந்து பார்த்தவன்- "நீ இங்கே வந்ததே தப்புதான் வசு..." என்றான் மெள்ள!

அது வெகு சுத்தமும், நவீனமுமான மருத்துவமனை.

இவளின் எடையைப் பார்த்ததிலிருந்து பரிசோதனைகள் தொடங்கின. இரத்த அழுத்தம், இரத்தம், சிறுநீர் பரிசோதனைகள் என்று நீண்டு இ.சி.ஜி.க்காக படுக்கவைக்கப்பட்டாள். அனுசரணையாய் கூடவே நின்ற நர்ஸ் லீலா, "என்ன, தயக்கம்? உங்க இதயம் பழுது இல்லாமல் இயங்குதான்னு பரிசோதிக்கப் போறோம். ரவிக்கையைத் தளர விடுங்க. கூச்சப்படாதீங்க மூணே நிமிடம்" என்று தைரியம் சொன்னாள்.

சுறுசுறுப்பாக இருந்த லீலா நல்ல அழகும் கூட. வெள்ளைச் சீருடையில் புறாவைப் போல சுற்றி வந்தாள். முகத்தில் மாறாத சிரிப்பு.

பரிசோதனை முடிந்து உடைகளைச் சீர்செய்த வசு- "நான் இதுவரை மருத்துவமனைப் படியே மிதிச்சதில்லை அதான்..." தன் பயத்தை விளக்கினாள்.

"விபத்து நேர்ந்தால் மட்டுந்தானா கார் பட்டறைக்குப் போகுது? சர்வீஸுக்கும் போகுதில்லையா? அது போல உடல் நலமா இருக்குதான்னு நிச்சயப்படுத்திக்கத்தான் இத்தனை சோதனைகள். உங்களுக்கு நல்ல ஆரோக்கியம்தான். பிறகென்ன பயம்?"

"இந்த மருந்து வாடையே வெறுப்பாய் தோணுது."

"என் கணவருக்கு வயிற்றில் கட்டி. கட்டியை அறுவை செய்து அப்புறப்படுத்த பல ஆயிரங்கள் ஆகும். அதனால் நான் அவரை இங்கே கூட்டிட்டு வரமுடியாத நிலை. அவருக்கு தினம் வலி... வேலைக்கும் போகமுடியாத அவஸ்தை. இங்கே வந்தால் அவர் குறை தீரும். இது பலர் உடல் நலம் காக்கிற- மீட்டுத் தர்ற கோவிலுங்க வசுந்தரா."

"மன்னிக்கணும். புரியாமல் பேசிட்டேன். எங்கம்மாவுக்கு மருத்துவம் பார்த்துக்கறதில் ஒருவித வெறுப்பு. முறையாய்



வைத்தியம் பார்த்திருந்தால் இப்ப உயிரோட இருந்திருப்பாங்க... தப்பா நினைக்காதீங்க..."

"தப்பில்லை. நான் என் சொந்த சமாச்சாரம் சொன்னது கூட தப்புதான். உங்களுக்குப் புரியட்டுமேன்னு சொன்னேன். ஆரம்பத்திலேயே சிகிச்சை தந்தால் எல்லா நோய்களையும் விரட்டி அடிச்சுடலாம். பயந்து, வெறுத்துத் தள்ளிப்போடறதிலே நோய் முத்திடுது. வருடத்துக்கு ஒரு தடவை எல்லாரும் முழுசா செக்-அப் செய்துக்கறது நல்லது."

"உம்... உங்கள் கணவருக்கு விரைவில் சுகம் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன் லீலா."

"நன்றி."

"குழந்தைங்க இருக்கா?"

"ஒரு பொண்ணு மூணு வயசாச்சு."

"நம்ப முடியலை நீங்களே இன்னும் சின்ன பொண்ணாட்டம் இருக்கீங்க" உள்ளே துக்கமிருந்தாலும் முகத்து சிரிப்பு வாட ஆச்சரியப்பட்டாள் வசு."

"என் முகம் பளிச்சுன்னு இருந்தாத்தானே உங்களுக்கு தைரியம். நா னும் அழுது வடிஞ்சால் நீங்க ஓடிப் போயிருவீங்க."

லீலாவிற்கு நன்றி தெரிவித்து விட்டு மருத்துவரின் தனி அறைக்குள் நுழைந்தாள்.

## 9

டாக்டர் பாகீரதி அவளை அந்தரங்கமாய் பரிசோதிக்க, கூசிப்போனாள்.

“உன் கருப்பை நல்ல வளர்ச்சியோட இருக்கான்னு பரிசோதிக்க நினைச்சேன்... ஆனா நீ இன்னும் கன்னிப் பெண்தான்?”

“ஆ... ஆமா டாக்டர்.”

“அப்போ இந்த முயற்சிக்கு எப்படி சம்மதிச்சே?”

“சந்தர்ப்பம் அப்படி...” தடுமாறினாள்.

“நான் கேட்பது உன் முழு சம்மதம் இதற்கு உண்டா என்பதுதான்.”

“உண்டும்மா.”

“நீரஜா உன் முழு சம்மதம் பெற்றிருக்கலாம். ஆனா முழு விபரம் சொன்னாங்களான்னு தெரியலை- நான் சொல்றேன்.”

டாக்டருக்கு வயது ஐம்பதிற்குக் குறையாது என்றாலும் அழகும் கவர்ச்சியும் குறையாத தோற்றம். சதா சுறுசுறுப்பாய் இருப்பதில் உடல் கட்டுக்குள் இருந்தது.

வெளிர் நீல பருத்திச் சேலை. முத்து ஆபரணங்கள்.

சன்ன தங்கக் கண்ணாடி வழியே பிரகாசமான விழிகள் வசுந்தராவை ஊடுருவின. உதடுகளில் உறைந்துவிட்டாற் போன்ற ஒரு புன்னகை.

“இந்தியாவில் திருமணமான தம்பதிகளில் 10 முதல் 15 சதவிகிதம் குழந்தைப் பேறு இல்லாம தவிக்கிறாங்க. மலட்டுத் தன்மையில் பாதிக்குப் பாதி ஆணும் பெண்ணும் பொறுப்பு. இந்த கேசில் நீரஜாவிற்கு கருமுட்டை உற்பத்தி சீராய் இல்லை. ஆனால் ஆரோக்கியமான கருப்பை. அவளால் ஒரு குழந்தையை உருவாக்க முடியாவிட்டாலும் சுமக்க முடியும்.”

“உம்... சொன்னாங்க.”



“ஆண் விந்துவின் தலை பாகத்தில் பாரம்பரிய குணாதி சயங்களை நிர்ணயிக்கும் மரபு அணுக்கள் உண்டு. அதை நாங்கள் ‘குரோமோசோம்ஸ்’ என்போம்.”

டாக்டர், தலைபருத்த புழு போன்ற அணுக்களின் படத்தைக் காட்டினார். “இதிலிருந்த 23 மரபணுக்கள் பெண் சினை முட்டையில் உள்ள 23 மரபணுக்களோடு இணைந்து அவர்கள் குழந்தையின் குணாதிசயத்தை நிர்ணயிக்கின்றன.”

“புரியுதுங்க டாக்டர்.”

“1978-ல் கேம்ப்ரிட்ஜ் நிபுணர்கள் கண்டுபிடித்த சோதனைக் குழாய் குழந்தை முறை இது. அதில் ஊசி மூலம் பெண்ணின் சினை முட்டையை வெளியே எடுத்து, சோதனைக்குழாயில் வைக்கிறோம். பிறகு அதனுடன் ஆண் விந்தணுக்களை இணைத்துக் கருவுறச் செய்கிறோம். இப்படி உருவான கருவை மனைவியின் கருப்பையில் செலுத்தி கருவை வளர விடுகிறார்கள்...”

“நீரும்மா சுமந்து பெற்றாலும், குழந்தையின் மறுபாதி நான்தான். அப்படித்தானே?”

“அதனால்தான் இந்த முயற்சிக்கு ஒரு நல்ல பெண் அமைய வேண்டும் என்பதில் நீரஜா, பிடிவாதமாய் இருந்தாள். படித்த, பண்பும் ஒழுக்கமுமான பெண் தேடினாள். நீ கலைகளிலும் திறமைசாலி என்பதில் அவளுக்கு வெகுதிருப்தி. சங்கீதத் திறமை, குரல், புத்திசாலித்தனம் இவை எல்லாம் பெரிய பிளஸ். ஆனால்...”

குழப்பமாய் பார்த்தாள் வசுந்தரா.

“நீ கன்னிப்பெண். உன்னை இந்தச் சங்கடத்திற்கு ஆளாக்குவது ஏதோ போல...”

“பரவாயில்லை டாக்டர். நான் வலி பொறுத்துக்குவேன்.”

இதமான சிரிப்புடன் மருத்துவர் அவள் தோளைத் தட்டினார். "நான் குறிப்பிட்டது மனச் சங்கடத்தைப் பெண்ணே. தாலி ஏறாமல் தாய்மை என்பது ஒரு சிக்கலான அனுபவம். அது மறைமுகத் தாய்மை என்றாலும் கூட அதைத் தவிர வெகு எளிதாக நாங்கள் சினைமுட்டையை எடுத்து விடுவோம். முதலில் உனக்கு மாதா மாதம் சினைமுட்டை உருவாகிறதா என்பதைக் கண்டறிய வேண்டும். இன்றிலிருந்து தினம் காலையில் உன் 'டெம்பரேச்சரை' குறித்துவை. என்ன?"

"சரி டாக்டர்."

"பி.பி.டி. அதாவது 'பேசிக் பாடி டெம்பரேச்சர்' தெரிய வேணும். மறுமாதம் நீ இங்கே வரும்போது மேலும் சில பரிசோதனைகள்.. உம்?"

இவள் நிம்மதியாக எழுந்தாள்.

ஆக நீரஜா சொன்னது உண்மைதான்.

"உன்னை அவசரப்படுத்தி முடிவெடுக்கச் சொல்லவில்லை வசு. நீ அறியாமலோ, உன் சம்மதம் இன்றியோ ஏதும் நடக்காது. திருமணமாகி, குழந்தைகள் பெற்ற ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கத்தான் டாக்டர் பாகீரதி சொன்னாங்க. இதற்கென்று விளம்பரம் தரமுடியாதே! அதுதான் இத்தனை மூடு மந்திரம். முதலில் மருத்துவர் மூலமாகவே சிலர் விவரம் தெரிந்து வந்தாங்க. அதில் பலர் கறுப்பு. வெளுப்பான எங்களுக்குக் கறுப்பு குழந்தை பிறந்தால்... புருவங்கள் உயருமே! முகங்களில் திருத்தம் இல்லை. காசுக்கு ஆசைப்பட்டு வந்த கொடூர முகங்கள். படிப்பில்லை. பண்பான பேச்சில்லை. அப்படி ஒருத்தியின் கருவைச் சுமக்க எனக்கு மனமில்லை."

விளம்பரம் கண்டு வந்த பதில்களில் உன்னுடையது என்னை உடனே கவர்ந்தது. தெளிவான கையெழுத்து. பண்பான வார்த்தைகள். அடுத்து வந்த உன் புகைப்படமும் பார்த்தபின் ரொம்பப் பிடித்துப்போனது. பழகின பிறகு பூரண திருப்தி.



இப்போ இரண்டு வாரம் கழித்துதான் உன்கிட்டே இதுபற்றி பேச சமயம் வாய்ச்சுது. இத்தனைக்குப் பிறகு நீ இந்தத் திட்டத்தை மறுக்கக்கூடும் என்பது எனக்குத் தெரியும். உன்னிடம் இருந்து கிடைக்கக் கூடிய கருமுட்டைக்கு 'ஒரு இலட்சம்' என்று விலை நிர்ணயித்து விட்டதும்கூட தவறுதான். யோசிச்சு முடிவு சொல்லு வசு.

'ஐயோ... இதென்ன வினை. வேண்டாம் என்றும் உடனே மறுத்துவிடாதே'.

'இதிலென்ன சரி என்றும் சம்மதிக்காதே. யோசிச்சு முடிவெடு' என்று நீரஜா வேண்டுகோள் வைத்ததில் எல்லாம் பழுதே சொல்ல முடியாது.

"இப்படி எனக்குக் குழந்தை பிறந்தால்... அதைக் கண்ணும் கருத்துமாய் வளர்க்க, முதல் ஓரிரு ஆண்டு நீ உதவக்கூடும். நீ தங்கினால் நல்லது. இல்லை, குழந்தைகிட்ட பாச உணர்வை வளர்த்துக்கறது தப்பு. பிறகு பிரிவு வேதனை தரும்னு நீ நினைச்சாலும் சரி, உடனே கிளம்பிடலாம். எனக்குப் புரியும் யோசி..."

ஒருநாள் முழுக்க யோசித்ததில் அவள் சொன்னது- சம்மதம்தான்.

காசுக்காக இல்லை- கருணைக்காக!

இவள் மறுத்துவிடுவாளோ என்ற பதட்டம் நீரஜாவின் முகத்தில் அப்பட்டமாய் தெரிந்ததால் இருக்கலாம். பெரியவர் முகத்தில் கூட பதட்டம். இவளுக்கு நீரஜாவின் கணவன் சேகரன் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் சங்கோஜமாய் இருந்தது.

விசித்திரமான இக்கட்டு இது!

சற்று இயல்பாகப் பேசி பழகிய ராகவன் 'சட்'டென்று விலகிவிட்டது போலவும் தோன்றியது. முகத்தில் புது இறுக்கம். கண்களில் வாட்டம்.

சோர்ந்த சேகரனது விழிகள் அவளை அடிக்கடி ஏதோ கேள்வியுடன் இவளில் நிலைக்க... இவளுக்குள் இனமறியாத தவிப்பு.

தன் பக்கத்து நண்பர்களிடம் இதுபற்றி பேசி, அலச முடிந்தால் நலம். ஆனால் அத்தனை நெருக்கமாய்... பரந்தமனமும் புரிந்து அறிவுரை தரும் தகுதியுடன் யாருமில்லையே! கோகிலா அக்காவிற்கு இந்த சமாச்சாரத்தைப் புரியவைக்கவே அரை நாள் ஆகும்.

முடிவில் 'இந்த விஷ விளையாட்டு நமக்கு எதுக்கடிம்மா' என்பாள் அல்லது. 'நா இன்னாத்தக் கண்டேன் வசு? ஒரு இலட்சம் சின்னத் தொகையா... அந்தக் காலத்தில் கே.பி. சுந்தராம்பா அம்மா வாங்கின தொகை. காரியத்த முடி. காச வாங்கிக்கோ கிளம்பிரு' எனலாம்.

ஆக கோகிலாவிற்கு- 'நான் இங்கு நலம். நீங்கள் நலம் தானே' என்ற ரீதியில் ஒரு சம்பிரதாயக் கடிதம் மட்டுமே எழுதிப் போட்டாள்.

மதுரை போய் வந்து ஒரு வாரம் ஆயாயிற்று. தினம் காலை உடம்பு சூட்டினை அளந்து- பட்டியலிட்டு வந்தாள். அன்றிரவு கட்டிலின் அருகே தெர்மாமீட்டரை எடுத்து வைத்துவிட்டு சன்னலை மூடும் நேரம்தான் அவனைப் பார்த்தாள்.

ராகவன்.

நடுநிசி நேரம் இங்கு ராகவனுக்கு என்ன வேலை?

குருவின் நினைப்பு மீண்டும் அருவெறுப்புடன் வந்தது.

ஆனால் ராகவன் நிற்கவில்லை. இந்தப் பக்கமாய் பார்க்கவுமில்லை. நடந்த போய்க்கொண்டிருந்தான். ஆனால்... நடை ஏன் இப்படித் தள்ளாடுகிறது?



சால்வை ஒன்றை அவசரமாய் இழுத்துப் போர்த்தியபடி ஓடினாள். வசுந்தரா. பின் வாயிலின் இரும்புத் தாழினை ஓசை இன்றி திறந்து கொண்டு-

ஒரு ஆண் இரவில் நடப்பது அத்தனை அதிர்ச்சியான விசயமில்லை. எளிய குடும்பங்களில் இயற்கை உந்துதலுக்கு, பீடி வாங்க, புகைக்க என்று அன்றாட நடப்புதான்.

ஆனால் நான்கு பேரின் ஏவலுக்கு எட்டு பேர் ஊழியம் செய்யக் காத்திருக்கும் இங்கே... எதற்கு? காலார நடக்கவோ? அல்லது மனம் சரியில்லையா?

ஆனால் இத்தனைச் சோர்வாய் ராகவனது தோள்களைப் பார்த்ததில்லை. உயரத்துக்கு ஏற்ற அகன்ற தோள்கள் அவனுக்கு.

கத்தி வெட்டாய் விறைத்து நிற்கும் பருத்தி சட்டைகள் கூட அவனுக்கு கம்பீரந்தான்.

'சுமோ' ஓட்டும்போது மட்டும் வாகனத்தின் பின்னிருக் கையில் எப்போதும் கிடக்கும் தோல் ஜெர்க்கினை எடுத்து அணிந்து கொள்வான்.

இந்நேரம் கசங்கிய சட்டையுடன் எங்கே... அதிலும் அந்த நடை. குடித்தவன்... போன்ற தள்ளாட்டத்தில்...?

இங்கு யாரும் குடித்து இதுவரை அவள் கண்டதில்லை. வேலையாட்கள் கஞ்சா புகைப்பதாய் கேள்விப்பட்டதோடு சரி, பாட்டில்கள் கண்ணில்படவே இல்லையே?

சில நாட்களாகவே ராகவன் முகத்தில் வாட்டந்தான். பெற்றவர், உடன்பிறந்தவனிடம் பகிரக்கூடாதா? அவர்களிடையே நேசம், நெருக்கம் இல்லை எனவும் முடியாது.

ஞானம் ஆயா ராகவனது காதல் பெற்றோரால் நிராகரிக்கப் பட்டு கை கூடாமல் போனதாய் சொன்னபிறகு இவள் தந்தை, மகன் உறவை சற்று ஊன்றியே கவனித்திருந்தாள்.

இன்னும் பழைய கசப்புடன் மகன் தகப்பனைத் தவிர்க்கிறானா, வார்த்தைகளால் தண்டிக்கிறானா என்று...

இல்லை. இயல்பான உறவுதான். அதிர்வேட்டு சிரிப்புகளும், கேலி கலாட்டாவுமாய் கலகலக்கும் வீடில்லை இது. ஆனால் சுமூகமான பேச்சு. அக்கறையுடன் தான் இருந்தது.

ஆக இவன் மாடி வீட்டின் அன்பில்லாத ஏழை இல்லை.

குளிர், கன்னங்களை மூக்கு நுனியை நிமிண்டியது. சால்வையை இறுக சுற்றியவள், கால்களை எட்டிப்போட்டாள்.

ராகவனை எங்கே காணவில்லை? அந்தத் தள்ளாட்ட நடை அதற்குள் அதிகத் தொலைவு போகமுடியுமா?

குரல் கொடுக்கலாமா? ஆனால் அவனை எப்படி அழைப்பது? பெயர் சொல்லியா, ‘சார்’ என்றா... அல்லது ‘சின்னைய்யா’வா?

வீட்டிலிருந்து வந்த வெளிச்சம் மங்கியிருந்தது. இங்கு முழுக்க ஆரஞ்சு, பேரி, பிளம் மரங்கள். அவற்றின் வழியே இந்த இருளில் நடப்பதா? கையில் டார்ச் எடுத்து வந்திருக்கவேணும்...

ஒருவேளை ராகவன் மறுபடி வீடு போய்விட்டாரோ... இவள் பாதி இராத்திரியில் பெற்றவளைக் காணாமல் தூக்கத்தில் எழுந்து துழாவும் குழந்தையைப் போல அலைவது முட்டாள் தனம் இல்லையா?

தூரத்தில் அசைவு தெரிந்தது. ஏறக்குறைய ஓடினாள். மற்ற நேரமாயிருந்தால் இந்த மையிருளும் கரும்பூதங்களாய் கிளைபரப்பில் மரங்களும் அச்சுறுத்தியிருக்கும். இப்போது கண்களுக்கு அவையேதும் பொருட்டில்லை.

“ராகவன்... சார்... நில்லுங்க” குரல் அனுப்பினாள். உருவம் நின்றது. ஓரிரு கணங்கள் தான். பிறகு மேலும் வேகமாய் நடந்தது.



இவளுக்குப் பரிச்சயம் இல்லாத இடம் இது. கால்கள் தயங்கின. விழிகளைச் சுருக்கி, இருட்டைக் கிழித்து முன்னேற வேண்டியிருந்தது.

‘சாரட்’ என்று ஒரு கிளை அவள் முகத்தைக் கீறியது.

“ஸ்ஸ்... ஆ...” காந்திய கன்னத்தைப் பற்றிக் கொண்டாள்.

மனசுக்குள்ளும் எரிச்சல் பரவியது. இவளது அழைப்பு கேட்டபின்பும் நில்லாமல் நடந்து போனால் எப்படி?

இம்முறை குரல் சற்று ஆங்காரமாய் எழும்பியது. “நில்லுங்க... எங்கே போறீங்கன்னு சொல்லிட்டுப் போங்க. இப்படி சொல்லிக்காம...”

“சாகப் போறதுக்குக் கூட சொல்லிக்கணுமா... போறேன்... சரியா?”

நாக்கு தடித்துவிட்டது போல மொண்ணையான பேச்சு.

“ஐயோ... என்ன சொல்றீங்க? ஏன் பேச்சு குழறுது?”

“வேலுசாமிகிட்ட கேளு... நாளைக்குச் சொல்வான்...”

இவள் சற்று முன்னேறினாள்.

“வராதே வசு... வந்தால் நான் ஓடுவேன்.”

“வேலு என்ன சொல்வான்?”

“கஞ்சா தந்ததை...”

“கடவுளே...! கஞ்சா புகைச்சீங்களா?”

“கவலை மறந்துரும்னான்.”

“அந்த முட்டாள் எதுவும் சொல்லுவான். உங்களுக்குத் தெரியாதா, அது உடம்புக்குக் கேடுன்னு?”

“இல்ல...சுகந்தான்.”

"சரி, குடிச்சிட்டு உள்ளே படுத்துக் கிடக்கவேண்டியது தானே? எங்கே போறீங்க?"

"மலை உச்சியிலிருந்து குதிக்க!"

'டீ' குடிக்கப் போறேன் என்பதை போல வெகு இயல்பாய் வந்தது பதில்!

## 10

முதன்முதலில் அவனை சந்தித்த மலைமுகடு அருகில் தான் என்பது நினைவிற்கு வந்தது.

'தனியாக வரவேண்டும். தவிர இன்னும் சில நூறு அடிகள் வைத்தால் சொர்க்க வாசலை மிதிக்க வேண்டியது தான்' என்று பரிகாசமாய் அன்று தன்னை எச்சரித்தவன் இன்று அங்கு போவானேன்? தப்பு- தற்கொலை என்பது நரக வாசலுக்கான திறப்பல்லவா?

பதட்டத்தில் இவள் நடை மேலும் தடுமாறியது. ராகவனை எட்டமுடியுமா? முடிந்தாலும் தடுக்கக்கூடுமா? சந்தேகம்தான்... அழுகை முட்டியது. இனி போய் வேறு ஆட்களைத் துணைக்கு அழைத்துவர அவகாசம் இல்லை...

"ஏன் ராகவன்... ஏனிப்படி செய்றீங்க?" பேச்சுக் கொடுத்தாள்.

"உம்... உன்னால்தான்! நீ இங்கே வந்ததே தப்புன்னு சொல்லவ?"

"சொன்னீங்க... ஆனா எனக்குப் புரியலை..."

"மண்டு... அழகான மண்டு..." குழறலான அவன் சிரிப்பு அங்கு அமானுஷ்யமாய் ஒலித்தது.



"எங்கப்பா பிரார்த்தனை... மேலேர்ந்து அம்மாவோட ஆசி எல்லாம் பலிச்சிடுச்சு வசு... பெய்யென காதல் பெய்திருச்சு... என் மனசில..." உணர்ச்சி பெருக்கில் அவன் குரல் மேலும் நைந்தது.

"என்ன சொல்றீங்க?"

"உம்மேல் எனக்குக் காதல் காதல்...ங்கறன்..."

உறைந்தாள்-இப்போது குளிரவில்லை. ஒருவித வெப்பம் உடம்பெங்கும் 'குறுகுறு' என்று நண்டு போல பரவியது.

"கஞ்சா புகைச்சதிலே... உங்க புத்தி பிறழ்ந்திருச்சு..."

"இல்ல... புத்தியில் இருக்கிறதை வெளியச் சொல்ல... பலம் வந்திருக்கு..."

"சரி, அப்ப ஏன் சாகணும்?"

"நீ என் தம்பி பிள்ளைக்கு, அம்மாவாகப் போறியே..."

"அதில் ஏதும் உடல் தொடர்பில்லை..."

"ஆனால், உறவு அதுதான்... நெருடலை?"

இவள் மனம் எம்பித் துடித்தது.

அவனைக் காணும் போதெல்லாம் மனதோரம் ஒரு இன்ப நமைச்சல் இருந்ததே... அதென்ன? காதலா... அதன் விளிம்போ?

ராகவனை எப்படியேனும் காப்பாற்றிவிட வேணும். அவன் இன்றி இந்த உலகம் - ஊகூம்... அப்படி ஒரு கற்பனை கூட சகிக்கவில்லை.

மெள்ள நடந்தாள்.

"நான்... அதுக்கு சம்மதிக்கப் போறதில்லை..."

"எதுக்கு?"

"நீரஜாவின் திட்டத்திற்கு இப்ப நிம்மதியா?"

"இல்ல... அது தப்பு!"

என்னடா இது வேதாளம் மீண்டும் மரம் ஏறுகிறது என்று தவித்தாள்.

"என்ன தப்பு?"

"அவள் ஆசையா அழைச்ச உன்னை... நான் கட்டிக்கப் பாக்கறது தப்பு. ஏதோ கோடிக்காய்... அந்தக் காசுக்காய் நான் இப்ப பண்றேனோன்னு கூட யோசிப்பாங்க... வேணாம் நீரு நல்ல பொண்ணு... உன் பிள்ளைக்கு எத்தனை சொத்துக்கும் வாரிசா வர தகுதி உண்டு... உன் பிள்ளை தான் இங்க... வாரிசு..."

இப்போது அவனை மிக நெருங்கி இருந்தாள்.

அரை இருளில் அவனைக் கூச்சமின்றி விழிநிறைய பார்க்க முடிந்தது. விழி வழியே அவனைத் தன் மனதுக்குள் நிரப்பிக் கொண்டாள்.

"நான் உங்க குழந்தைத் தாயானாலும் அதேதானே ராகவன்...?"

இதைச் சொல்ல தனக்கு எப்படி துணிவு துளிர்த்தது தெரியவில்லை... ஆனால் சொல்லிய கையோடு அவன் தோளில் சாய்ந்தாள் வசுந்தரா!

அது ஒரு உயிரைக் காப்பாற்ற நடத்திய நாடகமா அல்லது தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்த கிடைத்த சந்தர்ப்பமா?

இதில் குழப்பம் என்ன?

வேறு ஒரு ஆடவனிடம் இந்த வார்த்தைகளைப் பேசியிருப்பாயா... அத்தனை இயல்பாய் தோளில் சாய்ந்திருப்பாயா? புத்தி அதட்டிக் கேட்டபின் தெளிவு வந்தது.

குருவைப் பற்றி நினைத்தாலும் உதறும் உடல், தன் குழந்தையின் மறுபாதி சேகரனுடையதாய் இருக்கக்கூடும் என்பதில் தவித்த மனம் ராகவனிடம் எத்தனை ஆனந்தமும் இயல்புமாய் உரசியது... ஒட்டிக்கொண்டது!



ஊசி இத்தனை இடம் தந்தால் நூலுக்குக் கொண்டாட்டம் தானே! சாய்ந்தவளை கட்டிக்கொண்ட ராகவன் இதற்கென்றே யுக யுகமாய் தவமிருந்தவன் போல அவளை இறுகித் தழுவினான்.

"உண்மை உண்மைதானா வசு...? பொய்யில்லையே?" இளம் காது மடலுக்குள் அசைந்த அவன் உதடுகள் அவளை உருக்கின.

"இல்லை..."

"ஓ...! நம்பவே முடியலை... வசு..."

"என்னாலுந்தான்..."

"நம்பச் செய்யட்டுமா?".

"ம்ம்..."

அவள் மோவாயை நிமிர்த்தி மெள்ள முத்தமிட்டான். மிருதுவான அந்த ஸ்பரிசத்திற்கு தீயாய் தகிக்கும் சக்தி எப்படி? உடம்பு முழுக்க பரவிய தகிப்பு அவள் கால்களைத் தொய்யச் செய்தது.

உடம்பு பாகாய் இளகியது. இந்த ஈர்ப்பு... பரவசம்... நேசம்... இதுதான் காதலா?

ஆனால் இவளது காதலுக்கு மதிப்பு உண்டா? காசில்லாத, இப்பேதையின் விருப்பம் பூர்த்தியாகுமா?

அதுவும் இத்தனை செல்வம், செல்வாக்குள்ள வீட்டில்?

காதல் போதையின் முன் கஞ்சாவின் போதை வலு இழந்து போனது. அல்லது சற்று நேரம் தூயகாற்றில் நடமாடியதாலோ என்னவோ ராகவன் தெளிந்து தெரிந்தான். நடை நேராயிற்று குரலும் அதிகம் குழறவில்லை.

"இப்போ உன்னை நேராய் என் அறைக்குத்தான் அழைத்துப் போகப்போறேன், தெரியுமா?"

"நல்லாத்தான் இருக்கும் இந்நேரத்திலே!" போலிக் கோபந்தான்.

"அட... அதுக்கில்லை வசு...நோக்கம் வேறேதும் இருந்தால் அதற்கு இதைவிட தனிமையும் தோதுமாய் இடம் வேறு எது?"

செல்லமாய் தலையில் முட்டினான்.

"ச்சே... அப்புறம் என்ன."

"மிஸ். கிளேரின் புகைப்படத்தை உனக்குக் காட்டணும்."

"இப்போ அதுக்கென்ன காலை வர்றேன்..."

"பாரேன் புரியும்...,"

"இப்ப சொல்லுங்க. நான் காலை வர்றேன்..."

"நீ கொஞ்சம் அவங்க ஜாடை...."

"ஒகோ! அதான் காதல் மழை பொத்துக்குச்சாக்கும்.

இத்தனை சரச சல்லாபமாய் பேசுவது தான்தானா வசுவிற்கே ஆச்சரியம்தான்!"

"நான் அந்த பொம்மை வீட்டை உருவாக்கின நேரம் 'இத்தனை, கலை, அழகு உணர்வுடன் உனக்கு ஏற்ற ஜோடி அமையணும்னு' சொல்வாங்க மிஸ். கிளேர்... ஒரு சமயம் 'என்னைப் போலவே ஒருத்தி வருவா பாரு உனக்கு'ன்னாங்க. 'அம்பது வயசுப் பொண்ணா'ன்னு நான் அலற. 'இல்லை ராஸ்கல்... என்னளவு உம்மேல் அன்பும் புரிதலும் கொண்ட மனுசின்'ன்னாங்க."

"ம்ம்..."

"முதன்முதலில் உன்னை தலை முடி உலர்த்தியபடி பார்த்த போது பிரமிச்சிட்டேன்... அதே உடல்வாகு, உடம்பு, முகஜாடை.... அவங்களும் பின்வாசல் படிகளில் நின்று தான் தலை உலர்த்துவாங்க?"



"அடடே!"

"சாயங்காலம் குளிப்பதுதான் அவங்களுக்குப் பிடிக்கும் இதேபோல இடுப்பைத் தொடும் அளவு நீளமுடி அவங்களுக்கும்..."

இந்தச் சாக்கில் அவளது இடுப்பைத் தட்டினான்.

"வெள்ளைக்காரம்மா... 'பாப்' பண்ணியிருப்பாங்கன்னு கற்பனை செய்தேன்."

"பின்னி, பிச்சோடா போல சுத்தியிருப்பாங்க. அந்த முதல் பார்வையிலேயே எனக்குள் பருத்த சலனத்தை ஏற்படுத்திட்டே வசு. அதிலும் நீ அந்த பொம்மை வீட்டில் காட்டின ஆர்வம்..."

"என்னை கிளேர் அம்மாவின் மறுபிறவின்னுடுவீங்க போல..."

"இல்லை. ஆனா ஏதோ ஒரு அதிசய ஒற்றுமை இல்லாமலும் இல்லை!" என்றான் சிந்தனையுடன்.

"அவங்க இப்போ?"

"உயிரோடு இல்ல. ஐந்து வருடத்துக்கு முன் இங்கிலாந்தில் இறந்ததாய் தகவல்."

"உம்..."

"இப்போ உன்னைப் பற்றி சொல்றே..." என்றாள் ஆர்வமாய்.

"என்னைப் பற்றி? யாரும் இல்லாத, காசுமில்லாத அனாதை."

"இனி நாங்க இருக்கோம். நான் கேட்டது, என்னைப் பார்த்ததும் என்ன நினைச்சே?"

"ரொம்பத்தான் அலட்டறார் இந்த ஆள்ன்னு!"

"உம்... அந்த அதிகாலை சந்திப்பில்... இல்லையா? உன்னைப் பற்றிய யோசிப்பில், தூக்கம் பிடிக்காமல்

நடந்தால்... அங்கேயும் விதி நம்மை ஒண்ணா தூக்கிப்போட்டது வசு..."

"இவனுக்கு இவள்தான்னு சொல்றதெல்லாம் அப்போ... உண்மைதானோ?"

"அப்படித்தான் தோணுது."

மவுனமானாள்.

"என்ன யோசனை?"

"இல்ல... அப்ப நாம ஏன் முன்னமே சந்திச்சிருக்கக் கூடாது? நீங்கள் யாரையோ நேசிச்சு... அது ஏமாற்றத்திலே முடிஞ்சதாய் கேள்விப்பட்டேன்."

"உம்... துப்பறியும் வேலை மும்முரமாய் நடந்திருக்குது!" கண்களைச் சுருக்கி குறும்பாய் புன்னகைத்தான்.

"தம்பிக்குக் கல்யாணம் ஆனபின்பும் அண்ணன் ஒண்டியாய் நிக்கறார்... பச்சைப்பிள்ளை கூட கண்டுபிடிச்சுறாதா காதல் தோல்வின்னு?"

"காதலுக்குத் தோல்வி கிடையாது வசு" தீவிரமாய் சொன்னான்.

"உம்... உண்மை, மனுசங்க ஏமாற்றுவதற்கு, ஏமாறுவதற்கு பாவம், அது என்ன தெரியும்."

"அவள் எங்கூடப் படித்தவள். எனக்கு நேர்மாறான கலகலா சுபாவம். அதில் கவரப்பட்டு பழகினேன். அறியாத வயதில் அதையே காதலாகக் கொண்டுவிட்டது."

"படிக்கிற நேரம் காதல் நினைப்பே கூடாதும்பாங்க எங்க அம்மா. அது உலகம் அறியாத பருவம். பாம்புக்கும் பழுதுக்கும் வித்தியாசம் தெரியாது. தனக்கு எது நல்லது. அல்லதுன்னும் புரியாது. உலகத்தைப் புரிஞ்சிக்க முயற்சிக்கிற அந்த



வயதில் வாழ்க்கையே நிர்ணயிக்கும் முடிவுகளை எடுக்கறது தப்புன்னு..."

"உம்... தப்புதான். அவளை எங்க அப்பா, அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைச்சேன்."

அவங்க அவளைச் சரியாய் எடைபோட்டுட்டாங்க. அவளுக்கு என்னைவிட என் பணத்தின் மீது அதிகப் பற்று... ப்ச்...

"உதறித்தள்ளிவிட்டு வேறு நல்ல பெண்ணாய் கல்யாணம் செய்திருக்க வேண்டியது தானே... இத்தனை ஆண்டுகள்?" சொல்லும் போதே நல்லவேளை அப்படி ஏதும் நடக்கவில்லை என்றும் மகிழ்ந்தது அவள் மனம்!

"ஆரம்பத்தில் ஏதோ கசப்பு. பிறகு நாட்டமில்லாமல் போயிருச்சு. வியாபாரத்தில் முழுமூச்சாய் இறங்கினேன். தோல் பொருட்களின் ஏற்றுமதி. நிறைய லாபம். அதைவிட எனக்கு அந்த சுவாரஸ்ய சவால்கள் பிடித்திருந்தது. லாபத்தில் சில நிலங்களை வாங்கிப் போட்டேன். அதன் விலை ஒன்றிற்குப் பத்தாய் எகிற அதிலும் லாபம். இங்கே எஸ்டேட், தம்பி, நீருவின் பொறுப்பு. அப்பப்போ வருவேன், அப்பாவுக்காக. இம்முறை நான் இத்தனை நாள் இங்கே தங்கியதில் அவருக்கு ஒரே ஆச்சரியம்."

வீடு வந்து விட்டார்கள்.

"படுங்க ராகவன்... காலையில் பார்ப்போம்."

"இன்னும் முழுக்க எனக்குத் தெளியலை..."

"என்ன?"

"அந்த... கஞ்சா மயக்கம்..."

"அதனால?"

"இன்னமொரு முத்தத்தில் முழுக்கத் தெளிஞ்சிடும்" குறும்பு சிரிப்புடன் குழந்தையின் ஆர்வத்துடன் குனிந்தான்.

ஆனால்... மறுநாள் உல்லாசமாய் படியிறங்கி வந்தவன், அந்த அதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை. வசுந்தராவின் முகத்தில் இறுக்கம்.

நேற்றைய பரவசத்தின் சாயல் அற்ற முகம்!

"என்ன வசு? வாடித் தெரியறே... இராத்திரி முழுக்க தூக்கமில்லையா? எனக்கும் கூட அந்த தித்தித்த முத்தங்களை மறக்க முடியலை..."

"முதல் காலும் முதல் முத்தமும்தான் மறக்கக் கூடாதவை என்று கேள்விப் பட்டிருக்கிறனே. உங்களுக்கு நேற்றிரவு முதல் இல்லையே?" என்றாள் அவள் நக்கலாய்!

## 11

மகா உல்லாசமாய் தேடிவந்த ராகவனின் முகம் ஒரே நொடியில் களை அற்றுப் போனதைப் பார்க்க சகிக்கவில்லை.

ஆனால் அவளது இக்கட்டும் சகிக்கக்கூடாத ஒன்றுதானே? இந்த அழகிய வீடு நுழைந்த கணம் கடவுளுக்குக் கருணை இருக்கிறது என்று நெகிழ்ந்ததுண்டு.

நேற்றிரவு இறைவனின் அன்புக்கு எல்லையே இல்லை என்று மகிழ்வில் திளைத்ததும் உண்மை.

ஆனால் இவள் அத்தனை பாக்கியம் செய்யவில்லை போலும். இல்லையென்றால் திடீரென்று எங்கிருந்து இங்கு முளைத்தான் குரு!



அன்று காலை கண்விழித்ததுமே அவளுக்குள் கலவையான உணர்வுகள்.

உடனே ஓடிப்போய் ராகவனைக் கட்டிக்கொள்ள வேண்டும்... நேற்றிரவின் அனுபவம் கனவில்லை உண்மை தானே என்பது பற்றி பேசி தீர்க்க வேண்டும் என்ற துள்ளல்.

மறுபுறம், நீரஜாவிடம் போய் 'இனி நான் உன் ஓரகத்தி' என்பது எப்படி என்ற தயக்கம். பெரியவர் என்ன சொல்வாரோ என்ற கலக்கம்.

பார்த்த அன்றே 'நல்லா இரு' என்ற அவர் ஆசி பலித்து விட்டது. ஆனால் இந்த அன்னக்காவடி தனக்கு மருமகளா என்று அவரது மனம் வருந்துமோ?

உடன் பணிபுரிபவள் என்ற உரிமையுடன் பேசி, உடன் சாப்பிட்ட ஆயா, வேலையாட்களுக்கு... இனி வசுந்தரா தங்கள் எஜமானி என்பது அதிர்ச்சிதான்.

படபடப்பாய் வந்தது. சற்று நேரம் நடந்து வந்தால் ஆசுவாசம், தெளிவு வரும். சால்வையைப் போர்த்தி, வெளியேறினாள்.

இம்முறை முன்புற புல்வெளியில் உலவ வேண்டும் போல அவளுக்குத் தோன்றியது... விதிதான்!

பனித்துளிகள் ஒவ்வொரு புல்நுனிக்கும் மகுடம் சூட்டி இருந்தது. இளங்கதிரவன் ஒளி அத்தனை மகுடங்களையும் வைரமாய் அடித்திருந்தது.

அந்தப் பிரகாசம் இவள் உள்ளும் பிரதிபலித்து. மெள்ள உல்லாசம் தலை தூக்கியது.

திருமணமானபின் ராகவனும் அவளும் இருளில் மறைந்து திரிய வேண்டாம். இந்த மரகத வெளியிலே நாள் முழுக்க அமர்ந்து பேசலாம். அல்லது ஜோடிக் கிளிகளைப் போல முத்தமிட்டு...

நினைப்பிலேயே கன்னம் சிவந்த நேரம்தான். அந்தக் குரல்"பரவாயில்லை... சோக்காத்தான்கீற. மலைக்காத்து... பெரிய வீடு. குசாலான லைப்பு... உம்?"

இடியோசை போல அவள் புலன்களைத் தாக்கியது அந்தக் குரல்... பழக்கமான, ஆனால் பிடிக்காத குரல்.

சிவந்து, கனிந்த கன்னங்கள் வெளிரின.

"குரு... நீயா?"

"அட்ரா... பேர் மறக்கலியா? நல்லது. என்னிய மறக்கத்தான் இங்க ஓடியாந்த? மறக்க முடியலியா?" அவன் உதடு ஆபாசமாய் பிதுங்கியது.

"நீ எப்படி இங்க?"

"தடுக்கு. இடுக்கில புகுந்து பத்திரிகைக்கு செய்தி பிடிச்சுத் தா்ரவம்மா. உன்னைக் கண்டு பிடிக்கறது எலி மசாலு வடையைப் கண்டுக்கறது மாதிரி சுலபம்..."

இவனிடம் என்ன வீண் பேச்சு? திரும்பினாள்.

"பின்னாடியும் சூப்பராக்கீற. ரெண்டு கிலோ கூடியிருக்கு."

உடம்பு கூசியது. நடந்தாள்.

"இங்க இன்னா வேலை... ஆயாவா?"

"இதோ பார் குரு. நிம்மதி தேடி கிளம்பினேன். இங்கே நிம்மதியா இருக்கேன். இப்ப என்னன்றே?"

"நான் நிம்மதியா இல்லன்றேன்."

'அது உன் தலைவலி' என்று நினைத்தவள் வெறுமே, "ஏன்?" என்றாள்.

"நீ இல்லியே... மனசுல உம்மேல நோக்கம் விழுந்திரிச்சு. லவ்ஸ்னு வையேன். நீ ஓடியாந்துட்டே... அதான்."

"இப்படி வற்புறுத்தினா பிரியம் வராது குரு."



"முதல்ல கல்யாணம். பிறவு லவ்ஸ் தானா வரும்."

"உளறாத... எனக்கு கல்யாணம் நிச்சயமாயிருச்சு."

அதுவரை உல்லாசமாய், சற்றே இடக்காய் சிரித்த அவன் முகம் விகாரப்பட்டது.

"இந்த ஆட்டமெல்லாம் ஆடாதடீ."

"வாட்ச்மேன்..." இவள் குரல் உயர்த்தி அழைத்தாள். காபி குடிக்க வீட்டிற்குப் போய்விட்டான் போலும் காவல்காரன்.

"கூப்பிடு... கலாட்டாவாகட்டும். தூக்கமில்லாம பழ சரக்கு லாரியில ஏறி வந்தா... இங்க நீ ரவுசு பண்ற..."

"உன்னை நம்ப வைச்சு ஏமாத்தினால் குற்றம். ஆனா..."

"ஆசை காட்டி ஏமாத்தினாலும் குற்றம்தான்... எத்தினி வா்சமா நினைச்சேன். நீ எனக்குத்தானுட்டு. உன்னளவு அழக பாத்து ஜொள்ளு மட்டும் விட்டுனே இருக்கது கஷ்டம்பா... அனுபவிச்சிரணும்."

"உன்னை எனக்குப் பிடிக்கலை."

"ஒத்தருக்கு அதும் ஆம்பளைக்குப் பிடிச்சா போதும். அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம் வசுக்கண்ணு..."

"எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிருச்சுன்னு சொன்னது புரியலையா?"

"யாரு மாப்பிள்ளை... இங்க டைவரா, குக்கா?"

உள்ளே பொறுமியது. எள்ளிய அவன் முகத்தை அப்படியே இந்தக் கருங்கல் சுவரின் மீது வைத்துத் தேய்த்தால் என்ன?

"முதலாளி... முதலாளியோட மகன்" அழுந்தச் சொன்னாள்.

"அட்ரா...! இது ஆசயில்லை... பேராச. அது எதுல முடியுந் தெரியுமில்ல? பெருநஷ்டம்..." இவனும் கடைசி வார்த்தையை அழுந்த சொன்னான்.

"நல்ல வார்த்தை உன் வாயிலேர்ந்து வராதா?"

"ஏன் வரணும்? காத்திருந்தவன் பொண்டாட்டி வேற ஒத்தனோட போகரச்ச வாழ்த்தா வரும்? இத்தன பேராச கூடாதுடீ."

"அவர் எம்மேல பிரியப்பட்டாரு."

"அப்ப அவருக்கு விசயம் தெரியாதாங்காட்டி?"

"உன்னைப் பத்தியா?"

"இல்லம்மா. உங்கப்பனைப் பத்தி..."

வசுந்தரா முகத்தில் தோன்றிய கண நேர சலனத்தைக் கணித்துவிட்டான்.

"அப்படிப் போடு... ஆக உங்கள் பிறப்ப்ப் பத்தி ஐயாகிட்ட மூச்சுவிடல...யங்?"

'அதை எல்லாம் பற்றிப் பேச இன்னும் நேரம் வாய்க்க வில்லை. எனக்கு அது மெள்ள புரிந்தது போல அவருக்கும் பதமாய் எடுத்துச் சொல்வேன்' என்பதை குருவிடம் சொன்னால் எடுபடாது.

அம்மாவைப் பற்றி- அவள் அன்பு. அழகு. திறமைகளைப் பற்றி சொல்லிவிட்டு. அவள் தனக்குத் தாயான முறை பற்றியும் கூறினால்...

இவள் யோசனையை இடைப்புகுந்து வெட்டினான் அப்போ... உங்க அம்மையப் பத்தியேனும் தெரியுமா?

"என்ன தெரியணும்?"

"அடேங்கப்பா! என்னை ஆக்ட்ப்பா!... எம்மடியில் என்னா கனங்கற மாதிரி சின்ன பாப்பா லுக் வுடறியேம்மே. உங்கம்மா ஒரு சினிமா எக்ஸ்ட்ரான்னு தெரியுமா? உங்கப்பன் பேர் உங்கமாவுக்கே தெரியாதுன்ரது தெரியுமா? இதெல்லாம் நான்



அவுத்துவுட்டா... அவங்க என்ன லுக் வுட்றாங்கனு பாப்பம்... கவுரதையான பார்ட்டி! அதிர்ச்சியில் மூச்சே நின்னாலும் நின்றும்..."

"வாயை மூடு. இத்தனை கேவலமாய் பேசிச்...சே... வெளியே போ..."

"கைய மாத்திக் காட்டுப்பா. உள்ளாரப் போறேன். போயி விளக்கமா வத்தி வைக்கறேன். நீ கன்னி கழிய வேற வழியே யில்லாத எங்கிட்ட சரண்டர் ஆவற வரைக்கும் இதே நாடகந்தான்... எல்லாரையும் கூட்டி வைச்சு சூப்பர் ஆக்ட் கொடுப்பேன்..."

அந்த நினைப்பே கூசியது பெரியவர், நீரு சேகரன் வேலையாட்கள் முன்பு தனக்கு இந்த அசிங்கமா? ராகவன் புரிந்துகொள்வான்-இந்த குரு கேவலமானவன் என்பது அந்த அன்பு மனதிற்குப் புரியும்... அல்லது புரியாதோ? தடுமாறினாள்.

சில மணி நேரங்களுக்கு முன்பே தன்னுடன் மனம் திறந்து பேசத் தொடங்கியவன் இதை எல்லாம் நம்புவானா?

தன் பிறப்பு சம்பிரதாயத்தை மீறியது என்றாலும் தான் சமூக சட்டங்களை மதித்து வளர்ந்த பெண் என்பதை நம்புவானா?

அநாதை என்றிருந்தாள். தப்பான பிறப்பை மறைக்கத்தான் அந்தப் பொய் என்று ராகவன் நினைத்தால்? அழுகை பொங்கியது.

மற்ற அவமானங்களை சகிக்க முடியும். ஆனால் ராகவன் சந்தேகமாய் ஒரு பார்வை பார்த்தாலும் கூடத் தாங்க முடியாது.

'பொய் ஏன் வசு? பெற்றவர்கள் இப்படி என்று என்னிடம் சொல்லியிருக்கலாமே?' என்று முகம் சுளிப்பானோ? சிறுவயதில் இருந்தே அவளை வருத்திய பயம். தாழ்வுணர்ச்சி அது.

ஆக நினைத்த கணமே சரவெடி போல பரபர வென்று பாய்ந்து முன்னேறியது. தலைக்குள் பாய்ந்து வெடித்தது. மனசு சிதறியது!

ஆளை நோட்டமிட்டே மன ஓட்டத்தைப் புரிந்து கொள்ளப் பழகியவன் குரு. ஆக... அவள் தடுமாற்றம் புரிந்தது. அதே இடத்தில் ஓங்கி அடித்தான்.

"நம்ம தெருவில கோகிக்கா, கமலம், சித்ரான்னு ஒவ்வொருத்தரா தனியாக கூப்பிட்டுக்கேளு- 'எங்கப்பன் யாரு'ன்னு. ஒவ்வொன்றும் வெவ்வேற பேரைச் சொல்லும். அத்தினி தொடுப்பு உண்டு- உங்கம்மைக்கு. விவரமெல்லாம் புட்டு வைக்கிறேன். பிறவு இந்தச் சீமானுங்க தாலிகட்ட மாட்டாங்க... நாய வுட்டு விரட்டிருவாங்க. உன்னைய கூட்டிப் போறதுக்கு நான் வாசல்ல காத்துருக்கிறேன். என்னா?"

இவளுக்கு உடம்பு முழுக்க நடுங்கியது. என்ன சொல்கிறான்?

யாரிடமும் தன் பிறப்பைப் பற்றி பேசியதில்லை. ஆனால் தன் அம்மா பொய்... நிச்சயம் சொல்லமாட்டாள். ஆனால் இவன் அளப்பதை நம்பவும் இங்கு ஆள் இருப்பார்களே! அம்மாவைத் தெரிந்து தானே ஒரு கணம் மலைக்கவில்லையா... பிறர் எந்த மூலை? அதிர்ச்சியில் ஆடினாள்.

"கடவுளே... என்னை என்னதான் செய்யச் சொல்றே?"

குருவிடம் கேட்டாள்.

"பெட்டியைக் கட்டினு கிளம்பு."

அந்நேரம் சேகரனும் நீருவும் 'ஷட்டில்' விளையாட வெளியே வருவது தெரிந்தது.

"இல்ல... இப்ப முடியாது... என்னைக் கொஞ்சம் நிம்மதியா விடு..." இவள் வீட்டை நோக்கி ஓடினாள்.



இவனிடமிருந்து தப்பினால் போதும். முன்பு இருந்த உணர்வுகள் அத்தனையும் வடிந்து உள்ளே இப்போது ஒரே கேள்விதான்-

பிறப்பைப் பற்றி பொருட்படுத்தாமல் தன்னை ஏற்றுக் கொள்வார்களா? அல்லது இவளது தாயின் மானம் அலசி ஆராயப்படுமா? நான்கு கேள்விகள் கேட்கப்படும் தான். அதை இவளால் தாங்க முடியாது.

ஆக... அத்தனையையும் அறுத்துக்கொண்டு இவ்வீட்டை விட்டு வெளியேற வேண்டியதுதான்.

உற்சாகமாய் படியிறங்கி வந்த ராகவன் அவளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது அப்போதுதான்!

## 12

வந்த புதிதில் சிரமமாய்ப்பட்ட அதே விசயம் இப்போது வசதியாகப் போனது.

அறைக்குள் கவிழ்ந்தடித்துப் படுத்திருந்தாள் வசுந்தரா. மென்னியைப் பிடிக்குமளவு வேலைகள் இருந்தால் இது சாத்தியமா? நிம்மதியாய் அழுது தீர்த்தாள்.

அத்தனையும் விட குரு தன் தாயின் ஒழுக்கத்தை விமர்சித்து, சேறு வீசியது தான் ரம்பமாய் அறுத்தது. கோகிலாக்கா, சித்ரா... யாரிடம் வேண்டுமானாலும் விசாரித்துப் பார் என்று வேறு சொன்னானே... அந்த வார்த்தை வாதித்தது. பெற்றவளை சந்தேகிப்பது கொடும் வேதனை... குமுறி அழுதாள்.

இனி இங்கிருக்க முடியாது.

குரு இருக்கவிட மாட்டான்.

பிறர் முன் தன் மானம் உருவப்படுவதற்கு முன் இவளாகவே ஒதுங்கிவிட வேணும்.

நீரஜாவிடம் போய் - 'இந்த கர்ப்பக் கடன் திட்டம் எனக்குச் சரியாய் தோன்றவில்லை' என்றுவிடலாம்; பெரியவர் அதிகம் குடைய மாட்டார்.

ஞானம்மா, மற்றவர்களிடம், சென்னையிலே வேலை கிடைத்துவிட்டதாய் புளுகிவிடலாம்.

ஆனால்... ஆனால்... ராகவனிடம்... யோசிக்கையிலேயே இதயம் நசுங்கியது.

சற்று முன்பே முகத்தில் அடித்தாற்போல பேசியாயிற்று. இனி நேற்றிரவு பேச்சு முழுக்க ஒரு நாடகம் என்றுவிட வேண்டியது. உன் உயிரைக் காப்பாற்ற நான் எடுத்த முயற்சி என்ற சமாளிப்பு. இத்தனைக்கும் பிறகு இளம்பெண்ணான நான் இங்கிருப்பது பாதுகாப்பல்ல என்று கூறி கிளம்பிவிட வேண்டியது... ஆனால் நினைக்கும் போதே நெஞ்சு நோகின்றதே... ராகவன்பால் குழைகின்றதே... இத்தனை பேச முடியுமா?

அழுகை மட்டும் தாராளமாய் வந்தது!

கதவு தட்டப்பட்டது.

முகத்தைக் கழுவியபடி குரல் தந்தாள்- "யாரு யாரது?"

"நாந்தாம்ப்பா... மேலுக்கு என்ன செய்யுது?"

நல்ல வேளை ஞானம்மாள் தான். ஆனால் அந்த நிம்மதியும் நிலைக்கவில்லை.

"உன்னைப் பார்க்க உங்க ஊரிலேருந்து ஆளு வந்திருக்காங்கம்மா."



ஆக குரு வீடு புகுந்துவிட்டான். வயிறு புரட்டியது. சுழன்ற தலையைப் பற்றியபடி எழுந்து கதவைத் திறந்தவள் முகம் ஒரு கணம் அதிர்ந்து- பின் மலர்ந்தது.

"அ... கோகிக்கா! வாங்க... எப்போ... எப்ப?"

"இப்பத்தான். ரோடு வழியாத்தான்!" சிரித்தாள் கோகிலா. அந்த நக்கல் பேச்சைக் கேட்க, வெற்றிலைக் காவிப் பற்களைப் பார்க்க, கொள்ளை ஆறுதலாயிருந்தது. நிம்மதி மீறக் கட்டிக் கொண்டாள்.

"காபி கொண்டாரவா?"

"இல்ல ஞானம்மா. நானே வந்து எடுத்துக்கறேன்."

"நீ வந்தவங்களோட பேசுப்பா. எனக்கொன்னும் சிரம மில்லை" அகன்றாள் ஆயா.

இவள் முகத்தை ஊன்றிப் பார்த்த கோகிலா கேட்டாள் "ஆமா... இப்ப எதுக்கு உள்ள அழுதுட்டுக் கிடக்க?"

புதிதாய் கண்ணீர் பீறிட்டது.

"தே... விவரத்தச் சொல்லிட்டு அழு. இங்க அடைச்சு வைச்சுக்கீறாங்களா? வேலை இஸ்டமில்லியா...? ஏதேனும் ராஸ்கோலு ராங் பண்றானா?" இவளுக்கு அழுகையூடே சிரிப்பும் வந்தது.

"கடைசியாச் சொன்னது."

"யாருன்னு காட்டு. பேசியே வகுந்துடுறேன்."

"குரு..."

"இங்கயும் ஒரு குருப்பயலா?"

"இல்ல... அதே குருதான்."

"நினைச்சேன். பல்லு எத்தி மூஞ்சூராட்டம் இருக்குமே அந்த குட்டி ஏதோ குல்மால் பண்ணி உன் அட்ரசை

லாவிக்கினதுமே எனக்கு சந்தேகம். குருப்பயல் வேலைதானா அது? எப்ப வந்தான்?"

"இப்ப... காலையில்."

"நாயவுட்டு விரட்டச் சொல்லாமல் எதுக்கு இங்க புகுந்துகினு அழுவுற?"

ஒரளவு விபரங்கள் தந்தால் தான் கோகிலாவிற்குப் புரியும். ஆக சொன்னாள். கேட்க கேட்ட கோகிலாவின் முகம் பிரகாசமானது.

"இந்த ஹூட்டுப் பிள்ளைக்கு உம்மேல லவ்சா?"

"இப்ப எனக்கே அது சந்தேமா இருக்குதுக்கா. ஒரு வேளை கஞ்சாப் போதையில் ஏதும் உளறிட்டாரோ என்று. நான் வேற இப்ப அவர்கிட்ட முறுக்கிக்கிட்டேன். இன்னும் அவரைக் காணும்..."

"அதெல்லாம் வருவாரு நேத்து காதலு இப்ப ஊடலு. இந்த குரு விவரஞ் சொல்லு."

தயங்கித் தயங்கி சொன்னாள்.

"நாக்கு அளுவிப் போயிரும்டீ... உங்கப்பன் அந்த காமரா மேதையத் தவிர ஒத்தனை அவள் நிமுந்து பாத்தது கிடையாது. உங்கப்பா வெளுப்புங்கறதைத் தவிர 'லுக்' பிரமாதமில்ல. உங்கம்மா விழுந்தது அவரு திறமையில்தான். இந்த ஆங்கிள் பாரேன் இப்படி 'பிரேம்' யாராச்சும் எடுக்க முடியுமான்னு ரசிச்சு ரசிச்சு சரிஞ்சிட்டா. உன்னைய வெலவெலக்க வைக்கணும்னே போக்கு காட்டியிருக்காம் ப்யல். நீயும் மிரண்டுட்டே."

"உங்க பேரெல்லாம் சொன்னானா...அதான்..."

அதாங் ஒரு கல்யாணம் அவசியங்கறது. தாலி கட்டிட்டா எல்லாம் ரீசண்டா ஆயிரும்... இல்லைன்னா நாம பெத்ததே சந்தேகப்படும்..."



விம்மினான் வசந்தரா.

"உன்னைத் தப்புச் சொல்லலை தாயி. உலகம் அப்படித் தான். அதுக்குத்தான் பெண்ணுக தாலி கட்டிருன்னு மல்லாடறது. ஆனா உங்கம்மா அப்படிக் கேட்கலை. அவரு முதல்லியே இந்தத் தொடர்பை இரசியமா வச்சிட்டாரு. கேட்டா நம்பத் தொழிலு பாதிக்கும்னு சொல்றது. பிறகுதான் பூனாவிலே அவருக்கு பொண்டாட்டி பிள்ளைங்க இருக்கறது தெரிஞ்சது. போகப்போக நம்ப ஊர் பையனுங்களே காமரா வித்தையெல்லாம் காட்ட, அவரு அவர் ஊரப் பார்த்துப் போயாச்சு."

"ச்சே..."

"இதென்ன புதுசா? என்.எஸ்.கே. கூட மதுரத்தைக் கல்யாணம் பண்ணிட்ட பிறகுதான் ஊர்ல அவருக்கு முதல் சம்சாரம் இருக்கறது தெரியவந்துச்சாம். நம்பள்ல இது போல எத்தனை?"

"ஆனால் தப்புதான்?"

"பிள்ளைகளை பாதிக்குது... ஆனால் உங்கம்மா தங்கம்டி..."

"அது போதும் கோகிலாக்கா... ஆனால் நாம் இங்கிருந்து கிளம்பிற வேண்டியதுதான்."

"எங்க? இனி உன் வளைகாப்புக்குத்தான் வடபழனி வரணும் நீ."

"உஸ்ஸ்... சும்மாருங்க. இங்க வந்து ஜீன்ஸ் பத்தி நிறைய தெரிஞ்சுகிட்டேன்."

"சங்கர் தம்பி எடுக்கற படமா?"

"இல்லக்கா, நம்ப உடம்பிலே உள்ள மரபணுக்கள் பத்தி. அப்பா அம்மாவுடைய திறமை, தோற்றம், நிறம், குணம் எல்லாத்தையும் வடிச்சுகிட்டு குழந்தைங்க உருவாக்கிறது. ஒருத்தர் முடி நீளம் கூட அது சொல்றது போலத்தான்.

அப்படியிருக்க, முறையாய் பிறக்காத நா... நான் இத்தனைப் பெரிய குடும்பத்திலே?"

"அணு. கணுவெல்லாம் சரி. ஆனா ஆண்டவன் உனக்குன்னு ஒரு புத்தி கொடுக்கலை? தப்புன்னு தோணுதா? செய்யாதே. ரைட்டா செய்யி."

ஆச்சரியமாய் கோகிலாவை நிமிர்ந்து பார்த்தாள் வசு. "நீங்க சொல்றது சரிக்கா. நமக்குத் சரியாத் தோணறது அவங்களுக்கு..."

"எனக்கும் சரிதான்னு தோணுது!"

உள்ளே நுழைந்த நீரஜாவை விக்கித்துப் பார்த்து நின்றாள் வசு.

"சாரி... ஒட்டுக் கேட்டது தப்பு. ஆனா நீ அப்படி உள்ளே ஓடினதைப் பார்த்ததும் நான் விசயம் என்னன்னு விசாரிக்க வேண்டியதாய் போச்சு, வசு."

"யார்... யாரை?"

"குருவை."

தலைக்குமேலே வெள்ளம் போயாகிவிட்டது. இனிசாண், முழம் கவலை எதற்கு என்ற ரீதியில் கண்மூடி நின்றாள் வசுந்தரா!

சேகரன் உன்னோடு பேசியவனைப் பிடிக்க, நான் உன் பின்னே வந்தேன். ஆனால் நீயோ ராகவனிடம் 'வள்'ளென்று விழுந்துவிட்டு ஓடிவிட்டாய்.

"ஆக உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சாச்சு."

"நேற்றிரவுதான் உங்கள் காதல் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது போலும்... ஆகையால் என்னிடம் சொல்லாதது பாதகமில்லை. ஆனாலும் இரவே எழுப்பிச் சொல்லியிருந்தால் இன்னும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்."



அழுதது வீங்கிய வசுந்தராவின் விழிகள் விரிந்தன. "நீங்க சொல்றது?"

"எங்க எல்லாருக்கும் சம்மதம்ங்றேன்" புன்னகைத்த நீரஜாவின் முகம் ஒரு தேவதையுடையது போல் தோன்றியது.

"குரு...?"

"கொடுக்க வேண்டியதைக் கொடுத்து அவனை அனுப்பியாயிற்று."

"காசு... பணமா?"

"அடி உதை! தவிர ராகவன் விளையாட்டு அறையில் இருந்த பெரிய துப்பாக்கி ஒன்றை எடுத்துக்கொண்டு 'குழிய வெட்டுங்கப்பா... சுட்ட சூட்டோட ஆளைக் கீழே இறக்கிடலாம்' எனவும் அலறிட்டான்."

சிரித்தார்கள்.

"அவன் லேசில் காலை விடாத பாம்பு ரகம் நீரும்மா."

"உன்னைப் பற்றி அவன் எது சொன்னாலும் நாங்க கேட்கிறதாய், நம்புவதாய் இல்லை. பின்னே?"

நன்றியுடன் கைகுவித்தாள் வசு.

"சேகரன் பிடித்து வைத்து விசாரிக்க, குரு ஒரேயடியாய் அளந்திருக்கிறான். நான் இங்கு பேயறைந்தாற்போல நின்ற ராகவனை உட்கார வைத்து விசாரிக்க, அவரும் குரு சொன்ன கதையெல்லாம் சொல்லிட்டார். பிறகு நானும் சேகரனும் பேச, ஒரு மாதிரியாய் மொத்த கதையும் புரிந்தது. நீ குருவின் தொல்லை தாங்காமல்தான் இங்கு வந்து சேர்ந்தாய் என்றும் ஊகித்தோம். சரியா?"

"ரொம்ப சரிம்மா. வெகு பாடுபடுத்தினானாம் வசுவை" என்று ஆரம்பித்த கோகிலா, இவள் தாயற்று தனிமையில் இருக்க

அவன் செய்த சில்மிசங்களை, இவள் நடிகை கிரிஜா வீட்டிலிருந்து குருவின் ஆர்ப்பாட்டம் தாங்காமல் கிளம்பியது வரை சகலமும் சொல்லி முடித்தாள்.

"நிறைய கஷ்டப்பட்டாச்சு வசு நீ. இனி எதுக்கு அழணும்?"

"அந்தக் குரு பயல் இவள் அம்மாவைப் பத்தியும் எடாகூடமா பேசிட்டான்."

"உம்... மிச்ச சொச்சத்தையும் புரிஞ்சுக்கணுமே என்ற ஆவல்லதான் நான் ஒட்டுக் கேட்டேன். உங்களுக்குக் காபி கொண்ட வந்த ஆயாவைக்கூட துரத்திட்டு... மன்னிக்கணும். முகம் சிவக்க மன்னிப்பு கோரினாள் நீரஜா."

"அட... இதாம்பா பெரிய மனுசங்கங்கறது. எங்க தெருவில் ஒட்டுக்கேக்கறதெல்லாம் பொழுதுபோக்கு! இங்க என்னடான்னா... ஸாரி கேக்கறீங்க. ஆனா வசுப் பொண்ணுக்கு அது மாதிரியான எந்த கெட்ட புத்தியும் கிடையாதுங்க. எங்க வைச்சாலும் இது மாறாத மாணிக்கம்."

"புரியாது. நீ இந்த வீட்டுக்கு வந்தா எங்க எல்லாருக்குமே நிறைந்த மகிழ்ச்சி."

"அப்படி போடும்மா... இதப்பாரு 'திருதிரு'ன்னு முழிக்கிறதை."

"என்னால் நம்ப முடியலைங்க நீரு..."

"நம்பச் செய்றது எம் பொறுப்பு" என்றபடி நுழைந்த ராகவனைக் கண்டதும் இவளுக்கு சிறகு முளைத்தால் போன்ற பரவசம்.

"மன்னிச்சிடுங்க உங்ககிட்ட ஏதேதோ பேசிட்டு வந்துட்டேன்."

"அது பற்றி தனியா பேசிக்குவோம். ஆனால் அந்தக் குரு சொன்னதை நம்பி நான் உன்னை வெறுப்பேன் விலக்குவேன்னு



நினைச்சிட்டியே வசுந்தரா?" அவன் குரல் வெகு கடுமையாயிருந்தது.

## 13

சூழ்நிலை சட்டென்று இறுகி விட்டது.

"அது வந்துங்க தம்பி" என்று சமரசத்திற்கு இடைப் புகுந்த கோகிலாவை அவன் கைதூக்கி அடக்கினான்.

"நீ சொல்லு வசு. உனக்கு எம்மேல அவ்வளவுதானா நம்பிக்கை?"

"முதல்ல நான்... கவலைப் படலை. ஆனா பிறகு ஏதோ சந்தேகம்..." திணறலாய் பேசினாள்.

"அதாங்க தம்பி... பிறப்புல சின்ன நெருடலு இருந்தாலும் அது மகா உறுத்தலு. வகையா, வளமா வளந்தவங்களுக்கு இந்த அவதி புரியாது."

ராகவனது முகம் இளகியது. "நாங்க அதிகம் பேசிப் பரிமாறிக்கலைன்னாலும் என் பிரியத்தை புரியவைச் சுட்டேன்னு நினைச்சேன். அது அவளுக்குப் புரியலையோ என்கிற ஆதங்கம் அவ்வளவுதான்."- என்றான் கனிவுடன்.

"பெரியய்யாகிட்டே பேசி..."

"அவருக்கு வேண்டியது பேரன் பேத்தி. அதுங்களை நீ அவர் கண்லே காட்டிட்டாப் போதும். சரி, வசு நீ ஏதாவது சாப்பிட்டுட்டுப் படு. கோகிலாம்மா நீங்க வாங்க... சாப்பிடலாம். அவள் கொஞ்சம் படுத்து எந்திரிக்கட்டும்."

“இப்ப என்ன இராத்திரியா?” என்று முரண்டிப் பார்த்தான் ராகவன் . “இல்லைதான். ஆனால் இராத்திரி அவளை எங்கே தூங்கவிடறீங்க? காட்டுக்குள் ஓடி அவளைத் துரத்திவரச் செய்றீங்க. காலையிலே அவளுக்கு அடுக்கடுக்காய் அதிர்ச்சி, அழுகை. ஆக இப்ப கொஞ்சம் ஓய்வெடுத்தாத் தப்பில்லை.”

கறாராய் பேசிய நீரஜா, அவனை வெளியே துரத்தி விட்டால்.

படுத்த வசுவிற்கு கண்களை மூடமுடியவில்லை. நேற்று இரவு பத்து மணிக்கு ஆரம்பித்த இந்நாடகம் அதற்குள் உச்சகட்டத்தைத் தொட்டு விட்டதை ஆச்சரியமாய் எண்ணிக் கிடந்தாள்.

எல்லோரிடமும் சொல்லி, சமாளித்து, பெட்டி அடுக்கிக் கிளம்பவேண்டியதுதான் என்று நினைத்ததற்கு மாறாக இங்கே இத்தனை அன்பு, புரிதல், உபசரணை.

ஆனந்தத்தால் கண்ணீர் துளிர்த்தது.

குருவை எண்ணியபோது சற்று சிரிப்பும் கூட!

அயர்வு தீர குளித்து துவட்டிக் கொண்டிருந்த போது அறைக் கதவு தட்டப்பட்டது.

“நான்தான் நீரு...திற...”

சேலையைத் தாறுமாறாய் சுற்றிக்கொண்டு தாழ் விலக்கினாள்.

“இந்நேரம் குளிச்சிருப்பேன்னு தெரியும். அதான் இதெல்லாம் எடுத்து வந்தேன்.”

அகல தாம்பாளம் அம்சமாய் நிறைந்திருந்தது.

“என்ன இதெல்லாம் நீரும்மா?”

“நீரு...”



“சரி...நீரு!”

“எங்கள் அத்தையுடைய சில நகைகள் - பட்டுச் சேலைங்க...மற்றது எல்லாம் மேலே அவங்க அறை அலமாரியில் உண்டு. சாவகாசமாய் போய் ஒரு நாள் பார்த்து உனக்கு வேண்டியதை எடுத்துக்கோ... எனக்குச் சேலை, நகைகளில் ஆர்வம் கிடையாது.”

“எனக்கும் இன்னும் தயக்கமாய் இருக்கு நீரு. மரபணு... அதன் முக்கியத்துவம் பற்றி தெரிஞ்ச பிறகு...”

“பொதுவாய் நாம நம்ப பெற்றோர், பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்க முடியறது இல்லையே. வாய்ப்புக் கிடைச்சதால முயன்றால் தப்பில்லைன்னு நினைச்சோம். மற்றபடி எல்லாம் விதி- கடவுள் செயல்ங்கறது உண்மைதான் போல...”

“பெரியவர் சம்மதம் தெரியாமல் இதெல்லாம் போட்டுக்கிறது...”

“ஆசீர்வாதம் வாங்கத்தான் இதைக் கட்டிக்கோ என்கிறேன்.”

“அவர் அனுமதி இல்லாமல் அத்தை நகைகளைப் போட்டுட்டு...”

“அத்தைன்னு சொல்லியாச்சு, பிறகென்ன?”

அத்தனையும் நுட்பமான வேலைப்பாடுள்ள விலையுயர்ந்த நகைகள்.

“பயம்மா இருக்கே நீரு...”

“ராகவனை அனுப்பவா? உன் பயத்தைப் போக்க ஏதோ ஒரு நல்ல மருந்து கைவசம் உண்டுன்னார்.”

“ஐயோ வேணாம்.”

“அப்புறம்?”

"கட்டறேன். அதுக்கு முன்னாடி ஒரு விசயம்..."

தயங்கியவளை இழுத்து கட்டிலில் உட்கார வைத்தாள் நீரஜா.

"உனக்கு எங்களுக்கு அடுத்த அறையைத் தயார் பண்ண சொல்லியிருக்கேன், வசு... இன்றைக்கே மாற்றிடலாம்."

"நான் இங்க வந்த வேலையை மறந்து..."

"இதுவும் நல்ல வேலை தான் வசு. குடும்பத்தின் மூத்தமகன் இப்படி ஒண்டியா இருக்கிறது யாருக்கு சந்தோசம்? இப்போதான் இங்கே நிறைவு. ஞான ஆயாவுக்கு வாயெல்லாம் பல். வீட்டில் இப்பவே ஒரு கலகலப்பு தெரியுது. ஒரு வருடத்துக்குள்ளே ஒரு குழந்தையும் பெற்றுத் தந்திட்டியானால் குறையே இல்லை..."

"இல்ல... அதுபத்திதான் பேசணும் நீரு."

"சொல்லு..."

"ஐயா சம்மதிச்சு எங்களுக்குத் திருமணம் நடந்தாலும்."

"நடக்கும்..."

"சரி... உங்களுக்குப் பிள்ளை பிறந்த பிறகு தான் நாங்கள்..."

"நீங்க...?"

"அதாவது எங்களுக்கும்."

"குழந்தையாக்கும்?"

"உம்..." வெட்கத்துடன் கவிழ்ந்தது வசுவின் தலை.

"எங்களுக்குத்தான் அதற்கான கொடுப்பினை இல்லையே?"

"அதற்கு ஒரு வழி யோசிச்சிருக்கேன், நீரு..."

"சொல்லு..."



"நாம் மதுரையில் ஆஸ்பத்திரிக்கு போயிருந்த போது அங்கே ஒரு நர்ஸை சந்திச்சோம்- லீலான்னு."

"உம்... நினைவிருக்குது. சின்ன மெழுகுபொம்மை போல... சிரிப்பு மாறாத முகம்."

"ஆனால், உள்ளே அவளுக்கும் வேதனை உண்டு"- என்று லீலா பற்றிய விவரங்களைச் சொன்னாள், வசு.

"அதாவது கணவனின் மருத்துவத்துக்குப் பணம் தேவை லீலாவுக்கு இருப்பதால் அவள் தன் கருமுட்டையைத் தருவாள்ன்னு..."

"நம்பறேன். நல்ல பெண்ணாய் தோன்றினாள். அழகும் கூட."

"கேட்போம்."

"நாளைக்கே மதுரை போகலாம் நீரு. நானே அவங்கிட்ட இதுபற்றி பேசறேன். ஒரு இலட்சம் அவங்களுக்குப் பெரிய உதவி."

"இப்ப அதுக்கு அவசரம் இல்லை வசு."

"உம்... சீக்கிரம் உங்களது வாரிசு உருவாகணும். சொத்துக்கு உரிய முதல் வாரிசு உங்க குழந்தையாத்தான் இருக்கணும்."

கண்களில் நீர்முட்ட வசுவின் கைகளைப் பற்றிக் கொண்டாள் நீரஜா.

"நல்ல மனசு உனக்கு. ராகவன் கொடுத்துவைச்சவர்".

தட்டில் வைக்கப்பட்டு வந்த சேலைகளில் அவளுக்கு அந்த பச்சை வண்ணப்புடவைதான் பிடித்திருந்தது. கண்ணுக்குக் குளிர்ச்சியான நிறம். அதிக சரிகையுமில்லை. தங்க நிற ரவிக்கை அணிந்து சேலையைப் பிரித்து உடுத்திக் கொண்டாள். அதிலிருந்து லேசான மரிக்கொழுந்தின் மணம்.

பத்து வருடத்திய சேலை என்றாலும் புதிது போன்ற பளபளப்பு. அதன் தரம் அப்படி தங்கமும் பச்சையும் கலந்த கொடி போலிருந்தாள் வசுந்தரா.

முகம் பூ. லேசான ஒப்பனையுடன் வழக்கத்தைவிட சற்று அகலமாய் இட்டிருந்த திலகம், முகப்பொலிவைக் கூட்டியிருந்தது.

ஒன்றிரண்டு நகைகளைப் போட்டுக் கொண்டவள், மற்றதை பூட்டி எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

முன்னறையில் நீரஜா காத்திருந்தாள்.

"ஜோராயிருக்கே வசு. இன்னும் ரெண்டு வளையல் போட்டுக்கோயேன்."

"இதுவே நீங்க சொன்னதுக்காகத்தான். மற்றதெல்லாம் இதோ."

"சரி, வா. மாமாவைப் பார்த்திடலாம்."

வசுவிற்கு கால்கள் தள்ளாடின. கதவைத் தட்டுவதற்கு முன்பே அது திறந்தது . பெரியவர் வெளியே வந்தார்.

இவளது தளிர் விரல்கள் நடுக்கத்துடன் கும்பிட்டன.

"நல்லாயிரும்மா."

வாழ்த்திய குரல் குழைந்து இருந்தது.

கம்பீர முகம் கனிந்திருந்தது.

சரிந்து வணங்கினாள்.

"அமோகமாய் நிறைஞ்சு வாழணும்மா. ராகவன் விவரம் சொன்னான். நீருவும் எல்லாம் சொன்னாள். நீ சற்று முன்னே அவள்கிட்ட சொன்னதைக்கூட... சொத்தை ஆளும் முதல் வாரிசு அவளுடையதாய் இருக்கணும்னு சொன்னியாமே?"



"உம்... ஆம்மா மாமா."

"நல்ல மனசு. ஆனா என் மனசும் நோகாமல் பார்த்துக் கோங்க."

"என்ன மாமா?"

"பிறக்கிற குட்டிகளுக்கெல்லாம் சமபங்குதான்-முடிவு பண்ணிட்டேன். ஆக என்னைக் காக்க வைக்காமல் பெத்துக் கொடுங்க. அவ்வளவுதான்."

இரு ஜோடிக் கன்னங்களில் நாணம் சிவப்பேறியது.

"இதுவரை, நீ ராகவன் அறையைப் பார்த்ததே இல்லையே வசு... வா வந்து ஏதேனும் மாற்றங்கள் செய்யணுமா என்பது பற்றி இப்போதே சொல்லிவிடு" என்று வற்புறுத்தி இழுத்துப் போனாள் நீரஜா.

விசாலமான கூடம். அதே அளவு பரந்த படுக்கை அறை அதை ஒட்டிய பால்கனி எல்லாம் பழுது சொல்ல முடியாத அழகு. அவங்காரத்துடன் இருந்தன.

"இதில், நான் சொல்ல ஏதுமில்லையே நீரு... வசு முணங்கினாள்."

பதிலைக் காணோமே என்று திரும்பிப் பார்க்கவும் தான் தான் இங்கு தனியே நிற்பதை உணர்ந்தாள்.

பதறித் திரும்ப, வாசலை அடைந்தாற்போல ராகவன் அவனைத் தாண்டி வெளியேறவும் முடியாது.

"ஒரு வழியா உன்னை இங்கு கொண்டு வந்து சேர்த்த நீரஜாவுக்கு நான் ரொம்பவே கடமைப்பட்டவன்" என்றான் குறுஞ்சிரிப்புடன்.

அவன் விழிகள் அவளது அழகை பிரமிப்புடன் பார்த்தன. "பச்சைப் பட்டில் மரகதச் சிலை போல் இருக்கே வசு. அப்பா

என்ன சொன்னார்? அப்போ என்னிடம் ஏதோ மன்னிப்பு கேட்டியே... அதை இப்போ மறுபடி முறையாய் கேட்கணும். எப்படீன்னா..."

நெருங்கி அவன் காலில் விழுந்தாள் வசு.

"ஏய்... என்ன இதெல்லாம்?" இரண்டு எட்டு அவசரமாய் பின்னே வைத்தான்.

"ஆசீர்வாதம்."

"உண்டு. முதல்ல எழுந்திரு..." அவளைத் தூக்க முற்பட்டான். கிடைத்த இடைவெளியில் நழுவி வெளியே ஓடினாள், வசு!

"சபாஷ்... சரியான போட்டி!"

கீழேயிருந்து பார்த்திருந்த நீரஜாவும் சேகரனும் சேர்ந்து கைதட்டி சிரிக்க அந்த வீட்டினுள் கலகலகப்பான மகிழ்வு இறங்கியது, சாரலாய்.

